

සිරී ලංකා

# இலங்கை

## குற்றச் செயலுக்கு உடந்தை கடத்தல்களில் பங்காளியாக அரசு மற்றும் சிறார்களை படையில் சேர்க்கும் கருணா குழு

HUMAN RIGHTS WATCH

ஜனவரி 2007 Volume 19, No 1 (C)

# குற்றச் செயலுக்கு உடந்தை: கடத்தல்களில் பங்காளியாக அரசு மற்றும் சிறார்களை படையில் சேர்க்கும் கருணா குழு


இலங்கை வரைபடம் ........................................ 4

கருணா குழுவின் கடத்தல்க்ள், முகாம்கள் பற்றிய வரைபடம் ........................................ 5

I. சாராம்சம் ........................................ 6
  வழிமுறை ........................................ 15

II. பரிந்துரைகள் ........................................ 17
  கருணா குழுவினருக்கு ........................................ 17
  இலங்கை அரசாங்கத்திற்கு ........................................ 17
  தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு (புலிகள் இயக்கம்) ........................................ 19
  நிதியுதவி வழங்கும் சகல அரசாங்கங்களுக்கு ........................................ 19
  ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு ........................................ 20
  ஐக்கிய நாடுகள் சபையின் சகல அங்கத்துவ நாடுகளுக்கு ........................................ 20

III. பின்னணி ........................................ 21
  2002 மோதல் தவிர்பிலிருந்து நிகழ்ந்த அத்து மீறல்கள் ........................................ 21
  புலிகள் இயக்கத்திலிருந்து கருணாவின் பிளவு ........................................ 22
  2006 - நடுப் பகுதியிலிருந்து அதிகரித்த மோதல்கள் ........................................ 23

IV. கருணா குழுவினால் நடத்தப்பட்ட கடத்தல்களும் ........................................ 26

2006ம் ஆண்டில் கடத்தல்கள் ........................................ 26

கருணா குழுவினரின் கடத்தல்களின் தன்மைகள் .................... 31
குடும்பத் தொடர்புகள் .................... 35
விடுதலை செய்தலும் தப்பியோடுதலும் .................... 35
எண்ணிக்கைகள் .................... 36
பொலீசார் நடவடிக்கை எடுக்காத நிலமை .................... 37

V. உடந்தையாக அரசாங்கமும் உத்தியோகபூர்வ மறுப்புகளும் .................... 40
கிழக்கில் இருக்கும் படையினர் .................... 45
ஐ.நா.வின் கண்டனம் .................... 46
கருணாவின் பதில்கள் .................... 50
விடாது தொடரும் கடத்தல்கள் .................... 53

VI. கருணா குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் மற்றும் .................... 55
சம்பவம் 1 – மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இளைஞனும் ஒரு சிறுவனும், மே .. 55
சம்பவம் 2 – மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 சிறுவர்களும் ஒரு இளைஞனும், ஜூன் 57
சம்பவம் 3 - மட்டக்களப்பு மாவட்டத்தில் பதின்மூன்று சிறுவர்களும் ஒரு இளைஞனும், ஜூன் .................... 63
சம்பவம் 4 – மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒன்றுவிட்ட சகோதரர்கள் இருவர், ஜூன் 69
சம்பவம் 5 – மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 சிறுவர்களும் இளைஞர்களும், செப்டெம்பர் .................... 71
சம்பவம் 6 – மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு சிறுவர்கள், செப்டெம்பர். .......... 73
சம்பவம் 7 - திருகோணமலை நகரில் ஒரு சிறுவன், செப்டெம்பர் .................... 74
சம்பவம் 8 – அம்பாறை மாவட்டத்தில் 12 சிறுவரும் ஒரு இளைஞனும், ஒக்டோபர் 75
சம்பவம் 9 – மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு சிறுவர்களும் ஒரு இளைஞனும், ஒக்டோபர். .................... 76

VII. புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுதல் .................... 77

VIII. சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக .................... 84

IX. சட்டத் தராதரங்கள் .................... 87
சிறார்களைப் படையில் சேர்ப்பதற்கான சர்வதேசத் தடை .................... 87
சிறார்களை படையில் சேர்த்தல் ஒரு யுத்தக் குற்றம் .................... 89
கடத்தல்களும் பலவந்த ஆள் சேர்ப்பும் .................... 90
இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டங்கள் .................... 90

நன்றிகள்........................................................................................... 91

பின்னிணைப்பு I. ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு அனுப்பிய கடிதம். 2006, நவம்பர் 21.... 92

பின்னிணைப்பு II. TMVPக்கு அனுப்பப்பட்ட கடிதம்.......................................... 95


பின்னிணைப்பு III. புலிகள் இயக்கத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம்........................... 97

பின்னிணைப்பு IV. தமிழ்செல்வனிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடிதம்....................... 99

# இலங்கை வரைபடம்


Sri Lanka
PROVINCE
District
National Capital
Province Capital
Town, Village
INDIA
Jaffna
Kilinochchi
NORTHERN
Gulf of Mannar
Bay of Bengal
Trincomalee
Trincomalee
NORTH CENTRAL
Verugal
Vaharai
Valachchenai
Batticaloa
Batticaloa
NORTH WESTERN
EASTERN
CENTRAL
Ampara
Ampara
Colombo
WESTERN
UVA
SABARAGAMUWA
Laccadive Sea
INDIAN OCEAN
SOUTHERN
N
0 25 50 75 km
0 25 50 mi
80°
81°
82°
9°
8°
7°
6°
Source Data: United Nations.
The boundaries and names shown and the designations used on this map do not imply official endorsement or acceptance by the United Nations.

# கருணா குழுவின் கடத்தல்கள், முகாம்கள் பற்றிய வரைபடம்




Karuna Group Abductions and Camps, October 2006

NOTE: LOCATIONS ARE APPROXIMATE

# I. சாராம்சம்

அது நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நான் அதைத் தடுக்க முயற்சித்தேன். ஆனால் கடத்தலாளர்கள் என்னைச் சுட்டுவிடுவதாக பயமுறுத்தினர். எனது மகனோ அழுது கொண்டிருந்தான். எனது மனைவியும் அவர்களைத் தடுக்க முயன்றாள். ஆனால் அவர்கள் அவளை பின்னால் தள்ளிவிட்டார்கள்.

- கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தந்தை, அக்டோபர் 2006

இங்கிருந்து கடத்தப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாய்மார்களே நாங்கள். எமது பிள்ளைகள் அந்த (கருணாவின் அரசியல் கட்சி) காரியாலத்தின் மேல்மாடியில் நிற்பதை நாங்கள் கண்டோம் எங்களை அங்கிருந்து போய்விடும்படியும் அல்லது தாங்கள் அடிக்கப்படுவோம் என்றும் பிள்ளைகள் எமக்கு சைகை மூலம் காண்பித்தார்கள்.

- கடத்தப்பட்ட ஒரு சிறாரின் தாய், அக்டோபர் 2006

நான் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் சொல்லுகிறேன்: இவ்வாறான விடயங்களை நான் விரும்புவதில்லை. சிறார்களை கடத்துவது அல்லது பலவந்தமாக படையில் சேர்ப்பது என்வபற்றை நான் விரும்புவதில்லை.

- கேர்ணல் கருணா என அறியப்பட்ட வி. முரளீதரன் , நவம்பர் 2006

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்து நடைபெறும் சிவில் யுத்தத்தில், பிரிவினைவாத தமிழ் ஆயுதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது (புலிகள் இயக்கம்), சிறார்களை பலவந்தமாக கடத்தி படைகளில் சேர்த்து அவர்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவதை தொடர்ச்சியாகச் செய்து வந்திருக்கிறது. புலிகள் இயக்கமானது தமது பிரதானமான பாரிய தாக்குதல் நடவடிக்கைகளின்போது சிறார்களை ஈடுபடுத்தியுள்ளது. தமது முன்னணி காலாட்படையினராகவும், உளவு மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளாகவும், மருத்துவப் பிரிவு மற்றும் தற்கொலை குண்டு தாரிகளாகவும் அவ்வியக்கம் சிறார்களைப் பாவித்துள்ளது.

தற்போது இலங்கை அரசாங்கமும் தமது மறைமுகப் படையணியாக (proxy force) செயற்படுவோருடன் சம்பந்தப்பட்டு அதே அத்துமீறல் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

2004ம் ஆண்டில் புலிகள் இயக்கத்திலிருந்து தனது படையணிகளுடன் பிரிந்து வந்த முன்னாள் புலிகள் இயக்க மூத்த தளபதியான கேர்ணல் கருணா என அறியப்பட்டவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆயுதப் பிரிவினராகிய கருணா குழுவினரே இந்த செயற்பாட்டின் குற்றவாளிகளாவர். புலிகள் இயக்கத்திற்கு எதிரான தமது பொது மோதலின் காரணமாக இலங்கையின் பாதுகாப்பு படையினர் கருணா குழுவினருடன் தொடர்புபட்டு செயல்படுகிறார்கள் என்று வெளிவந்த அறிக்கைகள், கடந்த வருடத்தில் அதிகரித்திருந்தன.

2006ம் ஆண்டு முழுவதும், அதிலும் குறிப்பாக கடந்த யூன் மாதத்தில் இருந்து கருணா குழுவினர் தீவிரமாக இயங்கும் இலங்கையின் கிழக்கு மாவட்டங்களில் ஆகக் குறைந்தது

200 சிறார்களை பலவந்தமாக கடத்திச் சென்று தமது படையணியில் சேர்த்துக் கொண்டுள்ளனர் – சரியாக அறிக்கையிடப்படா விட்டாலும் உண்மையான எண்ணிக்கை இதைவிட மூன்று மடங்காகும்.

சிறார்கள் மட்டுமே இவர்களால் குறிவைக்கப்படவில்லை. 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட நூற்றுக்கணக்கான இளம் ஆண்களும் கருணா குழுவினரால் பலவந்தமாக கடத்திச் சென்று படையணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். கருணாவின் படையணியின் ஆள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயல் முயற்சியொன்று இருந்ததையே, இக்கடத்தல்கள் நடத்தப்பட்ட முறையும் தீவிர வேகமும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆகக் குறைந்தது யூன் மாதத்தில் இருந்து, அல்லது அதற்கு முன்னர் இருந்தே இலங்கை அரசாங்கமானது இக்கடத்தல்கள் பற்றி அறிந்திருந்தது. இக்கடத்தல்கள் நடைபெற்ற இடங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாடு மிகவும் உறுதியாக இருந்த இடங்கள் என்பதுடன், அப்பகுதியில் மிகப்பெரும் எண்ணிக்கையிலான இராணுவ மற்றும் பொலீசாரின் சோதனைச் சாவடிகளும், இராணுவ முகாம்களும் அமைந்திருக்கின்றன. அரசாங்கத்திற்கு தெரியாமல் அல்லது அரசாங்கத்தின் உபாய ரீதியான ஆதரவு ஏதுமின்றி, அப்பகுதியில் எந்த ஒரு குழுவினரும் இவ்வளவு பெருந் தொகையில் நபர்களைக் கடத்தி வந்து, நிரந்தரமாக கட்டமைக்கப்பட்ட தமது முகாம்களில் வைத்து பயிற்சி அளிப்பதென்பது நடக்கவியலாத காரியமாகும்.

2006ம் ஆண்டு யூன் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமானது (UNICEF), கருணா குழுவினரால் சிறார்கள் பெரும் எண்ணிக்கையில் பலவந்தமாக கடத்தப்படுவதை சுட்டிக்காட்டி, அதனை நிறுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரும் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. 2006ம் ஆண்டு ஜுலை மாதத்தில். தமது பிள்ளைகள் கடத்தப்பட்டமைக்கு கருணா குழுவினரே பொறுப்பு என்பதற்கான விரிவான தகவல்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை 48 தாய்மார் இலங்கை உச்ச நீதிமன்றத்திடம் கையளித்தனர். இப்பட்டியலின் பிரதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், பேரழிவு முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் விவகார அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

2006ம் ஆண்டு முழுவதுமே கருணா குழுவினர், தொடர்சியாக சிறுவர்களையும் இளைஞர்களையும் அவர்களது வீடுகள், கோயில்கள், விளையாட்டு மைதானங்கள், பொது வீதிகள், தற்காலிகமாக இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த முகாம்கள் மற்றும் திருமண வீடுகள் என்பவற்றில் வைத்து கடத்திச் சென்றனர். குறிப்பாக அக்குழுவினர் 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்களையே குறிவைத்ததோடு, அவர்கள் கடத்திய மிக வயது குறைந்த சிறுவனின் வயது 11 என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கருணா குழுவினர் இரு சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒரு பெண்ணைக் கடத்த முயன்றுள்ளமை தெரியவந்துள்ளது. மிகவும் வறுமையான குடும்பங்களையும், ஏற்கனவே புலிகள் இயக்கத்தால் சிறார்கள் பலவந்தமாக கடத்தப்பட்ட குடும்பங்களையுமே இவர்களும் குறி வைத்துள்ளனர்.



கருணா குழுவினரால் கடத்தப்பட்ட தனது மகனின் அடையாள அட்டையை ஏந்தியிருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தாய்
© 2006 Oliver Bercault/மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, மனிதாபிமான அமைப்புக்கள், மனித உரிமைக் குழுக்கள், கடத்தப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் கண்ணால் கண்ட சாட்சிகள் எனப் பலரையும் சந்தித்து நிகழ்திய நேர்காணல்கள் மூலம், கிழக்கு மாவட்டங்களான மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கருணா குழுவினரால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் 20 கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக தகவல் அறியும் விசாரணைகளை மேற்கொண்டது. அவ்வாறு கடத்தப்பட்டவர்களில் 11 பேர் சிறார்களும் 9 பேர் வளர்ந்தோருமாவர். தமது பிள்ளைகளும் இளைஞர்களும் யாரால் கடத்தப்பட்டார்கள் என்பதைக் பல பெற்றோர்கள் கண்டுள்ளதோடு, கடத்தல்களை தடுத்து நிறுத்த தாம் மேற்கொண்ட முயற்சிகள் முதல், தமது பிள்ளைகளை திரும்பப் பெறுவதற்காக கருணா குழுவினரின் அரசியல் காரியாலயங்களுக்கு தாங்கள் சென்றது வரையான விபரங்களை உறவினர்களும் கண்ணால் கண்ட சாட்சிகளும், மிக உறுதியானதும் தெளிவானதுமான வாக்குமூலங்களாக எம்மிடம் தெரிவித்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட சம்பவத்தில், இலங்கை இராணுவத்தினர் 7 இளம் ஆண்களை ஒரு குறிப்பிட்ட வெளியில் வைத்து அவர்களின் அடையாள அட்டைகளைப் பரிசீலனை செய்ததோடு அவர்களை புகைப்படமும் எடுத்தனர். அன்றிரவு கருணா குழுவின் அங்கத்தவர்கள் சிலர் வந்து இந்த 7 பேரில் 4பேரை கடத்திச் சென்றனர். ஆனாலும் இக்குறிப்பிட்ட கடத்தல் சம்பவத்தில் இராணுவத்தினர் வேண்டுமென்றே ஒத்தாசையாக செயற்பட்டார்களா என்பது இன்னும் தெளிவில்லாமலே இருக்கின்றது. அதே தினம் இன்னுமொரு கிராமத்தில் சிறுவர்களும் இளைஞர்களும் அடங்கிய 13பேரை கருணா குழுவினர் கடத்திச் சென்றதோடு, அவர்களில் சிலரை கடையொன்றுக்குள் சற்றுநேரம் தடுத்தும் வைத்துள்ளனர். அங்கு தெருவின் மறுபுறமாக ஒரு இராணுவ சோதனைச் சாவடி அமைந்திருந்ததோடு சில பெற்றோர்கள் இராணுவத்தினரிடம் அதில் தலையிட்டு கடத்தலைத் தடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். இரு இராணுவத்தினர் கருணா குழுவின்

அங்கத்தவர்களோடு பேசினர். ஆனால் இராணுவத்தினர் அக்கடத்தலைத் தடுக்கவில்லை, என அப்பெற்றோர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினர்.

சிறுவர்களையும் இளைஞர்களையும் கடத்திச் செல்லும் கருணா குழுவினர், பெரும்பாலும் அவர்களை அருகாமையில் இருக்கும் தமது அரசியல் (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அல்லது TMVP) காரியாலயத்தில் தற்காலிகமாக தடுத்த வைத்திருப்பார்கள். இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் காரியாலயங்களோடு ஒப்பிடுகையில், அவர்களின் காரியாலயங்களுக்கு பெரும்பாலும் இலங்கை இராணுவத்தினரால் அல்லது பொலீசாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றன. கடத்தப்பட்டதற்கு மறுநாள் தமது பிள்ளைகள் அக்காரியாலயங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அல்லது அவர்கள் அங்கு இருந்ததாக TMVP அங்கத்தவர்கள் தம்மிடம் உறுதிப்படுத்தியதாகவும், பல அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்கள்.

சில நாட்களின் பின்பு, அவ்வாறு கடத்தப்பட்ட சிறார்கள் மற்றும் இளைஞர்களை கருணா குழுவினர், மட்டக்களப்பு நகரத்தில் இருந்து 50 கிலோமீற்றர் வடகிழக்கே பொலன்நறுவை மாவட்டத்தில் வெலிகந்தை என்னும் இடத்தில் அமைந்துள்ள தமது முகாமிற்கு மாற்றி விடுகின்றனர். இந்த வெலிகந்தை என்னும் இடத்திலேயே பிரிகேடியர் தயா இரட்நாயக்காவின் ஆணையின் கீழ் இயங்கும் இலங்கை இராணுவத்தின் 23வது டிவிஷனின் தளமுகாம் அமைந்திருக்கிறது.

கருணாவின் முகாம்களுக்குச் சென்ற பெற்றோர்களினதும், மற்றும் அப்பிரதேசம் தொடர்பாக பரிச்சயமுள்ள மனிதாபிமான அமைப்புக்களினதும் கருத்துப்படி வெலிகந்தைக்கு மேற்கே 10 கிலோ மீற்றர் தொலைவில் கருணா குழுவினரின் 4 முகாம்கள் அமைந்திருக்கின்றன. வெலிகந்தையில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு செல்லும் A11 என்னும் பிரதன பாதை அங்கிருப்பதால் அப்பிரதேசம் இலங்கை அரசாங்கத்தின் பலமான கட்டுப்பாட்டுக்குள்ளேயே அமைந்திருக்கிறது. கடந்த வருடத்தில் கடத்தப்பட்ட சில நூற்றுக்கணக்கான இளைஞர்களை கருணாவின் முகாம்களுக்கு கொண்டு செல்வதென்பது, அரசாங்கப் படையினரின் ஒத்தாசையின்றி செய்யப்பட முடியாததாகும். அத்துடன் அப்பிரதேசத்துக்கூடாக பயணிக்கும்போது பல அரச இராணுவ மற்றும் பொலீஸ் சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்வதும் அவசியமானதாகும். 2006, அக்டோபர் 13ம் திகதி, மட்டக்களப்பில் இருந்து வெலிகந்தை வரையான சுமார் 50 கி.மீ தூரத்தை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் வாகனத்தில் பயணித்தபோது, வாகனச் சோதனை சாவடிகள் முதல் நிரந்தர முகாம்கள் 14 வரை அங்கு இருந்ததை ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

தமக்கிடையே எந்த விதமான தொடர்புபட்ட செற்பாடுகளும் இல்லை என்று கருணா குழுவினரும் அரசாங்கமும் தொடர்சியாக மறுத்து வருகின்றனர். இலங்கை அரசாங்க பாதுகாப்பு பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல கருணா குழுவினர் தொடர்பாக குறிப்பிடும்போது, "அவர்களுடன் எமக்கு எந்த விதமான தொடர்புகளும் இல்லை என்பதை தொடர்சியாக மறுத்து வருகிறேன்." என்று எம்மிடம் தெரிவித்தார்.[1] "நாம் அரசாங்க இராணுவத்தினரோடு இணைந்து செயற்படுவதில்லை. இராணுவம் எம்மோடு இணைந்து இயங்குவதுமில்லை". என்று 2006 நவம்பரில், மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கருணா உறுதியாக தெரிவித்தார்.[2]

---

[1] "இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தில் நூற்றுக் கணக்கானவர்களை ஆயுதக் குழுவினர் கடத்திச் செல்வதை அரசாங்கம் மறுக்கிறது" Anthony Deutsch, அசோசியேட்டட் பிரஸ், 2006, அக்டோபர் 4.

[2] கேர்ணல் கருணா என அறியப்பட்ட வி.முரளீதரனுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி மூலம் நிகழ்திய நேர்காணல், 2006, நவம்பர் 29.

ஆனால் கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களைப் பொறுத்தவரை கருணா குழுவினரின் கடத்தல் செயற்பாடுகளுக்கு இராணுவத்தினர் உடந்தையாக இருப்பது என்பது வெளிப்படையான உண்மையாகவே இருந்தது. இராணுவத்தினர் மற்றும் பொலீஸ் சோதனைச் சாவடிகளில் அடையாள அட்டைகளைப் பரிசோதித்தல் போன்ற நடவடிக்கைகளில் கருணா குழுவின் அங்கத்தவர்கள் பணியாற்றுவதை தாம் கண்டதாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லீம் மக்கள் தெரிவிப்பதுடன், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் கருணா குழுவின் அங்கத்தவர்கள் சுதந்திரமாக ஆயுதங்களோடு உலவுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தாங்கள் கருணா குழுவினரின் முகாம்களுக்கு செல்லும் வழியில் இராணுவத்தினர் தம்மை வழிமறித்ததாக, கடத்தப்பட்ட பல சிறுவர்களின் பெற்றோர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினரிடம் தெரிவித்தனர். அப்பெற்றோர்கள் தமது பெயர்களை இராணுவத்தினரிடம் கொடுக்க, இராணுவத்தினர் அவர்களின் பெயர்களை கருணா குழுவினருக்கு அறிவித்து, அப்பெற்றோர்கள் அங்கு வருவதாக தெரிவித்தார்கள். கடத்தப்பட்ட பிள்ளைகளைப் பார்க்கச் சென்றவர்களுடன், தனது 16 வயதுடைய மகனைப் பார்க்கச் சென்ற ஒரு தாய் எம்மிடம் கூறும்போது, “எமது குழுவுக்கு தலைமை வகித்துச் சென்றவர் எமது பிள்ளைகளின் பெயர்களையும், நாம் செல்ல வேண்டிய முகாமின் பெயரையும் அந்த சோதனைச் சாவடியில் நின்ற இராணுவ அதிகாரியிடம் கொடுத்தோம்” என்றார்.[3] இன்னுமொரு சந்தர்ப்பத்தில், தமது கடத்தப்பட்ட பிள்ளைகளை கருணா குழுவினரின் முகாமில் வைத்து பார்வையிட முயற்சித்த பொழுது அங்கும் இலங்கை அரசாங்க இராணுவத்தினர் அத்தாய்மாருடன் கதைத்துள்ளனர். கடத்தப்பட்ட 18 வயதான ஒருவரின் தாயார் எம்மிடம் கூறும்போது, அவர்கள் அங்கு இருப்பதும், தாங்கள் அங்கு வந்திருப்பதன் காரணமும் அந்த இராணுவத்தினருக்கு நன்கு தெரிந்தே இருந்தது, ஆனால் எமது பிள்ளைகளை விடுவிப்பதற்காக அவர்கள் எதையுமே செய்ய முயலவில்லை, என்றும் கூறினார்.

[3] மட்டக்களப்பு மாவட்டத்தில் கடத்தப்பட்ட ஒரு பையனின் தாயுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நிகழ்திய நேர்காணல். 2006, அக்டோபர்.




மட்டக்களப்புக்கு தெற்கே செல்லும் A4 வீதியில் அமைந்துள்ள பொலீஸ் சோதனைச் சாவடியை அடையாளப்படுத்தும் அறிவிப்பு பலகை. கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதான வீதிகளில் இராணுவ மற்றும் பொலீஸ் சோதனைச் சாவடிகள் எங்கும் நிறைந்து காணப்படுகின்றன. © 2006 Fred Abrahams/ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு.

கிழக்கு மாவட்டங்களில் பணியாற்றும் சர்வதேச நிவாரண அமைப்புகளைப் பொறுத்தவரையும்கூட இராணுவத்தின் தொடர்பு பற்றி மிகத் தெளிவான கருத்தே நிலவுகின்றது. "படையணிக்கு ஆள் சேர்ப்பதென்பது வெளிப்படையாகவும் சட்டங்களுக்கு அஞ்சாமலும் நடத்தப்படுகின்றது." என்று ஒரு சர்வதேச நிவாரண அமைப்பின் பணியாளர் கூறினார். "ஆனால் அங்கு என்ன நடக்கின்றது என தமக்கு எதுவுமே தெரியாது என்று அரசாங்கம் சொல்லுவதைத்தான் எம்மால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது". கருணா குழுவினரை தொடர்பு கொள்ளுவதற்கு தமக்கிருக்கும் மிக இலகுவான வழி இலங்கை இராணுவத்திற்கு ஊடாகத்தான், என்று சர்வதேச ஸ்தாபனமொன்றைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர்.

இளைஞர்களும் சிறுவர்களும் கடத்தப்பட்டமை தொடர்பாக பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகள் பற்றி அதிக அக்கறையுடன் விசாரணைகளை மேற்கொள்வதில் விருப்பம் காட்டாமல் இருப்பதன் மூலம் பொலீசாரும் இக்குற்றச் செயலில் பங்காளிகளாகின்றனர் என்றே சொல்ல வேண்டும். சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகளை பதிவு செய்வதற்குகூட பொலீசார் மறுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. வேறு சில சந்தர்ப்பங்களில் பொலீசார் முறைப்பாடுகளை பதிவு செய்தாலும் பெற்றோர் விரும்பியபடி அக்கறையுடன் முறையான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு சிறாரையேனும் விடுவிக்கும் பணியில் பொலீசார் ஈடுபட்டதாக தெரியவில்லை. கடத்தப்பட்ட தமது பிள்ளைகளை விடுவிப்பதற்கு பயனுள்ள வகையில் பொலீசார் காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள மாட்டாகள் என்ற சந்தேகத்தினாலோ அல்லது அச்சத்தினாலோ சில குடும்பங்கள் இக்கடத்தல்கள் தொடர்பாக பொலீசாரிடம் முறைப்பாடு செய்யவில்லை. "நான் இப்போது உங்களுடன்

கதைக்கிறேன் என்று தெரிய வந்தாலே TMVPயினர் இரவு வந்து என்னைச் சுடுவார்கள்." என்று, கடத்தப்பட்ட 18 வயது இளைஞன் ஒருவனின் சிறியதாயார் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்.[4]

இது தொடர்பாக தாம் ஏதாவது நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதி கூறியிருந்தது. கருணா குழுவினர் சிறார்களை பலவந்தமாக கடத்தி படைகளில் சேர்த்துக் கொள்ளுகிற விடயம் தொடர்பான குற்றச்சாட்டினை முன்வைத்து, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் நலன் தொடர்பான ஐ.நா. சபையின் விசேட ஆலோசகர் அலென் ரொக் 2006 நவம்பரில் அறிக்கையொன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து, இக்குற்றச் செயலுக்கு இராணுவத்தினரோ அல்லது பொலீசாரோ உடந்தையாக இருக்கிறார்களா என்பதைக் கண்டறிய உடனடியாக விசாரணையொன்றை நடத்த தான் உத்தரவிடுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதி கூறினார். ஐ.நா. விசேட ஆலோசகரின் கருத்துப்படி. சட்டத்தை மீறியவர்கள் தொடர்பாக பொறுப்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்[5].

ஆனால் இச்சகல உறுதி கூறல்கள் மத்தியிலும், கடந்த ஆறு மாத காலமாக கடத்தல்கள் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கடுமையான குற்றச்சாட்டுகள் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பது இன்னமும் தெளிவின்றி இருக்கின்றது. 48 கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக ஜூலை மாதத்தில் பெற்றோர்கள் வழங்கிய முறைப்பாடுகள் தொடர்பாக டிசம்பர் மாதத்தில் இராணுவத்தினர் விசாரணைகளை ஆரம்பித்ததாக கூறப்படுகிறது. எவ்வாறாயினும் உள்ளூர் மனித உரிமை குழுக்களின் கருத்துப்படி, இக்குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர்களை "இனந்தெரியாத ஆயுதக் குழுவினர்" என்றே குடும்பத்தினர் இனங்காட்ட வேண்டும் என அவர்கள் மீது இராணுவத்தினர் அழுத்தமிட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை எவ்வாறு அரசாங்கம் நடத்தப் போகின்றது என்பதை அறிவதற்காக நவம்பர் 21ம்திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியது, (பார்க்க பின்னிணைப்பு 1). 2007, ஜனவரி 17ம் திகதி வரையிலும் அதற்கு ஜனாதிபதி காரியாலயம் பதிலளிக்கவில்லை. கிழக்கில் நடைபெறும் சிறார்கள் கடத்தல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும்படி அண்மையில் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக டிசம்பர் 1ம் திகதி, மனித உரிமைகள் மற்றும் பேரழிவு முகாமைத்துவ விவகாரங்கள் அமைச்சர், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். ஆனால் அம்முறைப்பாடுகள் தொடர்பாக பொலீசார் அதிக அக்கறை காட்டியதற்கான எந்த சாட்சியங்களும் ஜனவரி 15ம் திகதி வரை கிடைக்கவில்லை.

தமது குழுவினர் சிறார்களைக் கடத்தி பலவந்தமாக படையணியில் சேர்ப்பது தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் வைத்த குற்றச்சாட்டுக்களை கருணா மறுத்துள்ளார். தமது படையணிகளில் 20 வயதிற்கு குறைந்த அங்கத்தவர்கள் எவருமே இல்லை என்றும், வயது குறைந்த சிறார்களை சேர்க்க முயலும் எந்தவொரு தளபதிக்கு எதிராகவும் தாங்கள் ஒழுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார். அதேவேளை, சிறார்களை பாதுகாப்பதற்கு தாம் UNICEF அமைப்பிற்கு ஒத்தாசை வழங்குவதாகவும், தமது முகாம்களுக்கு வந்து அங்கு சிறார்கள் காணப்பட்டால் அவர்களை விடுதலை செய்யும் விடயத்திலும் தாம் ஒத்தாசை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதி கூறினார்.

---

[4] கடத்தப்பட்ட இளைஞனொருவனின் சிறியதாயார், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். அக்டோபர், 2006.

[5] ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் நலன் தொடர்பான ஐ.நா. சபையின் விசேட ஆலோசகர் அலன் ரொக் அவர்களின் அறிக்கை. http://www.un.org/children/conflict/pr/2006/-11-13statementfromthe127.html (ஜனவரி 9. 2007, வெளியிடப்பட்டது)

தமது அமைப்பின் இராணுவப் பிரிவினருக்கு வழங்கியுள்ளதாக கூறி, TMVP யினர் 2007, ஜனவரி 2ம் திகதி, UNICEF அமைப்பிடம் காண்பித்த ஒழுங்கு விதிகளில், தமது படையணிக்கு நபர்களை சேர்த்துக்கொள்ளும் ஆகக் குறைந்த வயதெல்லை 18 என்று குறிப்பிடப் பட்டுள்ளதோடு, சிறார்களை பலவந்தமாக பிடிப்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளும் குறிப்பாக விளக்கப்பட்டிருந்தன (பார்க்க பின்னிணைப்பு V).

இவ்வெல்லா உறுதியளிப்புகளுக்கும் முரணான விதத்தில், கருணா குழுவினரால் கிழக்கு மாவட்டங்களில் சிறார்களும் இளைஞர்களும் கடத்திச் செல்லப்படும் செயற்பாடு நிகழ்ந்த வண்ணமே உள்ளது. கடத்தப்பட்டவர்களின் முழுமையான எண்ணிக்கை பற்றிய தகவல்கள் இல்லாவிட்டாலும், சர்வதேச அமைப்புக்களின் அறிக்கைகளின்படி 2006 நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் கருணா குழுவினரால் சிறார்களும் இளைஞர்களும் கடத்தப்படும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. UNICEF இன் கருத்துப்படி. அதேகாலத்தில் கருணா குழுவினர் 6 சிறார்களை விடுதலை செய்துமுள்ளனர்.[6]

2002ம் ஆண்டு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்தே, புலிகள் இயக்கமானது கடத்தல்கள் உட்பட பல்வேறு வழிகளில் தொடர்ச்சியாக சிறார்களை பலவந்தமாக தனது படைகளில் சேர்த்துக் கொண்டது. மிக அண்மையிலும் டிசம்பர் 18ம்திகதி புலிகள் இயக்கத்தினர் அம்பாறை மாவட்டத்தில் 23 ஆண் - பெண் பிள்ளைகளையும் 2 ஆசிரியர்களையும் கடத்திச் சென்றனர். உள்ளூர் மக்கள் பலமாக குரல் கொடுத்ததன் காரணமாக, அது தவறுதலாக நடந்துவிட்டது என்று கூறி, அச்சிறார்களை இராணுவப் பாணியில் தலைமயிர்கள் ஒட்ட வெட்டப்பட்ட நிலையில் மறுநாள் விடுதலை செய்தனர். புலிகள் இயக்கத்தின் பேச்சாளரின் கருத்துப்படி, இச்சம்பவத்திற்கு பொறுப்பான அங்கத்தவருக்கு, பகிரங்கப்படுத்த விரும்பாத ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.[7]

இலங்கைச் சட்டத்தின்படி, பலவந்தமாகவோ அல்லது கட்டாய ஆட்சேர்ப்பு மூலமாகவோ சிறார்களை படையணிகளில் சேர்ப்பதென்பது, 20 வருடங்கள் சிறைத்தண்டனை பெறக்கூடிய குற்றச் செயலாகும். இதற்கும் மேலாக, சிறார்களை பலவந்தமாக படைகளில் சேர்த்து அவர்களை மோதல்களில் ஈடுபடுத்துவதன் மூலமும் வயது வத்தவர்களை பலவந்தமாக படைகளில் சேர்ப்பதன் மூலமும் புலிகள் இயக்கமும் கருணா குழுவினரும் சர்வதேச சட்டங்களை (யுத்த சட்ட விதிகள்) மீறிவருகின்றனர். கருணா குழுவினர் சிறார்களை பலவந்தமாக பிடிக்கும் நடவடிக்கைக்கு அவசியமான வசதிகளை செய்து கொடுப்பதன் மூலமும், அவற்றைத் தடுப்பதற்கும், கடத்தப்பட்ட சிறார்களையும் வயதுவந்தவர்களையும் விடுதலை செய்வதற்கும் எந்தவிதமான பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுக்காதிருப்பதன் மூலமும் இலங்கை அரசாங்கமும் சர்வதேச சட்டங்களை மீறி வருகின்றது. 15 வயதிற்கு குறைந்தவர்களை பலவந்தமாக ஆயுதக் குழுக்களில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடும் தனிநபர்கள், தற்போது நடைமுறையில உள்ள சர்வதேச சட்டத்தின்படி யுத்தக் குற்றம் இளைத்தவர்கள் என்னும் அடிப்படையில் அக்குற்றங்களுக்கு பொறுப்பானவர்களாவர்.

இலங்கையில் ஆயுத மோதலில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசாங்கம், புலிகள் இயக்கம் மற்றும் கருணா குழுவினர் ஆகிய சகல தரப்பினரும், தமது படைகளில் சிறார்களைப் பலவந்தமாக சேர்தல் உட்பட சகலவிதமான பலாத்கார ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளில்

---

[6] UNICEF அமைப்பினால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு 2007, ஜனவரி 12ல் புள்ளிவிபரங்கள் வழங்கப்பட்டன.

[7] புலிகள் இயக்கத்தின் பத்திரிகை அறிக்கை, "பிரச்சார ஆயுதமாக்கப்படும் சிறுவர் உரிமைகளின் துரதிஷ்ட நிலைமை" டிசம்பர் 22, 2006 மற்றும் " 'தவறுதலான' கடத்தல் நாடகத்தின் பின்னர் புலிகள் இயக்கத்தினர் 23 சிறார்களை விடுவித்தனர்". Agence France – Press, டிசம்பர் 19, 2006

ஈடுபடுவதை உடனடியாக நிறுத்தும்படி இவ்வறிக்கை கோரிக்கை விடுக்கிறது. இலங்கை அரசாங்கமானது உடனடியாக பூரண விசாரணைகளை மேற்கொண்டு இப்பலவந்த ஆட்சேர்ப்புக்கு ஒத்தாசையாக இருக்கும் இலங்கை பாதுகாப்பு படையைச் சேர்ந்த நபர்களை அவர்களின் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

புலிகள் இயக்கமும், கருணா குழுவினரும் தமது படையணிகளில் சிறார்களை சேர்த்துக் கொள்வதை நிறுத்த வேண்டும் என்று, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் அனைத்தும், அவர்கள் மீது அழுத்தங்களை இடவேண்டும் என்றும் - கருணா குழுவினால் மேற்கொள்ளப்படும் சிறார்களைக் கடத்தி படையில் சேர்க்கும் நடவடிக்கையை தடுப்பதற்கு இலங்கை அரசாங்கமானது காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அதன் மீது அழுத்தங்களை இடவேண்டும் என்று - இவ்வறிக்கையானது சம்பந்தப்பட்ட நாடுகளிடம் அவசர கோரிக்கையினை விடுகின்றது. கருணா குழுவினரால் பலவந்தமாக கடத்தப்பட்ட சிறார்கள் மற்றும் நபர்கள் அனைவரும் உடனடியாக UNICEF அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படல் வேண்டும் என்று நிதி வழங்கும் நாடுகள் அனைத்தும் வலியுறுத்த வேண்டும்.

சிறார்களை பலவந்தமாக படையணிகளில் சேர்த்து அவர்களை படையினராக பாவிப்பதை தொடர்ச்சியாவே நிறுத்தத் தவறும் புலிகள் இயக்கத்தின் செற்பாடு காரணமாக, ஐ.நா. பாதுகாப்புச் சபையானது அவ்வியக்கத்தின் மீது குறிபாக இலக்கு வைத்து நடவடிக்கைகளை (targeted measures) அமுல்ப் படுத்த வேண்டும் என்று இவ்வறிக்கையானது வேண்டுகோள் விடுக்கிறது. ஐ.நா. பாதுகாப்புச் சபையானது அதன் (2004) 1539வது அதன் தீர்மானத்தின்படி, ஆயுத மோதல்களில் ஈடுபட்டுள்ள தரப்பினர், சிறார்களைப் படைகளில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டுவருதல், அல்லது அது தொடர்பாக ஏற்றுக் கொண்ட வேலைத் திட்டங்களுக்கு அனுகூலமாக நடக்கத் தவறும் பட்சத்தில், அத்தரப்பினருக்கு எதிராக குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தொடர்பாக கவனத்திற்கு எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறது. சிறார்களை படைகளில் சேர்ப்பதை நிறுத்துவது பற்றி தாம் ஏற்றுக்கொண்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக புலிகள் இயக்கமானது மீண்டும் மீண்டும் தவறியிருப்பதோடு, இது தொடர்பாக 2003ம் ஆண்டில் அரசாங்கத்தோடு இணக்கப்பாடு கண்ட வேலைத்திட்டத்தில் அடங்கிய விடயங்களையும் நடைமுறைப்படுத்த தவறியிருக்கிறது. சர்வதேச சட்டங்களை மீறுகின்ற இவ்விடயமானது ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் பாதுகாப்புச் சபைக்கு அடுத்தடுத்து வழங்கப்பட்ட நான்கு அறிக்கைகளிலும் தொடாச்சியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறார்களும் ஆயுத மோதல்களும் தொடர்பாக மிக அண்மையில், 2006 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் முதல் தடவையாக கருணா குழுவினர் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக செயலாளர் நாயகம் இனம் காட்டியுள்ளார். 1539ம் தீர்மானத்திற்கு இணங்க, கருணா குழுவினர் சகல விதமான ஆட்சேர்ப்பு மற்றும் சிறார்களை படையினராக பயன்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடைமுறை செயல் திட்டமொன்றை தயாரித்து, அதனை அமுல்படுத்தல் வேண்டும் என்று, பாதுகாப்புச் சபை அவர்களை வலியுறுத்த வேண்டும். கருணா குழுவினர் அதனைச் செய்ய தவறும் பட்சத்தில், சிறார்களும் ஆயுத மோதல்களும் தொடர்பான அடுத்த அறிக்கை செயலாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப் பெற்றதும், பாதுகாப்புச் சபையானது கருணா குழுவினர் மீது குறிப்பாக இலக்குவைத்து (targeted measures) மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

2006ம் ஆண்டு முதல் மீண்டும் இலங்கையில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதானது, புலிகள் இயக்கம் தொடர்ந்தும் சிறார்களை படையினராக பாவிக்கும் செயற்பாட்டுக்கு மேலும் எண்ணெய் வார்த்திருப்பதோடு அதே நடைமுறையை கருணா குழுவினரும் பின்பற்றுவதற்கு வழி வகுத்திருக்கிறது. இந்நிலமையை உடனடியாக நிறுத்துவதற்கு மிகவும் காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ள படாதவிடத்து, மிகவிரைவில் தொடர்ந்தும் மோதல்கள் நிகழுவதற்கான வாயப்புக்கள் தென்படுகின்றமையும், சர்வதேச சட்டங்கள் இருந்தும் சட்டவிரோதமாக சிறார்களை படையினராக பாவிக்கும் நிலைமை நிலவுவதும், இன்னும் அதிகளவில் சிறார்கள் போராளிகளாக சேர்க்கப்படுவதற்கான அழுத்தத்தை அங்கு தொடர்ந்தும் பேணுவதற்கே வாய்புக்கள் இருக்கின்றன.

## வழிமுறை

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, உலகம் முழுவதும் அரசாங்கங்கள் மற்றும் அரசு அல்லாத ஆயுதக் குழுக்கள் சிறார்களை ஆயுதப் படைகளில் சேர்த்து அவர்களை படையினராக பாவிக்கும் நடைமுறை தொடர்பாக மிகவும் விரிவான பதினைந்துக்கு மேற்பட்ட அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இதற்கு முன்னர் அங்கோலா, பர்மா, புரூண்டி, கம்போடியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, லெபனான், லைபீரியா, ருவாண்டா, சியெரா லியோன், சூடான், மற்றும் உகண்டா ஆகிய நாடுகள் தொடர்பாக நாம் அறிக்கைகளை வெளியிட்டுள்ளோம். இலங்கையில் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் இதற்கு முன்னைய அறிக்கையான, “அச்சத்திற்குள் வாழ்தல்: இலங்கையில் புலிகள் இயக்கமும் சிறார் படையினரும்,” 2004ல் வெளியிடப்பட்டது.

தற்போதைய இந்த அறிக்கையானது 2006ம் ஆண்டில் ஒருமாத காலமாக இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வுப் பணியினை அடிப்படையாகக் கொண்டே வெளியிடப்படுகிறது. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கடத்தப்பட்ட சிறுவர்கள், இளைஞர்களின் 20 குடும்பங்களுடனும் (16 தாய்மார், 4தந்தையர், 2 சகோதரிகள், ஒரு பாட்டி மற்றும் ஒரு சிறியதாயார்), கண்ணால் கண்ட சாட்சிகளுடனும் நிகழ்திய 24 நேர்காணல்களில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களையே இவ்வறிக்கை முன்வைக்கின்றது. அதற்கு மேலதிகமாக, இலங்கையில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், மனிதாபிமான நிவாரணப் பணியாளர்கள் மற்றும் அங்கு மனிதாபிமான உதவி ஸ்தாபனங்களில் பணியாற்றும் வெளிநாட்டுப் பிரஜைகளுடனும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு உரையாடியது.

பாதுகாப்பு காரணங்கள் கருதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் பேசிய பலரும் தமது பெயரோ அல்லது தம்மை அடையாளம் காணக்கூடிய விடயங்களோ இந்த அறிக்கையில் வெளியிடப்படக் கூடாது என்கின்ற நிபந்தனையுடனேயே கதைத்தனர். எனவே அத்தனிநபர்களை ஆபத்தில் தள்ளிவிடக்கூடும் என்று கருதிய விடயங்களையும் சம்பவங்களையும் நாம் இந்த அறிக்கையில் தவிர்த்துள்ளோம்.

கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் சிறார்களைக் கடத்தும் செயற்பாடு பற்றி விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பாக அரசாங்கத்தின் முயற்சிகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறிவதற்காக, 2006, நவம்பர் 21ம்திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், மனித உரிமைகள் மற்றும் பேரழிவு முகாமைத்துவ விவகாரங்கள் அமைச்சருக்கும் கடிதமொன்றை எழுதியது (பார்க்க பின்னிணைப்பு I). அதன் தொடர்சிக் கடிதமொன்றும் டிசம்பர் முதல் பகுதியில் அனுப்பி

வைக்கப்பட்டது. ஆனால் 2007, ஜனவரி 15ம் திகதி வரையிலும் ஜனாதிபதி காரியாலயமோ, அமைச்சோ அதற்கு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

நவம்பர் 22ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது கடத்தல்கள் மற்றும் பலவந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக கேர்ணல் கருணா என அறியப்பட்ட வி.முரளீதரனுக்கு கடிதமொன்றை அனுப்பியது (பார்க்க பின்னிணைப்பு II). நவம்பர் 29ம் திகதி வி.முரளீதரன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார், அவரின் கருத்துக்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

நவம்பர் 28ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, சிறார்களைப் படைகளில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டு வருவதற்கான புலிகள் இயக்கத்தின் முயற்சிகள் பற்றி கேட்பதற்காக. அவ்வமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்செல்வனுக்கு கடிதமொன்றை அனுப்பியது. (பார்க்க பின்னிணைப்பு III). அதற்கு சு.ப.தமிழ்செல்வன் 2006, டிசம்பர் 5ம் திகதி கடிதம் மூலம் பதிலளித்தார் (பார்க்க பின்னிணைப்பு IV).

இவ்வறிக்கையில் காணப்படும் "சிறார்" மற்றும் "சிறார்கள்" என்ற சொற்பதங்கள், சர்வதேச சட்ட வழக்கப்படி 18 வயதிற்கு குறைந்த நபர்களையே குறிக்கின்றது.

# II. பரிந்துரைகள்

## கருணா குழுவினருக்கு

- கடத்தல்கள் அல்லது வேறு விதத்தில் ஆட்சேர்ப்புக்கு வகைசெய்யக்கூடிய பலவந்தப் படுத்தல்கள் மற்றும் சுயவிருப்பின் பேரில் வந்து சேருதல் போன்றவற்றின் மூலம் நடத்தப்படும் சிறார்களைப் படையில் சேர்க்கும் சகல நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.
- எவரையும் பலாத்காரமாக படையில் சேர்த்துக்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துதல் வேண்டும்.
- சிறார்களை மோதல் நடவடிக்கைகளில் பயன்படுத்தும் செயற்பாடுகளை உடன் நிறுத்துதல் வேண்டும்.
- கருணா படையணிக்கென்று பலாத்காரமாக சேர்த்த சிறார்கள் உட்பட சகலரையும் உடனடியாக விடுவிப்பதுடன், அவர்களை பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கும் பணியை மேற்கொள்ள UNICEF உடன் ஒத்துழைக்க வேண்டும்.
- கருணா குழுவிலுள்ள தளபதிகள் மற்றும் ஏனைய அங்கத்தவர்கள் எவரும் கருணா படையணிக்கு சிறார்களை சேர்க்காமல் இருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் கருணா குழுவின் அங்கத்தவர்கள் மீது எடுக்கும் ஒழுக்க நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை சர்வதேச சமூகத்தினருக்கு (UNICEF அல்லது மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிர் காரியாலயம் OHCHR ஊடாக) கிடைக்க வகைசெய்ய வேண்டும்.
- கருணா குழுவிலுள்ள தளபதிகள் மற்றும் ஏனைய அங்கத்தவர்கள் எவரும் கருணா படையணிக்கு எந்த ஒரு நபரையும் பலவந்தமாக சேர்க்காமல் இருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் கருணா குழுவின் அங்கத்தவர்கள் மீது எடுக்கும் ஒழுக்க நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை சர்வதேச சமூகத்தினருக்கு (UNICEF அல்லது மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிர் காரியாலயம் OHCHR ஊடாக) கிடைக்க வகைசெய்ய வேண்டும்.
- சிறார்களை படைகளில் சேர்ப்பதில்லை என்கின்ற கருணா குழுவினரின் கொள்கையினை சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் அச்சிட்டு, கருணா குழு அதிகமாக இயங்குகின்ற பகுதிகளில் பரவலாக விநியோகிக்க வேண்டும்.
- SLMM, UNICEF ஆகிய சர்வதேச மற்றும் உள்ளூர் பாதுகாப்பு முகவர் அமைப்புக்கள் (protection agencies) கருணா குழுவினரின் இராணுவ மற்றும் ஏனைய முகாம்களுக்கு சென்று, அங்குள்ள சிறார்களை இனம்கண்டு, அவர்களை விடுவிப்பதற்கு வகைசெய்ய இடமளிக்க வேண்டும்.

## இலங்கை அரசாங்கத்திற்கு

- கருணா குழுவினர் மேற்கொள்ளும் கடத்தல் மற்றும் சிறார்களை படைகளில் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு வழங்கும் சகலவித ஒத்தாசைகளையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.
- கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் மற்றும் சிறார்களை படைகளில் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளோடு அரச இராணுவத்திற்கு உள்ள தொடர்புகள் பற்றி உடனடியான விசாரணைகளை முடுக்கிவிட்டு, அந்நபர்கள் மீது

அவர்களின் தராதரம் பாராது பொறுப்புச் சொல்லத்தக்க வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- கருணா குழுவினரால் பலவந்தமாகக் கடத்தப்பட்ட சிறார்களும் ஏனைய நபர்களும் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உடனடியாகக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அவர்கள் மீள தம் வீடுகளுக்கு செல்வதற்கு வகைசெய்வதோடு, அவர்களுக்கு தொடர்சியான பாதுகாப்பையும் (follow-up protection) உறுதி செய்தல் வேண்டும்.
- இவ்வறிக்கையில் பட்டியல் இடப்பட்டுள்ள, மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட கருணா குழுவின் முகாம்கள் மற்றும் TMVP காரியாலயங்களுக்கு, UNICEF உடன் இணைந்து முன்னறிவிப்பேதுமின்றிச் சென்று பரிசோதனைகளை நடத்த வேண்டும்.
- சிறார்களை படைகளில் சேர்த்து பயிற்சியளிப்பதற்காக, கருணா குழுவினர் பாவிக்கும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள சகல முகாம்களையும் உடனடியாக மூடிவிடல் வேண்டும்.
- 18 வயதிற்குக் குறைந்த சிறார்களை ஆயுதப் படைகளில் சேர்க்கும் தனி நபர்கள் மற்றும் குழுக்கள் மீது குற்றவியல் தண்டனைகளை (criminal penalties) விதித்து அவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- கருணா குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிறார்கள் மற்றும் ஏனைய கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றி உடனடியாக அக்கறையான விசாரணைகளை மேற்கொள்ள பொலீசாருக்கு உத்தரவிடுவதோடு, அவ்வாறு செய்ய மறுப்பவர்கள் மீது ஒழுக்க மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெறும் பலவந்தமாக சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கை தொடர்பாக அங்கு சென்று விசாரணைகளை மேற்கொள்வதற்கும், தொடர் அறிக்கைகளை கொணருவதற்கும் வசதியாக, மனிதாபிமான அமைப்புகளுக்கு தேவையான பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் அவசிய வசதிகளை பெற்றுத் தருவதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.
- சிறார்களை படையில் சேர்த்தல் உட்பட ஏனைய கடத்தல்கள், மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுதல்கள் தொடர்பாக - அரசாங்கம், புலிகள் இயக்கம் மற்றும் கருணா குழுவினரை கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடனான சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு பணியொன்றை (International Human Rights Monitering Mission) நிறுவுவதற்கு, நிதியுதவி வழங்கும் அரசாங்கங்களுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.
- பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களில் பங்குபற்றும் 18வயதிற்கு குறைந்த நபர்கள் மற்றும் பலவந்தமாக கடத்தப்பட்டதன் அடிப்படையில் பங்குபற்றும் நபர்களுக்கு குற்ற விலக்கு அளிக்கின்ற வகையில் 2006 ம் ஆண்டு அவசரகால விதி இல.7ல் (பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை தடுத்தலும் நிறுத்துதலும் - Prevention and Prohibition of Terrorism and Specified Terrorist Activities) திருத்தத்தை மேற்கொள்ளல் வேண்டும்.
- ஏற்கனவே அதிகம் தாமதப்படுத்தப்பட்டுள்ள, இலங்கையின் சிறார் உரிமைகள் தொடர்பான ஆரம்ப அறிக்கையை, ஆயுத மோதல்களில் சிறார்களை ஈடுபடுத்துவது பற்றிய, சிறார் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் மேலதிக சட்டவாக்கத்திற்கு இணங்க, ஐ.நா கமிட்டியிடம் வழங்குதல் வேண்டும்.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோமானிய சாசனத்தை ஏற்று கையொப்பமிடல் வேண்டும்.

## தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு (புலிகள் இயக்கம்)

- கடத்தல்கள் அல்லது வேறு விதத்தில் ஆட்சேர்ப்புக்கு வகைசெய்யக் கூடிய பலவந்தப் படுத்தல்கள் மற்றும் சுயவிருப்பின் பேரில் வந்து சேருதல் போன்றவை மூலம் நிகழும், சிறார்களைப் படையில் சேர்க்கின்ற சகல நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.
- சிறார்களை மோதல் நடவடிக்கைகளில் பயன்படுத்துகின்ற செயற்பாடுகளை உடன் நிறுத்துதல் வேண்டும்.
- புலிகள் இயக்கத்தின் படையணிகளில் உள்ள சகல சிறார்களையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதோடு, 18 வயதிற்கு முன்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட சகலருக்கும் விலகிச் செல்வதற்கான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.
- சிறார் படையினர் சகலரையும் பாதுகாப்பாக அவர்களின் குடும்பங்களிடம் அனுப்பி வைக்கும் பணியில் UNICEF உடன் ஒத்துழைக்க வேண்டும்.
- புலிகள் இயக்கத்திலுள்ள தளபதிகள் மற்றும் ஏனைய அங்கத்தவர்கள் எவரும், புலிகள் இயக்கப் படையணிகளுக்கு எந்த ஒரு நபரையும் பலவந்தமாக சேர்க்காமல் இருப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் மீது எடுக்கும் ஒழுக்க நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை, சர்வதேச சமூகத்தினருக்கு (UNICEF அல்லது மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிர் காரியாலயம் OHCHR ஊடாக) கிடைக்க வகைசெய்ய வேண்டும்.
- புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெறும் பலவந்தமாக சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கை தொடர்பாக அங்கு சென்று விசாரணைகளை மேற்கொள்வதற்கும், தொடர் அறிக்கைகளை கொணருவதற்கும் வசதியாக, மனிதாபிமான அமைப்புகளுக்கு தேவையான பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் அவசிய வசதிகளை பெற்றுத் தருவதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.
- SLMM, UNICEF ஆகிய சர்வதேச மற்றும் உள்ளூர் பாதுகாப்பு முகவர் அமைப்புக்கள் (protection agencies), புலிகள் இயக்கத்தின் இராணுவ மற்றும் ஏனைய முகாம்களுக்கு சென்று, அங்குள்ள சிறார்களை இனம்கண்டு, அவர்களை விடுவிப்பதற்கு வகைசெய்ய இடமளிக்க வேண்டும்.

## நிதியுதவி வழங்கும் சகல அரசாங்கங்களுக்கு

- புலிகள் இயக்கத்தினதும், கருணா குழுவினதும் படையணிகளில் தற்போதிருக்கும் சகல சிறார் படையினர்களையும் உடனடியாக விடுவிக்கும்படியும், சிறார்களையும், ஏனைய நபர்களையும் பலவந்தமாக படையணிகளில் சேர்ப்பதை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும்படியும் அவர்களை வலியுறுத்தல் வேண்டும்.
- கீழ்காணும் விடயங்கள் தொடர்பாக சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தல் வேண்டும்.
    - பலவந்தமாகவோ அல்லது சுயவிருப்பத்தின் பேரிலோ சிறார்கள் மற்றும் ஏனைய நபர்களை கருணா குழு தனது படையில் சேர்கும் நடவடிக்கைகளோடு அரசாங்கப் படையினருக்கிருக்கும் தொடர்புகளை உடனடியாக நிறுத்த வகை செய்தல்;

- o கருணா குழுவினால் சேர்க்கப்பட்டுள்ள சிறார்கள் மற்றும் பலாத்காரமாக சேர்க்கப்பட்ட நபர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு, பாதுகாப்பாக திரும்பிச் செல்வதற்கு வகைசெய்தல்;

  அத்துடன்

- o இவ்வாறான ஆட்சேர்ப்புக்களில் ஈடுபடுகின்ற தனிநபர்கள் தொடர்பாக முழுமையான விசாரணகளை நடத்தி, அவர்களின் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்த வகைசெய்யதல்;

- சிறார்களை படையில் சேர்த்தல் உட்பட ஏனைய கடத்தல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுதல்கள் தொடர்பாக, அரசாங்கம், புலிகள் இயக்கம் மற்றும் கருணா குழுவினரை கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடனான சர்வதேச மனித உரிமைகள கண்காணிப்பு பணியொன்றை (International Human Rights Monitering Mission) நிறுவுவதற்கு, இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு

- புலிகள் இயக்கம் வெளிப்படையாகவே சிறார்களை பலவந்தமாக படையணிகளில் சேர்த்து அவர்களை படையினராக பாவிப்பதனாலும், தொடர்ச்சியாவே அவ்வியக்கம் சிறார்களை படையினராக சேர்பதை நிறுத்தத் தவறுவதாலும், ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் 1539வது தீர்மானத்திற்கு இணங்கவும் (2004. ஏப்ரல் 22), பாதுகாப்புச் சபையின் 1612வது தீர்மானத்திற்கு இணங்கவும் (2005, ஜுலை 26), அவ்வியக்கத்தை குறிப்பாக இலக்கு வைத்து (targeted measures) மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்நடவடிக்கைளாவன, அவ்வியக்கத்தின் தலைவர்கள் ஏதாவது அரச கட்டுமானங்களில் பங்கேற்றல், மற்றும் பொது மன்ன்னிப்புக்கள் பெறும் வாய்ப்புக்கள் என்பவற்றை தவிர்ப்பதுடன், உலகம் பரந்த பயணத் தடையினையும் அவர்கள் மீது அமுல்படுத்தல், சிறு ஆயுதங்கள் விநியோகம் மீதான தடை, இராணுவ உதவிகள் வழங்குதல் மீதான தடை, மற்றும் நிதி வளங்கள் சுதந்திரமாக செல்வது மீதான தடை என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் சகல அங்கத்துவ நாடுகளுக்கு

- ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் 1379வது தீர்மானத்திற்கு இணங்க (2001, நவம்பர் 20), மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் சர்வதேச விழுமியங்களை மதிக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக, சகலவித சட்ட, அரசியல், இராஜதந்திர, பொருளாதார மற்றும் பௌதீக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, புலிகள் இயக்கத்தினரும் கருணா குழுவினரும் தொடர்ச்சியாக சிறார்களை படையினராக பாவிப்பதை அங்கத்துவ நாடுகள் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி வன்மையாக கண்டிப்பதோடு, இக்குழுக்கள் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வதை நிறுத்தி, தற்போது தமது படைகளில் உள்ள சகல சிறார்களையும் விடுவிக்கும்வரை எல்லா விதமான பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ உதவிகளை இடைநிறுத்தி வைக்க வேண்டும்.

# III. பின்னணி

## 2002 மோதல் தவிர்பிலிருந்து நிகழ்ந்த அத்து மீறல்கள்

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்த, இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (புலிகள் இயக்கம்) இடையேயான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமானது,[8] இறுதியில் தற்காலிகமாகவேனும் பாரிய இராணுவ நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவந்ததனால் பலரதும் பெரும் வரவேற்பைப் பெற்றது. எவ்வாறாயினும், மோசமான மனித உரிமை மீறல்கள் நடப்பதை அது கட்டுப்படுத்தாததோடு, ஒரு வகையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் தமது உளவுப் பணிகளையும் மற்றும் படுகொலைகளையும் மேற்கொள்வதற்கு அதிக வாய்ப்பான சூழ்நிலையை அது உருவாக்கியது. அக்கால கட்டத்தில் 200க்கு மேற்பட்ட சட்டவிரோதமான படுகொலைகள் நிகழ்ந்ததாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பும் ஏனையோரும் அறிக்கையிட்டதோடு, அவற்றில் பெரும்பாலானவற்றுக்கு புலிகள் இயக்கமே பொறுப்பு என்றும் கூறப்பட்டது.[9] புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் பெரும்பாலும் அரசாங்கத்துக்கு சார்பான தமிழ் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாக இருந்ததுடன், சில கொலைகள் சம்பந்தமாக அவர்களை நோக்கியும் கரங்கள் நீட்டப்பட்டன. இக்கொலைகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கோ, அதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கோ அரசாங்கம் எவ்வித காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

2005, ஆகஸ்ட் 22ம் திகதி புலிகள் இயக்கத்தின் துப்பாக்கி நபர்கள் என சந்தேகிக்கப் படுவோரால் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், கொழும்பில் தனது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். தொடர்சியாக அடுத்து வந்த மாதங்களில், புலிகள் இயக்க அணியினர் மறைந்திருந்து நடத்தும் தாக்குதல் (ambushes) மற்றும் கண்ணிவெடிகள் மூலம் இராணுவ அணியினரைக் குறிவைத்துத் தாக்கினர். அரசாங்கத்துக்கு சார்பான தமிழ் ஆயுதக் குழுக்கள் மீதும் கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதோடு, அதில் மிக முக்கியமாக, 2005 டிசம்பர் மாதம் மட்டக்களப்பு நகரில் நத்தார் தினத்தன்று மாலை ஆராதனையில் பங்குபற்றச் சென்றிருந்த, புலிகளுக்கு ஆதரவான தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைச் சுட்டிக் காட்டலாம். 2006, ஆகஸ்ட்டில், அரசாங்கத்தின் சமாதானச் செயலக பிரதிப் பணிப்பாளர் கேதீஸ் லோகநான் கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்டமைக்கு புலிகள் இயக்கமே பொறுப்பு என்று நம்பப்படுகிறது.

---

[8] ஜனநாயக சோசலிச குடியரசாகிய இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 2002, பெப்ரவரி 15ம் திகதி கைச்சாத்திடப்பட்ட மோதல் தவிர்பு தொடர்பான ஒப்பந்தமானது (CFA), "தொடர்சியாக இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இனமுரண்பாட்டிற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக் காணுவது" என்கின்ற குறிக்கோளை முன்வைத்திருந்தது. அவ்வொப்பந்தமானது மோதல் தவிர்ப்பை கடைப்பிடித்தல், சுமுக நிலமையை மீள ஏற்படுத்தல், மற்றும் இலங்கை கண்காணிப்பு பணி (SLMM) போன்றவற்றுக்கான கடப்பாடுகளை (Modalities) உள்ளடக்கியதாக இருந்தது. ஒப்பந்தத்தைப் பார்வையிட http://www.slmm.lk/documents/cfa.htm க்குச் செல்லவும் (2007, ஜனவரி 1ல் பார்க்கப்பட்டது)

[9] உ+தா. பார்க்க, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, "இலங்கை: தமிழ் சிவிலியன்களை கடத்துவதையும் படுகொலை செய்வதையும் முடிவுக்கு கொண்டுவருக," 2005, மே 24 http://hrw.org/english/docs/2005/05/24/slanka10996.htm இல் காணலாம். 2007, ஜனவரி 1ல் பார்க்கப்பட்டது), மனித உரிமைகள் கமிஷன், சட்டவிரோத படுகொலைகள் தொடர்பான விசேட பிரதிநிதியின் அறிக்கை, தன்னிச்சையான மரண தண்டனைகள் அல்லது சாராம்சம், Philip Alston, "இலங்கைக்கான ஆய்வுப் பணி (28 நவம்பர் முதல் டிசம்பர் 2005)," E/CN.4/2006/53/Add.5, March27,2006.

2006ல் நிகழ்ந்த பல தமிழ் சிவிலியன்களின் படுகொலைகள் தொடர்பாக, கிளர்சி ஒடுக்கும் (counter insurgency) நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற இலங்கை இராணுவப் படையினரையும், பொலீஸ் விசேட அதிரடிப் படையினரையும் நோக்கியே கரங்கள் நீட்டப்பட்டுள்ளன. அவ்வாறான சட்டவிரோத படுகொலைச் சம்பவங்களுள், 2006, ஜனவரி 2ம் திகதி திருகோணமலை நகரில் நிகழ்ந்த ஐந்து மாணவர்களின் படுகொலைகள், மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயமொன்றிலிருந்து எட்டு இளைஞர்கள் 'காணாமல் போனமை', ஜூன் மாதத்தில் மன்னாரில் ஐந்து மீனவர்கள் சட்டவிரோதமாக படுகொலை செய்யப்பட்டமை, ஆகஸ்டில், சர்வதேச நிவாரண ஸ்தாபனமான Action Against Hunger என்கின்ற அமைப்பைச் சேர்ந்த ஊழியர்கள் 17 பேர், மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்ற பாணியில் (execution-style) படுகொலை செய்யப்பட்டமை, மற்றும் செப்டெம்பர் மாதத்தில் பொத்துவிலில் வைத்து பத்து கூலித் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, என்பன அடங்கும்.

## புலிகள் இயக்கத்திலிருந்து கருணாவின் பிளவு

இலங்கையின் வடக்கு கிழக்கு அரசியலின் தள நிலமையானது, 2004 ஏப்ரலில், புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண படையணியினர் அவ்வியக்கத்தை விட்டு வெளியேறிச் சென்றதன் மூலம் நிரந்தரமாகவே மாற்றியமைக்கப் பட்டுவிட்டது, எனக் கூறலாம். மட்டக்களப்பு பிராந்தியத்திற்கான புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட இராணுவ தளபதியான கேர்ணல் கருணா என பரவலாக அறியப்பட்ட வினாயகமூர்த்தி முரளீதரன், தனது கட்டளையின் கீழிருந்த புலிகள் இயக்கப் படையணிகளின் சில ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களுடன் அவ்வியக்கத்திலிருந்த பிளவுபட்டு வெளியேறினார். கருணாவின் இந்த நடவடிக்கைக்கான காரணம் சரியாக தெளிவில்லாமல் இருப்பினும், பெரும்பாலும் வடக்கின் ஆதிக்கத்தை அதிகம் கொண்டுள்ள புலிகள் இயக்கத் தலைமையினால் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டதனாலேயே தான் வெளியேறியதாக கருணா கூறினார். ஆனால் புலிகள் இயக்கத்தின் இரண்டாவது தலைமைப் பதவி தொடர்பாக, அவ்வியக்கத்தின் உளவுப் பிரிவுத் தலைவருடன் ஏற்பட்ட மோதலின் காரணமாகவே கருணா வெளியேறத் தீர்மானித்ததாக வேறுபலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.[10]

2004 ஏப்ரலில் புலிகள் இயக்கத்தின் படைகள் கருணாவின் போராளிகள் மீது பெருமெடுப்பிலான தாக்குதலொன்றை மேற்கொண்டனர். கருணா சடுதியாக தனது படையணிகளைக் கலைத்துவிட்டு, தனக்கு ஆதரவான சிறு எண்ணிக்கையானோருடன் தப்பிவிட்டார். அவரது எதிர்பாராத அந்நடவடிக்கையானது அப்பகுதி மக்களிடமிருந்து அவருக்கு நல்லபிப்பிராயத்தை பெற்றுக்கொடுத்தது. அத்துடன் 2000 பேர்வரையான சிறார்படையினரை அவர்களது வீடுகளுக்கு திரும்பிப் போக கருணா ஊக்குவித்தார் (பார்க்க அத்தியாயம் VIII). புலிகள் இயக்க தளபதி என்ற வகையில், கடந்த காலத்தில் புலிகளின் படையணிகளுக்காக சிறார்களை கடத்துவது, பலவந்தமாக படையில் சேர்ப்பது போன்றவற்றில் கருணா நன்கு அறியப்பட்டவராக இருந்தார். இன்றுவரை கருணா எங்கிருக்கிறார் என்பது அறியப்படாமலேயே இருக்கிறது.

அரசாங்கத்தினதும், முன்னர் புலிகளினதும் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களில் கருணா படிப்படியாக தனது ஆதிக்கத்தை மீளப் பெற்றுக்கொண்டார். கருணா குழுவினரின் இருப்பு என்கின்ற யதார்த்தமானது, 2002ம் ஆண்டு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தையே சிக்கலுக்குள்ளாகியது. பிளவுபட்டுச் சென்றதன் பின்னர் கருணா அணியினர், தம்மையும் முறைப்படி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் உள்ளடம்கும்படி கோரிக்கை விடுத்தனர்.

[10] International Crisis Group, (சர்வதேச நெருக்கடி குழு) " இலங்கை : சமாதானச் செயற்பாட்டின் தோல்வி." ஆசியா தொடர்பான Crisis Group அறிக்கை இல. 124, நவம்பர் 28, 2006, பக் 9

அவரது குழுவினரையும் அம்மோதல் தவிர்ப்பு ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக ஒழுகுவதற்கு அது வகைசெய்திருக்ககூடும், என்பதோடு எதிர்கால பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கும் அவர்களுக்கு இடமளித்திருக்கும். புலிகள் இயக்கம் இதற்கு மறுப்புத் தெரிவித்தது மட்டுமன்றி, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் விதிகளுக்கு இணங்க கருணா குழுவினரும் "தமிழ் துணைப் படையினர்" (Tamil paramilitary group)[11] என்று கருதப்பட்டு நிராயுதபாணியாக்கப்பட வேண்டும், என்றும் கோரினர். மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் கீழ் தாங்கள் புலிகள் இயக்கத்தின் ஒரு பகுதியனராகவே இருந்ததால் அந்த விதிகள் (provision) தனது படையணிகளைக் கட்டுப்படுத்த மாட்டாது என்று கூறி கருணா அதனை நிராகரித்தார். 2006ம் ஆண்டில் புலிகள் இயக்கத்திற்கும் கருணா அணிக்கும் இடையே சிறு சிறு மட்டத்திலான பழிப்குப் பழி வாங்கும் தாக்குதல்கள் தொடர்சியாக நடக்க ஆரம்பித்தன.

2004ம் ஆண்டில், கருணா தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) என்னும் அரசியல் கட்சியை அமைத்ததோடு, 2006ல் கொழும்பு உட்பட நாட்டின் கிழக்கு மாவட்ட நகரங்களில் கட்சிக் காரியாலயங்களையும் நிறுவினார். கட்சியின் தலைவர் என்ற வகையில், எதிர்வரும் காலங்களில் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தனது விருப்பத்தையும் கருணா வெளியிட்டார்.

கருணாவின் வெளியேற்றமானது புலிகள் இயக்கத்திற்கு கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியது. அப்பிளவானது சில ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களை அவ்வியக்கத்திற்கு இல்லாமல் செய்தது மாத்திரமின்றி, கிழக்கு மாகாணத்தில் முக்கியமான பகுதிகளில் அது கொண்டிருந்த ஆதிக்கத்தையும், அங்கு வைத்திருந்த கட்டுப்பாட்டையும், மற்றும் புதிய ஆள் சேர்ப்புக்கான வளத்தையும்கூட இல்லாமல் செய்தது. புலிகள் தரப்பில் ஏற்பட்ட பலவீனமான நிலைமையை புரிந்து கொண்டதன் காரணமாக, அவ்வியக்கத்தின் மீது பாரிய அளவில் புதிய தாக்குதல்களைத் தொடுப்பதன் மூலம், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கணிசமான பிரதேசங்கைள விடுவிக்கவோ அல்லது முழுமையான வெற்றியை பெறக்கூடியதாகவோ இருக்கும், என்ற நம்பிக்கை இலங்கை இராணுவத் தலைமைக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்

## 2006 - நடுப் பகுதியிலிருந்து அதிகரித்த மோதல்கள்


அரசாங்கப் படையினருக்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையே சிறு சிறு மட்டத்தில் நிகழ்ந்த மோதல்கள் 2006 ஜூலை மாதத்திலிருந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளாக மாறின. 2002ம் ஆண்டு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் பின்னர் - திருகோணமலை நகரத்திற்கு அருகே அமைந்திருந்த வாவியொன்றின் துருசு வாயிலை புலிகள் இயக்கம் மூடிவிட்டதைத் தொடர்ந்தே, இலங்கை இராணுவத்தினர் பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர். ஆனால் துருசு வாயில் மீண்டும் திறக்கப்பட்ட பின்னரும் அத்தாக்குதல் தொடர்ந்தது.

இராணுவத்தினர் ஏற்கனவே ஆரம்பித்து தொடர்ந்து கொண்டிருந்த தாக்குதல் நடவடிக்கைக்கு மேலதிக உதவிக்காக அதிக இராணுவத்தினர் அகற்றப்பட்டு, பெரும்பாலும் வெறுமையாக இருந்த திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் என்னும் நகரத்தில், ஜூலை மாதத்தில் அரசின் தாக்குதலுக்கு பதில் தாக்குதலை புலிகள் இயக்கம் முதலில் மேற்கொண்டனர். அதேவேளை ஆகஸ்ட் நடுப்பகுதியில், புலிகள் இயக்கத்தினர் யாழ்ப்பாண குடாநாட்டையும் குறுகிய காலத்திற்கு நாட்டின் ஏனைய பகுதியிலிருந்து துண்டித்து, குடாநாட்டின் மீது பாரிய, ஆனால் தோல்விகரமான தாக்குதல் ஒன்றையும் மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் மீதான அந்தத் தாக்குதலால் ஏற்படுத்தப்பட்ட

[11] CFA, sec. 1.8.

பாரிய தற்காலிக மனிதாபிமானப் பிரைச்சினையானது (humanitarion crisis), அடுத்தடுத்த மாதங்களில் புலிகளும் அரசாங்கமும் யாழ் குடாநாட்டுக்குள் சிக்கியிருந்த 5 இலட்சம் மக்களுக்கு அவசியமான அத்தியாவசிய உணவு, எரிபொருள் மற்றும் மருத்துவ வசதிகள் போய்ச் சேருவதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் காரணமாக, அது ஒரு நீண்டகால மனிதாபிமானப் பிரைச்சினையாக ஆக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு செல்லும் சரக்குக் கப்பல்களை தாம் தாக்கப் போவதாக புலிகள் இயக்கம் அச்சுறுத்திய அதேவேளை, அரசாங்கமானது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கூடாக குடாநாட்டுக்குச் செல்லும் பிரதான பாதையை திறப்பதற்கான முயற்சிகளை அரை மனதுடனேயே மேற்கொண்டது.

செப்டெம்பர் மாதத்திலிருந்து பல பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திருகோணமலை குடாவுக்கு அப்பாலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பூர் நகரத்தை இலங்கை இராணுவத்தினர் கைப்பற்றினர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கிழக்கிலும் புலிகள் இயக்கத்தின் நிலைகள் மீது நடத்திய தாக்குதல்களின் போது சில நூற்றுக்கணக்கான படையினரை இராணுவத்தினர் இழந்தனர்.



2006, ஜூன் 15ம் திகதி சிவிலியன் பேரூந்தொன்றின் மீது புலிகள் இயக்கம் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட 67 பேரின் உடல்கள் கூட்டாக அடக்கம் செய்யப்படும் பொதுப் புதைகுழி.
© 2006 Q. Sakamaki/ Redux

தொடர்ந்து நிகழ்ந்த சகல மோதல்களின் போதும், இரு சாராருமே சிவிலியன்களின் பாதுகாப்பு குறித்து அதிக அக்கறை காட்டவில்லை. ஜூன் மாதத்தில் புலிகள் இயக்கமானது சிவிலியன்கள் பயணித்த பேருந்தொன்றை குறிவைத்து நடத்திய

கண்ணிவெடித் தாக்குதலில் பல சிறார்கள் உட்பட 64 பேர் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் மாதத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த கட்டிடம் ஒன்றை குறிவைத்து இலங்கை விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சில் புலிகள் இயக்கத்தினால் சிவில் பாதுகாப்பு படைக்காக பயிற்சி வழங்கப்பட்டுக் கொண்டிருந்த 51 இளம் பெண்கள் கொல்லப்பட்டனர். 2007, ஜனவரி 5-6ம் திகதிகளில் கொழும்புக்கு தெற்கே பொதுமக்கள் பயணித்த பேருந்துகளை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு புலிகள் இயக்கமே பொறுப்பு என்று நம்பப்படுவதோடு, அத்தாக்குதல்களில் 21 பயணிகள் கொல்லப்பட்டதோடு 120 பேர் காயமடைந்தனர்.

2006ம் ஆண்டின் இறுதி மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவினர் இயங்கிய பகுதியை அண்மித்த, வாகரைப் பிரதேசத்தில் இரு தரப்பு படையினருக்கு இடையே நடந்த மோதல்கள் பெரும்பாலும் நீண்டதூர எறிகணைத் (long-rang artillery) தாக்குதல்களாகவே நடைபெற்றன. அதனால் ஏற்பட்ட பெருமளவு பாதிப்புக்களை பொதுமக்களே தாங்கிக் கொண்டனர். இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம்கள் உட்பட, பொதுமக்கள் நெருக்கமாக வாழ்ந்த இடங்களில் இருந்து புலிகள் இயக்கமானது கனரக ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதன் மூலம், பொதுமக்களின் உயிருக்கு அதிக ஆபத்தான நிலமையை உருவாக்கினர். இராணுவத்தினர் அத்தாக்குதலுக்கு பெரும்பாலும் பதில்தாக்குதல்களை அல்லது கண்மூடித்தனமான எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்த பெருவேக நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து, ஒரு பாடசாலைக்கு வெளியே தஞ்சமடைந்திருந்த சிவிலியன்கள் 40 பேர் நவம்பர் 8ம் திகதி கொல்லப்பட்டதுடன், 100 பேருக்கு மேல் காயமடைந்தனர். தொடர்ந்தும் எறிகணைத் தாக்குதல்கள் நிகழலாம் என்கின்ற அச்சத்தின் காரணமாக, 20,000ற்கும் மேற்பட்ட மக்கள் தமது உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல் பல நாட்களாக காடுகளுக்கூடாக நடந்தும், சிறு வள்ளங்களில் அளவுக்கதிகமான நபர்கள் ஏறியும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு வெளியேறினர். அநேகமான குடும்பங்கள் தற்போது கருணா குழுவினர் சென்றுவரக்கூடிய பகுதிகளில் நிச்சயமற்ற சூழ்நிலைமையின் கீழ் வாழ்கின்றனர்.

இவ்வறிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போது, வாகரையில் தொடர்சியாக மோதல்கள் நிகழ்ந்த வண்ணம் இருப்பதோடு, ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர். 2007ம் ஆண்டில், எங்கு எப்போது புதிய, பாரிய இராணுவ நடவடிக்கைகள் நிகழும் என்பது நிச்சயமற்றதாக இருக்கிறது. ஆனால் அவ்வாறன மோதல் நடவடிக்கைகள், புலிகள் இயக்கமும் மற்றும் கருணா குழுவினரும் தமது படைகளில் பணியாற்றுவதற்கென சட்ட விரோதமாக நபர்களைக் கடத்துவதற்கும், பலாத்காரமாக சிறார்களைப் பிடிப்பதற்குமான செயற்பாடடில் ஈடுபடுவதற்கான அழுத்தங்களை அவர்கள் மீது உருவாக்கக்கூடும்.[12]

[12] இராணுவம் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி, ஒரு மாத காலத்திற்குள் வாகரைப் பகுதியை கைப்பற்றும் என்று இலங்கையின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, 2007. ஜனவரி 2ம் திகதி கூறினார். “கிழக்கு மாகாணத்தில் முற்றாக புலிகளை நிர்மூலமாக்கிய பின்னர், வடக்கை விடுவிப்பதற்காக முழுப் பலமும் பிரயோகிக்கப்படும்,” என்று இராணுவத் தளபதி கூறினார். பி.கே.பாலச்சந்திரன், “ மார்ச் மாதமளவில் கிழக்கை விடுவிக்கலாம் என இலங்கை இராணும் நம்புகிறது” ஹிந்துஸ்தான் டைம்ஸ் (புது டில்லி), January 3, 2007, http://www.hindustantimes.com/news/181_1887249,001302310000.htm (January 9, 2007 ல் பார்க்கப்பட்டது) and “அடுத்தது யாழ்ப்பாணம், இரணுவத் தளபதி மகா நாயக்கர்களிடம் கூறினார்,” *Daily Mirror* (Colombo), January 3, 2007, http://www.dailymirror.lk/2007/01/03/front/5.asp (January 9, 2007ல் பார்க்கப்பட்டது).

# IV. கருணா குழுவினால் நடத்தப்பட்ட கடத்தல்களும் பலாத்கார ஆட்சேர்ப்பும்

## 2006ம் ஆண்டில் கடத்தல்கள்

2004ம் ஆண்டு மார்ச் மாதத்தில், கருணா குழுவினர் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறிய சொற்ப காலத்துக்குள்ளேயே, அவர்கள் சிறுவர்களையும் இளைஞர்களையும் பலாத்காரமாக பிடிப்பதாகவும், கடத்தல்களை மேற்கொள்ளுவதாகவும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிக்கைகள் வெளிவர ஆரம்பித்திருந்தாலும், 2006 மார்ச் மாதம் வரை இதுபற்றி ஒரு சில அறிக்கைகளே வெளிவந்திருந்தன.[13] கிழக்கு மாவட்டங்களில் பணியாற்றுகின்ற மனித உரிமைக் குழுக்களினதும் மற்றும் சர்வதேச அமைப்புக்களினதும் கருத்துப்படி, அக்காலகட்டத்தில் கருணா குழுவின் ஆயுததாரிகள், தம்முடன் வந்து சேர்ந்து இயங்குவதற்காக பொலொனறுவை மாவட்டத்தை அண்டிய பகுதிகளுக்கு வரும்படி, சிறார்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். அவ்வாறு சென்ற பல சிறார்கள் ஒரு நாளும் திரும்பி வரவில்லை.

2006 ஜுன் மாதத்தில், சிறுவர்களையும் இளைஞர்களையும் பலவந்தமாக கடத்தும் கருணா குழுவினரின் செயற்பாட்டில் பாரிய பாய்ச்சலொன்று காணப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நாளில் 23 பேரும், இன்னொரு நாளில் 17பேருமாக நிகழ்ந்த கடத்தல்கள் உட்பட, அந்த மாதத்தில் மட்டும் 40க்கு மேற்பட்ட கடத்தல்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள குடும்பங்களால் அறிக்கையிடப்பட்டன.[14]

ஒரு குறிப்பிட்ட தினத்தில் நடந்த 23 கடத்தல்கள் பிரதானமாக இரு கிராமங்களிலேயே நடந்துள்ளன. அவ்விரு கிராமங்களில் ஒன்றின் எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு பேரை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்ததோடு, அவர்களில் ஒருவரினதும் மகன்மார் அக்குறிப்பிட்ட தினத்தில் கடத்தப்பட்டிருந்தனர். அக்கடத்தல்கள் தொடர்பாகவும், அச்சிறுவர்களையும் இளஞர்களையும் மீளப் பெற்றுக் கொள்வதற்காகவும் பெற்றோர்கள் கருணாவின் முகாம்களுக்கு சென்றமை, அம்முகாம்களில் தமது பிள்ளைகளையும் அவர்களைக் கடத்திச் சென்றவர்களைக் கண்டமை, என்பன தொடர்பாக அக்குடும்பத்தினர் மிக உறுதியானதும் விரிவானதுமான வாங்குமூலங்களை எமக்கு வழங்கினார்கள்.

தனியாக நேர்காணல் செய்யப்பட்ட, மூன்று குடும்பங்கள் கருத்துக் கூறும்போது, கடத்தல் நடத்தப்பட்ட தினத்தில் அக் கிராமத்திற்கு இலங்கை இராணுவத்தினர் வந்ததாக கூறினர். கிராமத்திற்கு அருகாமையிலிருந்த ஒரு வெளியில் ஏழு இளைஞர்களை ஒன்றாக சேர்த்து வைத்து, இராணுவத்தினர் அவர்களின் அடையாள அட்டைகளை பரிசோதித்ததோடு அவர்களை புகைப்படமும் எடுத்தனர். அன்றிரவே கருணா குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அக்கிராமத்திற்கு வந்து, அந்த ஏழு பேரில் சிறுவர்கள் இளைஞர்கள் உட்பட நான்கு பேரையும், இன்னும் அக்கிராமத்தைச் சேர்ந்த மேலும் நால்வரையும் கடத்திச் சென்றனர். இலங்கை இராணுவத்தினர் இந்த மாவட்டத்தில் ஏனைய கிராமங்களில் செய்வதுபோல், புலிகள் இயக்க சந்தேக நபர்களை இனம் காணுவதற்காகத்தான் அப்படிச் செய்தார்களா, அல்லது, கடத்தப்படுவதற்கு தகுதியான நபர்களை இனங்காட்டிக் கொடுப்பதன் மூலம் கருணா குழுவினர் அவர்களைக்

---

[13] 2004, அக்டோபரில் இருந்து 2006 மார்ச் வரையான காலப் பகுதியில் கருணா குழுவினரால் சிறார்களைப் பலவந்தமாக படையில் சேர்க்கும் நடவடிக்கை தொடர்பான, மொத்தம் 19 சம்பவங்கள் பற்றி UNICEF அறிக்கையொன்றை வெளியிட்டது.

[14] 2006, ஜுன் மாதத்தில், 43 கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக UNICEF அறிக்கையொன்றை வெளியிட்டது. Ibid.

கடத்துவதற்காக வேண்டுமென்றே அவர்களுடன் ஒத்துழைத்தார்களா என்பது இன்னும் தெளிவில்லாமலேயே இருக்கிறது.

அதே தினத்தன்று வேறொரு கிராமத்திலும் தமது மகன்மார்கள் கடத்தப்பட்டதாக கூறிய 13 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு பேருடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு உரையாடியது. இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்தபடி, கருணா குழுவைச் சேர்ந்த 10 அல்லது 15 ஆயுதம் தரித்த அங்கத்தவர்கள், அங்கு கடத்தப்பட்ட அப் 13 சிறார்களை வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு முன்னர், எவ்வாறு அருகாமையிலிருந்த கடையொன்றுக்குள் தற்காலிகமாக தடுத்து வைத்திருந்தார்கள் என்பது பற்றி அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். அவர்கள் கருணா குழுவின் அங்கத்தவர்கள்தான் என்பதை பெற்றோர்கள் அறிந்திருந்தார்கள், ஏனெனில், பின்னர் தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக அப்பெற்றோர்கள் கருணா குழுவினரின் முகாம்களுக்கே சென்றிருந்தனர். அந்தக் கடை அமைந்திருந்த தெருவின் மறுபுறமாக ஒரு இராணுவ சோதனைச் சாவடி அமைந்திருந்ததோடு, சில பெற்றோர்கள் இராணுவத்தினரிடம் போய் அதில் தலையிட்டு கடத்தலைத் தடுக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். கடத்தப்பட்டவர்களை அவர்கள் கடைக்குள் தடுத்து வைத்துக் கொண்டிருக்கும்போதே, இரு இராணுவத்தினர் கருணா குழுவின் அங்கத்தவர்களிடம் சென்று பேசினர். ஆனால் கடத்தப்பட்ட நபர்களைப் பாதுகாப்பாக விடுவிப்பதற்கு எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளையும் இராணுவத்தினர் எடுக்கவில்லை, என்றே அப்பெற்றோர்கள் கூறினார்கள்.

கருணா குழுவினரின் கடத்தல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடந்த நிலைமையானது, மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 30 சிறார்கள் கடத்தப்பட்ட சம்பவங்களை உறுதிப்படுத்தி, UNICEF பகிரங்க அறிக்கையொன்றை வெளியிடுவதற்கு வழிகோலியது. “கருணா குழுவினரால் சிறார்கள் பலவந்தமாக படைகளில் சேர்க்கப்படுவதை உடனடியாக நிறுத்துக” என, உடனடி நடவடிக்கையொன்றுக்காக அவ்வமைப்பு கோரிக்கை விடுத்தது. “சகல கடத்தல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதோடு, பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சிறார்களுக்கு சட்டத்தின் பாதுகாப்பை உறுதி செய்க,” என்று அவ்வறிக்கையானது இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தது.[15]

UNICEF வெளியிட்ட அறிக்கையானது ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்ட கடத்தல்கள் ஒரு குறுகிய காலத்திற்கு முற்றாக நின்றுவிட்டதென்றே கூறலாம். எவ்வாறாயினும், ஜூலை மாத பிற்பகுதியில் இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும், குறைந்து போயிருந்த இக்கடத்தல் செயற்பாடுகள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கின. ஆகஸ்ட் மாதத்தில், கருணா குழுவினரால் 50 சிறார்கள் கடத்தப்பட்ட சம்பவங்களை UNICEF அறிக்கையிட்டதுடன், செப்டெம்பர் முதல் டிசம்பர் வரை மேலதிக 84 சம்பவங்களையும் அறிக்கையிட்டது.[16]

நிலைமையை பொறுத்துக்கொள்ள முடியாத பெற்றோர்களைக் கொண்ட ஒரு குழுவினர், ஜூலை மாதத்தில் இக்கடத்தல்கள் தொடர்பாக நேரடியாக அரசாங்கத்திடமே முறையிட்டனர். தமது மகன்மார்கள் - சிறுவர்களும் இளைஞர்களும் - கருணா

---

[15] “இலங்கையில் சிறார்கள் கருணா குழுவினரால் கடத்தப்படுவதையும் இராணுவத்தில் சேர்க்கப்படுவதையும் UNICEF கண்டிக்கிறது,” UNICEF செய்திக் குறிப்பு, 2006, ஜூன் 22, http://www.unicef.org/infobycountry/media_34677.html (2006, டிசம்பர் 28ல் பார்க்கப்பட்டது)

[16] ஆகஸ்ட் மாதத்தில் 47 சிறார்கள் கடத்தப்பட்டதாகவும், செப்டெம்பரில் 18 பேரும், அக்டோபரில் 37 பேரும், நவம்பரில் 21 பேரும், டிசம்பரில் 8 பேரும் கடத்தப்பட்டதாக, UNICEF அறிக்கையிட்டது. இப்புள்ளி விபரங்கள் UNICEF இனால் 2007, ஜனவரி 12ம் திகதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்டது.

குழுவினராலேயே கடத்தப்பட்டார்கள் என்பதற்கான விரிவான தகவல்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை, 48 தாய்மார்கள் அடங்கிய அக்குழு இலங்கை உச்ச நீதிமன்றத்திடம் கையளித்தது. இப்பட்டியலின் பிரதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், பேரழிவு முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் விவகார அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. ஐந்து மாதங்களின் பின்னர் இராணுவத்தினர் ஆரம்ப விசாரணைகளை ஆரம்பித்தனர், ஆனால், உள்ளூர் மனித உரிமை குழுக்களின் கருத்துப்படி, இக்குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர்களை "இனந்தெரியாத ஆயுதக் குழுவினர்" என்றே குடும்பத்தினர் இனங்காட்ட வேண்டும் என அக்குடும்பங்கள் மீது இராணுவத்தினர் அழுத்தமிட்டுள்ளனர்.




திருகோணமலை நகரில் கருணாவின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசியல் காரியாலயத்தின் முன்பக்கம் பெயர் கிறுக்கப்பட்ட நிலையில்.
2006 ஆகஸ்டில் அங்கு TMVP காரியாலயம் திறக்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து கடத்தல்களும் அதிகரித்தன.
© 2006 Oliver Bercault/ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

ஜூலை மாதத்தின் பின்னர் கருணா குழுவினரின் பகிரங்கமான நடமாட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கின. பொலொனறுவை மாவட்டத்தில் உள்ள வெலிகந்தை என்னும் பகுதிக்கும் அவர்களது இராணுவ அணியின் நடமாட்டம் விஸ்தரிக்கப்பட்டது. அத்துடன், கிழக்கின் பல நகரங்களிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி காரியாலயங்களை திறந்தனர். புதிய கட்சிக் காரியாலயங்களுக்கும் கடத்தல்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்பட்டன. மார்ச் மாதத்தில் மட்டக்களப்பு நகரத்தில் TMVP காரியாலயம் திறக்கப்பட்டதுடன், அந்தப் பகுதியில் கடத்தல்களிலும் ஒரு பாய்ச்சல் தெரிந்தது. திருகோணமலையிலும் இதுபோன்றே சம்பவங்கள் தொடர்ந்தன. ஆகஸ்ட் மாத பிற்பகுதியிலேயே அங்கும் காரியாலயம் திறக்கப்பட்டது. அந்நகரசபை அங்கத்தவர் ஒருவரின் கருத்துப்படி,[17] அடுத்து வந்த ஆறு வார காலத்தில் 15 முதல் 20 வரையான இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக, கருணா குழுவினரை நோக்கியே கரங்கள் நீட்டப்பட்டன. செப்டெம்பர் 24ம் திகதி, TMVP இனர் மட்டக்களப்புக்கு வடக்கே

[17] 2006, அக்டோபர், திருகோணமலை நகரில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்

பருமட்டாக 13 கிலோமீட்டர் தூரத்தே அமைந்துள்ள செங்கலடியில், சித்தாண்டி இராணுவ முகாமுக்கு அருகே ஒரு காரியாலயத்தைத் திறந்தனர். அன்றைய தினம், கருணா படையினர் அந்தப் பகுதியிலிருந்து 12 சிறுவர்களையும் இளைஞர்களையும் கடத்தியதாக கூறப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று நகரில் TMVP இனர் ஒரு காரியாலயத்தை திறந்த பின்னரே, அம்மாவட்டத்திலும் கருணா குழுவினர் கடத்தல்களில் ஈடுபடுவதாக முதல் முறையாக செய்திகள் வரத்தொடங்கின.

ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் ஆகிய மாதங்கள் பூராகவும், கருணா அணியின் அங்கத்தவர்கள் பைகளுக்குள் ஆயுதங்களை வைத்தபடி, மட்டக்களப்பு நகரமெங்கும் பகிரங்கமாக உலவியதை கண்டதாக, சர்வதேச நிவாரண அமைப்பின் அங்கத்தவர்கள் கூறியுள்ளனர். அக்டோபர் மாதத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்குச் சென்றபோது அங்கு கருணா குழுவினரின் பிரசன்னம் மிகத் தெளிவாகத் தெரிந்தது. பல கட்டிடங்களிலும் தெரு முனைகளிலும் TMVPயின் சின்னமும் பெயரும் கிறுக்கப்பட்டிருந்தன. கருணா அணியின் அங்கத்தவர்கள் சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினருடனும் பொலீசாருடனும் நிற்பதை தாங்கள் கண்ணுற்றதாக உள்ளூர் குடிமக்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இரு நகரங்களிலும், அரசாங்கப் பாதுகாப்பு படையினர் நிரந்தர காவல் கடமைகளில் ஈடுபட்டும் சோதனைச் சாவடிகளைப் போட்டும், அப்பகுதியில் மிக உறுதியாக தமது கட்டுப்பாட்டை வைத்துள்னர். திருகோணமலை மாவட்டத்தில் சில பிரதேசங்களில். ஒவ்வொரு இராணுவ சோதனைச் சாவடிக்கும் இடையே உள்ள தூரமானது 200 மீற்றர்கள் மட்டுமேயாகும்.

செப்டெம்பர் மாதமாகியபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான். மாங்கேணி, சந்திவெளி, செங்கலடி, வாழைச்சேனை, மண்முனை (வடக்கு மற்றும் தென்கிழக்கு), போரைதீவுப்பற்று, கொரளைப்பற்று (வடக்கு, தெற்கு, மற்றும் மேற்கு), காத்தான்குடி, ஏறாவூர் நகரம் மற்றும் ஏறாவூர்பற்று ஆகிய சகல இடங்களிலும் கடத்தல்கள் இடம்பெற்றன. பெரும்பாலும் இந்தப் பகுதிகள் அனைத்தும் பொலீஸ் மற்றும் இராணுவ முகாம்களிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்குள்ளேயே அமைந்துள்ளன.

கருணா குழுவினர், சிறுவர்களையும் இளைஞர்களையும் அவர்களது வீடுகள், வேலைத் தளங்கள், கோயில்கள், விளையாட்டு மைதானங்கள், பொது வீதிகள் மற்றும் திருமண வீடுகள் என்பவற்றில் வைத்தும் கடத்திச் சென்றுள்ளனர். பல்வேறு தரப்பினருக்கூடாக கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, தற்காலிகமாக இடம் பெயர்ந்தவர்கள் அகதிகளாக தங்கியிருந்த முகாம்களிலும் இவ்வாறான கடத்தல்கள் நடந்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவுக்கு அறியக் கிடைத்ததாயினும், அவை தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளை அது மேற்கொள்ளவில்லை.

ஆகக் குறைந்தது சில சிறுவர்களுக்காவது இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் இராணுவ மோதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தந்தை தனது மகனைப் பார்வையிட கறாபொல என்றும் இடத்திலிருந்த கருணா குழுவினரின் முகாமுக்கு சென்றபோது, அங்கு தனது மகன் மோதலினால் காயமுற்றிருந்ததைக் கண்டார். "அவனது காதுகள் கால்கள் என்பன கறுத்துப் போயிருந்தன." என அத்தந்தை கூறினார். "ஒரு மோதல் நடவடிக்கையின்போது தனக்குப் பக்கத்தில் ஒரு கண்ணிவெடி வெடித்ததாகவும் தனக்கு அருகிலிருந்தவர் கொல்லப்பட்டு தான் காயமடைந்ததாகவும் அவன் கூறினான்."[18] என்று அத்தந்தை கூறினார்.

[18] மட்டக்களப்பு மாவட்டத்தில், கடத்தப்பட இளைஞனொருவனின் தந்தையை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. 2006, அக்டோபர்.

ஜூன் மாதத்தில் தனது மகன் கடத்தப்பட்டதால் மனம் கலக்கமடைந்திருந்த தாயொருவரையும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சுருக்கமாக நேர்காணல் செய்தது. அவரது மகன் மோதலில் இறந்து விட்டதாக ஒக்டோபர் மாதத்தில் TMVP இனரிடமிருந்து அவருக்கு அறிவித்தலொன்று வந்தது.[19] கருணா குழுவினரின் முகாம் அமைந்திருக்கும் தீவுச்சேனை என்றும் இடத்தில் அவர்கள் உடலை அடக்கம் செய்யும் நிழ்வொன்றை நடத்தியதாக, அயலவர்கள் தெரிவித்தனர். “அந்த சிறுவனின் உடலை குடும்பத்தினரிடம் கொடுக்க மறுத்து அங்கேயே அதனைப் புதைத்து விட்டனர்” என அயலவர் ஒருவர் கூறினார்.[20] தனது அருகில் இருந்த நண்பன் கொல்லப்பட்டதாக மேலே இளைஞன் ஒருவன் கூறிய அதே நபர்தான் இதுவா என்பது சரியாகத் தெரியவில்லை.




மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஒரு பாடசாலை. கருணா குழுவினரால் பிள்ளைகள் கடத்தப்படலாம் என்ற அச்சத்தினால் சில கிராமப்புறங்களில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதையே நிறுத்திவிட்டனர்.
© 2006 Fred Abrahams/ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

ஏற்கனவே நாளாந்தம் அரச படைகளினதும் புலிகள் இயக்கத்தினதும் அத்துமீறல்களுக்கு முகம் கொடுப்பதற்கு திண்டாடிக் கொண்டிருந்த கிழக்கு மாகாண குடும்பங்களிடையே, இக் கடத்தல்களும் ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்தன. “ஏழு மாதங்களுக்கு முன்பிருந்தே நாம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது நிறுத்திவிட்டோம்,” என்று 14 வயதிலும் 15வயதிலும் இரு பிள்ளைகளைக் கொண்டிருந்த தாய் எம்மிடம் கூறினார். “இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனது கணவர் கொல்லப்பட்டதால் நான் எனது பிள்ளைகளையாவது பாதுகாக்க வேண்டும்,”[21] என இன்னொரு தாய் கூறினார்.

[19] மட்டக்களப்பு மாவட்டத்தில், கடத்தப்பட சிறுவனொருவனின் தாயை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. 2006, அக்டோபர்.

[20] மட்டக்களப்பு மாவட்டத்தில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். 2006, அக்டோபர்.

[21] மட்டக்களப்பு மாவட்டத்தில், ஒரு விதவைத் தாயுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். 2006, அக்டோபர்.

பிள்ளைகளின் பாதுகாப்புக்காக அவர்களைத் தாமே பாடசாலைக்கு கூட்டிச்சென்று திரும்ப கூட்டிவருவதாக ஏனைய பெற்றோர்கள் கூறினார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சில மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துப்படி, இளைஞர்களுடன் சேர்ந்து சில சிறார்களும் சுயவிருப்பில் கருணா குழுவில் இணைந்துகொள்ள முயற்சிக்கின்றனர். தம் "சுயவிருப்பின் பேரில்" வரும் சிறார்களைக்கூட ஆயுதமேந்திய இயக்கங்கள் தமது படைகளில் சேர்த்துக் கொள்ளுவதை, சர்வதேச சட்டங்கள் தடைசெய்துள்ளன (பார்க்க அத்தியாயம் IX). "பக்கத்துக் கிராமத்தில் 10 அல்லது 12 வயதுடைய சிறார்கள்கூட சுயவிருப்பில் இணைந்துகொள்ள விரும்புகின்றனர்," என, கடத்தப்பட் 14 வயதுடைய ஒரு சிறுவனின் தாயார் கூறினார். "ஏனைய சிறார்களைப் பார்த்து மற்றச் சிறார்களும் கவரப்படுகின்றனர். அவர்களுக்கு பணமும் வழங்கப்படுகிறது."[22]

2007 ஜனவரியில், இலங்கையில் ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பாக செயலாளர் நாயகத்தின் அறிக்கையொன்றை ஐ.நா. பகிரங்கப்படுத்தியது. அவ்வறிக்கையில் 2005, நவம்பர் 1 முதல் 2006, அக்டோபர் 21 வரை, புலிகள் இயக்கம் மற்றும் கருணா குழுவினர் ஆகிய இருசாராரினாலும் நடத்தப்பட்ட சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கை பற்றி ஆவணப் படுத்தப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில் கருணா குழுவினர் பற்றிக் குறிப்பிடும் பகுதியில், "கிழக்கு மாகாணத்தில் கருணா குழுவினர் நடத்தும் கடத்தல்கள் மற்றும்/அல்லது சிறார்களை படையில் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு உடந்தையாக செயற்படுவதில், இலங்கை அரசாங்க படைகளைச் சேர்ந்த சில சக்திகளும் ஈடுபட்டுள்ளன,"[23] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக அவ்வறிக்கையில், 2006, ஜூன் 14 மற்றும் 26ம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில், 14 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட சிறார்களை கருணா குழுவின் அங்கத்தவர்கள் கடத்திய பொழுது அவர்களுடன் இலங்கை இராணுவத்தினரும் சேர்ந்தே போயிருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கருணா குழுவினரின் கடத்தல்களின் தன்மைகள்

கருணா குழுவினரால் நடத்தப்படுவதாக கூறப்படும் கடத்தல்களிலெல்லாம் ஓரு பொதுவான தன்மை இருந்ததாக கண்ணால் கண்ட சாட்சிகள் கூறுகின்றன. சரியாக ஆறு பேர் கொண்ட குழுவினராக துப்பாக்கிகள் சகிதம் (assault rifles) அவர்கள் ஒரு கிராமத்திற்கு வருகின்றனர். சில வேளைகளில் அவர்கள் கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்திருந்தனர். ஆனால் அடிக்கடி அவர்கள் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளுடனேயே காணப்பட்டனர். சில வேளைகளில் அவர்கள் முகமூடிகளுடன் காணப்பட்டனர். ஆனால், அநேகமான நேரங்களில் அவர்களின் முகங்கள் பார்க்கக்கூடியதாகவே இருந்தன. அவர்கள் கருணா குழுவின் அங்கத்தவர்கள்தான் என்பதை பல சந்தர்ப்பங்களில் கிராமத்தவர்கள் அடையாளம் கண்டுள்ளனர். அவர்கள் மிக சரளமாக தமிழ் மொழியில் உரையாடினர் (இலங்கை இராணுவத்தினரும் பொலீசாரும் முற்று முழுதாக சிங்களவர்களாகவும், தமிழ் மொழியை சரளமாக பேசுவதற்கு முடியாதவர்களாகவும் இருக்கின்றனர்). உள்ளூர் மக்களைப் பற்றிய சகல விதமான தகவல்களும் துப்புக்களும் அவர்களிடம் இருந்ததனால், இவ்வாயுதமேந்திய நபர்கள் யாரைத் தேடுகிறார்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்தே இருந்தது.

[22] மட்டக்களப்பு மாவட்டத்தில கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். 2006, அக்டோபர்.

[23] "இலங்கையில் சிறார்களும் ஆயுத மோதல்களும் தொடர்பான செயலாளர் – நாயகத்தின் அறிக்கை," 2006, டிசம்பர் 20.

கருணா குழுவினர் சிறார்களைக் கடத்துகிறார்கள் என்று தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டபோது, அக்கடத்தல்களுக்கு புலிகள் இயக்கமே காரணம் என அவர்கள் கூறினர். ஆனால் கிழக்கு மாவட்டங்களில் உள்ள பெற்றோர்கள், கண்ணால் கண்ட சாட்சிகள், உள்ளூர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சர்வதேச நிவாரண ஸ்தாபனங்களின் பணியாளர்கள் ஆகியோர், புலிகள் இயக்கத்தாலும் தொடர்ந்து சிறார்கள் கடத்தப்படுகிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்டாலும், மேற்சொன்ன கருணா குழுவினரின் கூற்றை அவர்கள் உறுதியாக மறுத்தனர். பட்டப் பகலில் இவ்வளவு வெளிப்படையாக புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடமாட முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் கடத்தலாளர்கள் தாங்கள் கருணா குழுவின் அங்கத்தவர்கள் என தம்மை இனங்காட்டியுள்ளதோடு, அவர்கள் அந்த பகுதியைச் சேர்ந்தவர்களாதலால் கிராமத்தவர்கள் அவர்களை அடையாளம் கண்டும் உள்ளனர். கடத்தப்பட்ட தமது மகன்மாரை கருணா குழுவின் முகாமிலோ அல்லது TMVP காரியாலயத்திலோ பெற்றோர் சென்று பார்த்திருப்பதன் மூலம் இறுதியில் சகல விடயங்களும் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றன. (கீழே பார்க்க)

2006ம் ஆண்டு முழுவதும் கருணா குழுவினர் பிரதானமாக 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்களையே குறிவைத்தனர். கடத்தப்பட்டதில் ஆகக் குறைந்த வயதுடைய சிறுவனின் வயது 11 ஆகும். திருமணமானவர்கள் மற்றும் பாடசாலைக்கு செல்பவர்களை கடத்துவதை தவிர்க்க இக்குழுவினர் முயற்சித்தனர், ஆனால் அது ஒரு கடுமையான விதியாக இருக்கவில்லை. கருணா குழுவினர் பெண் பிள்ளைகளைக் கடத்திய இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிய வந்துள்ளது.[24]

பெரும்பாலும் கிராமப் புறங்களில் வாழும் கல்வியறிவற்ற, வறுமையான குடும்பங்களே இவர்களால் குறிவைக்கப் பட்டுள்ளன. அக்குடும்பங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எந்தவித வழிவகைகளோ உதவிகளையோ பெற்றுக்கொள்ள இயலாதவர்கள். ஏற்கனவே புலிகள் இயக்கத்தால் ஒரு பிள்ளை கடத்தப்பட்டோ அல்லது சுயவிருப்பில் போய் இணைந்திருந்தாலோ, அக்குடும்பங்கள் பொதுவாகவே மீண்டும் கடத்தலுக்கு ஆளாகக் கூடிய வாய்ப்பை அதிகம் கொண்டவர்களாக இருக்கின்றனர். சில சம்பவங்கள் தொடர்பாக, உள்ளூர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கூறுகின்றபடி, ஒரு குடும்பத்தில் ஒரு மகனை புலிகள் இயக்கம் கடத்த, மற்றப் பிள்ளையை கருணா குழுவினர் கடத்திக்கொண்டு போயுள்ளனர். அவ்வாறான இரண்டு சம்பவங்களுடன் தொடர்பான குடும்பங்களை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. 2006, மே மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இளைஞன் ஒருவன் கடத்தப்பட்டது தொடர்பாக அவனது தாயார் கருத்துத் தெரிவிக்கையில், “எனது இன்னொருமகன் புலிகள் இயக்கத்தில் இருக்கிறான் என்பது அவர்களுக்குத் தெரியும்,” என்றார். “நீ புலிகளுக்கு ஒரு மகனைக் கொடுத்திருக்கிறாய் ஆகவே எமக்கும் ஒரு மகனைத் தர வேண்டும்” என்று, அவர்கள் கூறியதாக அவர் எம்மிடம் கூறினார். அவரது மகன்களில் ஒருவரை புலிகள் இயக்கம் 2001ம் ஆண்டில் கடத்திச் சென்றுள்ளது.[25]

2004 மார்ச் மாதம் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா பிளவுபட்டு வந்ததன் பின்னர் அவரால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களும் இளைஞர்களுமே, கடத்தல்களுக்குள்

---

[24] UNICEF அமைப்பின் தகவல்களின்படி, அம்பாறை மாவட்டத்தில் கருணா குழுவினர் இரு பெண் பிள்ளைகளைக் கடத்தியுள்ளனர், ஆனால் திகதி வழங்கப்படவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு UNICEF இனால் வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

[25] மட்டக்களப்பு மாவட்டத்தில், கடத்தப்பட்ட மகனொருவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். 2006, அக்டோபர்.

அகப்படக்கூடிய அடுத்த பிரிவினராவர். அக்கால கட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கருணா குழுவானது, ஏற்கனவே புலிகள் இயக்கத்தால் கடத்தி படைகளில் சேர்கப்பட்டிருந்த (பார்க்க அத்தியாயம் III) 1,800க்கு மேற்பட்ட சிறுவர்களையும் சிறுமிகளையும் விடுதலை செய்திருந்தனர்.[26] பிளவு ஏற்பட்ட அடுத்தடுத்த மாதங்களில் இந்த சிறார்கள் மீண்டும் புலிகள் இயக்கத்தால் தீவிரமாக மீளப் பிடிக்கப்பட்டனர். 2006ல், அவர்களில் சிலர் கருணா குழுவினராலும் மீளப் பிடிக்கப்பட்டனர். UNICEFஇன் கருத்துப்படி, 2006 ஜனவரி 1ம் திகதிக்கும் டிசம்பர் 31ம் திகதிக்குமிடையே, கருணா குழுவினரால் பிடிக்கப்பட்ட 208 சிறார்களுள் 15பேர் இரண்டாவது முறையாக பிடிக்கப் பட்டவர்களாவர்.

கருணா குழுவினர் இளைஞர்களையும் சிறுவர்களையும் கடத்திய பின்னர், பெரும்பாலும் அவர்களை தற்காலிகமாக அருகிலுள்ள TMVP காரியாலயத்தில் தடுத்து வைப்பார்கள். மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறும்பொழுது, கடத்தல் நடந்த பின்னர், கடத்தப்பட்ட தினத்தில் தமது பிள்ளைகளை இக்காரியாலயங்களில் தாம் கண்டதாகவும், அல்லது அவர்கள் அக்காரியாலயங்களில் வைக்கப்பட்டிருந்ததாக TMVP யை சேர்ந்தவர்கள் உறுதிப்படுத்தியதாகவும் கூறினார்கள். TMVP காரியாலய கட்டிடப் பகுதிக்குள் பல சிறார்கள் நின்றதை தாம் கண்டதாக அக்கரைப்பற்று, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மனிதாபிமான உதவி நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர். “12க்கும் 14 வயதிற்கும் உட்பட்ட சிறுவன் ஒருவன் TMVP காரியாலயத்தில் நின்றதை நான் கண்டேன்” என ஒரு நிவாரணப் பணியாளர் கூறினார். “அவனது இடது கை காயமடைந்திருந்ததோடு அவனது பைக்குள் ஒரு வோக்கி டோக்கியும் இருந்தது. அந்த வளவுக்குள் இன்னும் பல சிறார்கள் இருப்பதை நான் கண்டேன். அவர்கள் எல்லோருமே 15 அல்லது 16 வயதிற்கு மேற்படாதவர்களாக இருந்ததோடு. அவர்களில் சிலரைப் பார்வையிடுவதற்கு அவர்களின் குடும்பத்தவர்கள் வந்து போயினர்.[27] செப்டெம்பர் மாதமாகின்ற பொழுது மட்டக்களப்பு நகரத்தில் அமைந்துள்ள TMVP காரியாலயத்தை ஆயுத மேந்திய சிறார்கள் காவல் காப்பதை தாம் அடிக்கடி கண்டதாக, கடத்தப்பட்ட சிறார்களின் பெற்றோர்களும் சர்வதேச நிவாரண அமைப்பைச் சேர்ந்தவர்களும் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றிலிருந்து, 2006 செப்டெம்பரில் கடத்தப்பட்ட இளவயதுப் பையனொருவனின் தாய் கூறும்போது: தான் முதலில் தனது மகனைத் தேடி செங்கலடியில் உள்ள TMVP காரியாலயத்திற்கு சென்றதாகவும், தனது மகன் மடடக்களப்பு நகரத்தில் இருப்பதாக அங்கிருந்தவர்கள் தன்னிடம் கூறியதாகவும், தெரிவித்தார். இன்னும் மூன்று தாய்மாரையும் அழைத்துக்கொண்டு அவர் TMVP காரியாலயத்திற்கு சென்றபோது, அங்கு அவர் கண்டதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் பின்வருமாறு விபரித்தார்:

> எமது பிள்ளைகள் TMVP காரியாலயத்தின் மேல் மாடியில் நிற்பதை நாம் கண்டோம். இங்கிருந்து கடத்தப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாய்மார்களே

[26] ஏப்ரல் 2004ம் ஆண்டில் 1,825 சிறார்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி வந்ததாக UNICEF பதிவு செய்துள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு UNICEF இனால் வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

[27] நிவாரணப் பணியாளர் ஒருவருடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், அம்பாறை மாவட்டம், 2006, அக்டோபர்.

நாங்கள். எங்களை அங்கிருந்து போகும்படியும் இல்லாவிட்டால் தங்களை அடிப்பார்கள் என்றும் அவர்கள் எமக்கு சைகை மூலம் காண்பித்தார்கள்.[28]

கருணா குழுவினர் கடத்தப்பட்ட சிறார்களை சில நாட்களின் பின்னர் அங்கிருந்து, தமது முகாம்களில் ஒன்றான, மட்டக்களப்பு நகரத்திலிருந்து வடமேற்காக 50 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள, பொலொநறுவை மாவட்டத்தில் வெலிகந்தை என்னும் இடத்திலுள்ள தமது முகாமுக்கு கொண்டு செல்வது வழக்கம். (வரைபடத்தைப் பார்க்கவும்). இந்த முகாம்களுக்கு சென்றுவந்த பெற்றோர்களினதும், அந்தப் பிரதேசம் தொடர்பாக நன்கு பரிச்சயமுள்ள மனிதாபிமான பணியாளர்களினதும் கருத்துப்படி, A11 பிரதான பாதைக்கு வடக்கே செவனப்பிட்டிய என்னுமிடத்தை அண்டியுள்ள பகுதியில், கருணா அணியினரின் மூன்று அல்லது நான்கு முகாம்கள் அமைந்துள்ளன. அப்பிரதேசம் இலங்கை அரசாங்கத்தின் பலமான கட்டுப்பாட்டுக்குள்ளேயே அமைந்திருக்கிறது. ஆகவே ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ அணியொன்று அங்கு இயங்குவதோ, ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்ட முகாம்களை வைத்திருப்பதோ (network of camps ) இலங்கை அரசாங்கப் படையினருக்கு தெரியாமலோ அல்லது அவர்களின் தந்திரோபாய ஒத்தாசையின்றியோ நடக்க முடியாததாகும்.




தமது கடத்தப்பட்ட பிள்ளைகளைக் கண்டதாக பெற்றோர்கள் கூறிய, மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள TMVP காரியாலயத்திற்கு முன்னால் நிற்கும் ஒரு நபர். 2006 ஒக்டோபரில் இக்கட்டித்திற்கு மூன்று பக்கமும் இலங்கைப் பொலீசாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.
© 2006 Fred Abrahams/ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

கருணா படையணியினரின் ஐந்து முகாம்களை நேரடியாகக் கண்ட, இலங்கையைச் சேர்ந்த ஒரு நிவாரணப் பணியாளரிடமிருந்தே இப்பிரதேசம் தொடர்பாக மிகத் தெளிவானதொரு விளக்கம் கிடைக்கப் பெற்றது. முத்துக்கலை என்னும் பகுதியில் மூன்று முகாம்கள் - இரண்டு கிராமத்திற்குள்ளும் ஒன்று கிராமத்திற்கு வெளியிலும் அமைந்திருந்தன என்று அவர் கூறினார். எல்லாமே கிடுகுகளால் வேலிகள் அடைக்கப்பட்டு

[28] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

மறைக்கப்பட்டுள்ளன. அந்நிவாரணப் பணியாளர் கூறியபடி, முத்துக்கலை முகாமிற்கு இலங்கை இராணுவத்தினரின் சோதனைச் சாவடியும் அமைந்திருந்தது. நான்காவது முகாம் ஒரு கள வைத்திய சாலையுடன் (field hospital) கூடியதாக, மதுரங்கல என்னும் இடத்திலுள்ள ஒரு கட்டிடத்தில் அமைந்திருந்தது. இலங்கைப் பொலீசாரின் சோதனைச் சாவடியொன்று ஏற்கனவே அவ்விடத்தில் இருந்து, பின்னர் அது அகற்றப்பட்டுள்ளது. ஐந்தாவது முகாம் கறாபொல என்னும் இடத்தில் அமந்துள்ளது,[29] என்று அவர் கூறினார்.

## குடும்பத் தொடர்புகள்

கடத்தப்பட்டு இரண்டு கிழமை தொடக்கம் ஒரு மாதகாலம் சென்ற பின்னர், சில பெற்றோர்களை தமது முகாம்களுக்கு வந்து பிள்ளைகளைப் பார்வையிடுவதற்கு கருணா குழுவினர் அனுமதி வழங்குகின்றனர். தமது பிள்ளைகள் ஆயுதபாணிகளாக்கப்பட்டு மோதல்களுக்காக தயார்படுத்தப்பட்டு இருந்ததாக (combatant) அவர்களைப் பார்க்கச் சென்ற பெற்றோர்கள் கூறினார்கள். சில வேளைகளில், மகனொருவன் கடத்தப்பட்ட குடும்பங்களுக்கு அவனது சேவைக்காக “கொடுப்பனவு” ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றில் அது, அக்குடும்பத்தினர் தமது மகனை பார்க்க வரும்போது மகனுக்கூடாக வழங்கப்பட்டுள்ளது, அல்லது போஸ்டல் ஓடர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாதத்திற்கு 6,000 ரூபாய்கள் என்ற மட்டில் அத்தொகை வழங்கப்பட்டுள்ளது (55 அமெ.டொலர்கள்). ஒரு தொழிலாளியின் மாதாந்த வருமானம் அண்ணளவாக 5,000 ரூபாய்களாகும். சில வேளைகளில் கடத்தப்பட்ட சிறார்களையும் இளைஞர்களையும் தமது மேற்பார்வையின் கீழ், தமது வீடுகளுக்குச் சென்று குடும்பங்களுடன் ஒரு இரவு தங்கி வருவதற்கும் கருணா குழுவினர் அனுமதிக்கின்றனர். மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பதிவுசெய்த ஒரு சம்பவத்தின்படி, ஒரு இளைஞன், தன்னை வீட்டிலிருந்து கடத்திக்கொண்டுபோன அதே நபர்களுடன் தனது குடும்பத்தினரைப் பார்க்கவும் சென்றுள்ளான்.[30]

## விடுதலை செய்தலும் தப்பியோடுதலும்

2006ல் சில சந்தர்ப்பங்களில் கடத்தப்பட்ட சிறார்களை கருணா குழுவினர் விடுதலை செய்தும் உள்ளனர், ஆனால் இது மிக அரிதாகவே நடைபெற்றுள்ளது. உள்ளூர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் கருத்துப்படி, அநேகமாக விடுதலை செய்யப்பட்ட பிள்ளைகளின் குடும்பங்கள், தமது பிள்ளைகள் மீண்டும் கருணா குழுவினராலோ அல்லது புலிகள் இயக்கத்தினாலோ கடத்தப்படலாம் என்கின்ற அச்சம் காரணமாக அவர்களின் விடுதலை தொடர்பாக வெளியே அறியத்தர விரும்புவதில்லை. சில குடும்பங்கள் தாம் எவ்வாறு தமது பிள்ளைகளை விடுதலை செய்துகொண்டனர் என்பதை, குறிப்பாக பணம் ஏதாவது கொடுத்து விடுதலை செய்திருந்தால், அதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளுவதை விரும்புவதில்லை. UNICEF இன் கருத்துப்படி, கடத்தப்பட்டவர்களுள் 23 சிறார்களை கருணா குழுவினர் விடுதலை செய்துள்ளனர், 18 சிறார்கள் தப்பி ஓடியுள்ளனர், இருவர் இறந்துள்ளனர்.[31]

---

[29] நிவாரணப் பணியாளர் ஒருவருடன், மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், கொழும்பு, ஒக்டோபர் 2006.

[30] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[31] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு UNICEF இனால் வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12. UNICEF அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட மரணங்களுள், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட சம்பவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை.

தப்பியோடிய அல்லது விடுதலை செய்யப்பட்ட சிறார்கள் விசேடமான அபாயத்தை எதிர் நோக்குகிறார்கள். அவர்கள் மீண்டும் கருணா குழுவினரால் குறிவைக்கப்படக்கூடிய வாய்புக்கள் இருப்பதோடு, அவர்கள் கருணா குழுவின் அங்கத்தவர்கள் என முத்திரை குத்தப்பட்டு விட்டதால், புலிகள் இயக்கத்தினால் தாக்குதலுக்கு அல்லது கடத்தலுக்கு உள்ளாகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. முன்னர் என்றால் பெற்றோர்கள், ஆபத்தில் சிக்கக்கூடிய பிள்ளைகளை கொழும்புக்கு அனுப்புவது வழக்கம், ஆனால் தற்போது அங்கும் தமிழர்களுக்கெதிரான கடத்தல்களும் தாக்குதல்களும் நிகழ்வதால், தலைநகரில் தகுந்த பாதுகாப்பிருப்பதாக இனிமேலும் பெற்றோர்கள் கருதுவதில்லை.

“எனது மகன் தப்பியோடி வந்தாலோ அல்லது விடுவிக்கப்பட்டாலோ நான் அவனை வீட்டில் வைத்திருக்க முடியாது, அது மிக மிக ஆபத்தானதாகும்,” என்று கடத்தப்பட்ட 18 வயது இளைஞனொருவனின் தாய் கூறினார். “குறிப்பிட்ட விடயத்திற்கு தகுந்தபடி, ஒன்றில் கருணா குழுவோ, இராணுவமோ அல்லது புலிகள் இயக்கமோ அவனைத் தேடி வரலாம். அவன் தனது பாதுகாப்புக்காக எங்கேதான் போவது என்பது எனக்கு தெரியாமல் இருக்கிறது. இவர்களைப் பாதுகாப்பதற்கான செயற் திட்டம் ஏதாவது இருந்திருந்தால், கருணா குழுவினரிடமிருந்து அதிகமான பிள்ளைகள் தப்பியிருப்பார்கள்” [32] என, கடத்தப்பட்ட 21 வயதுடைய ஒருவரின் தாய் ஏற்றுக்கொண்டார். “எமது பிள்ளைகள் தப்பியிருந்தாலும் அவர்கள் வீட்டுக்கு வருவதில் பிரைச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பார்கள்.” என அவர் மேலும் கூறினார். “அவர்களை வீட்டில் வைத்து பாதுகாத்திருக்க முடியாது. அதைவிடவும், எமது பிள்ளைகள் தப்பியோடினால். கருணா குழுவினர் எமது வீட்டுக்கு வந்து எமது இன்னொரு பிள்ளையை கொண்டுபோய் விடுவார்கள்.” [33]

## எண்ணிக்கைகள்

கருணா குழுவினரால் கடத்தப்பட்ட மற்றும் பலாத்காரமாக படையில் சேர்க்கப்பட்ட சிறுவர்களினதும், இளைஞர்களினதும் மொத்த எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. நோர்வே தலைமையிலான இலங்கை கண்காணிப்புக் குழுவினரும் (SLMM), UNICEF அமைப்பும் மட்டுமே வெளிப்படையாக இந்த கடத்தல்கள் தொடர்பான தகவல்களை திரட்டிக் கொண்டிருந்தன. அவ்வமைப்புக்கள் இத்தகவல்களை பெறுவதற்காக, கடத்தல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யும் குடும்பங்கள் மீதே தங்கியிருக்க வேண்டியிருந்ததால், அவ்வமைப்புக்கள் திரட்டிய எண்ணிக்கைகள் குறைவாகவே இருந்தன. ஒன்றில் அச்சம் காரணமாகவோ அல்லது, திரும்பவும் பாதிப்புகள் ஏற்படலாம் என்பதனாலோ அல்லது தமது பிள்ளைகளை விடுவிப்பதற்பான முயற்சிகளை அவை பாதிக்கலாம் என சந்தேகித்ததாலோ, பல குடும்பங்கள் கடத்தல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு விரும்பவில்லை.

SLMMஇன் கருத்துப்படி, 2006ம் ஆண்டு முழுவதும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 167வயது வந்தவர்களும், 117 சிறார்களும், 2002ம் ஆண்டு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடாத தரப்பினரால் (non-signatories) கடத்தப்பட்டுள்ளனர், என, இவ்வாறான நிலைமைகளை கண்காணிப்பதை தம் கடமையாகக் கொண்ட இலங்கை கண்காணிப்புக்

[32] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[33] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

குழு (SLMM) தெரிவிக்கின்றது.[34] எவ்வாறாயினும், “கையொப்பமிடாத தரப்பினர்கள்” என்பதற்குள் குற்றச் செயலில் ஈடுபடும் சக்திகள் அல்லது ஏனைய ஆயுதக் குழுக்கள் என்பன உள்ளடங்குகின்றன. தற்போதைக்கு கிடைக்கப் பெற்றுள்ள சாட்சியங்களின்படி இக்கடத்தல்களில் பெரும்பாலானவற்றை கருணா குழுவினரே நடத்தியிருப்பதாக கருதப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில், வயது வந்தவர்கள் 7 பேரும் சிறார்கள் 3 பேரும் கடத்தப்பட்டதாக எண்ணிக்கைகள் கூறுகின்றன.[35]

UNICEF அமைப்பின் தகவல்களின்படி, 2006, டிசம்பர் 31ம் திகதி ஆகின்ற பொழுது, 208 சிறார்கள் கருணா குழுவினரால் கடத்தப்பட்டுள்ளதாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்கள் அறிவித்துள்ளன. இவ்வாறு அறிவிக்கப்பட்ட கடத்தல்களுள் அதிகப் பெரும்பான்மையானவர்கள் சிறுவர்களே (208 இல் 206 பேர்). அநேகமான கடத்தல்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே நிகழ்ந்துள்ளன (181), அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்திலும் (23), மற்றும் திருகோணமலை மாவட்டத்திலும் நிகழந்துள்ளன (4).[36] UNICEF இன் மதிப்பீட்டின்படி, கடத்தப்பட்ட மொத்த நபர்களின் உண்மையான எண்ணிக்கை மும்மடங்கு அதிகமாக இருக்கலாம் என்பதாகும். அதற்கு காரணம், அதிகமான பெற்றோர்கள் கடத்தல்கள் பற்றி முறையிடாது இருந்தமையாகும். அத்துடன், கடத்தப்பட்ட 18 வயதிற்கு கூடியவர்கள் பற்றிய விபரங்கள் எதுவும், UNICEF இன் புள்ளி விபரங்களுக்குள் உள்ளடக்கப்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

SLMMஐப் போலல்லாது, UNICEF அமைப்பானது தகவல்களை கடத்தப்பட்டவர்களின் வயதின் அடிப்படையில் வரிசைப்படுத்தி ஆவணப் படுத்தியுள்ளது. 2006 நவம்பர் புள்ளி விபரங்களின்படி கிழக்கைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களில் கடத்தப்பட்வர்கள் பற்றிய விபரங்கள், அவர்களின் வயதுகளின் அடிப்படையில் கீழ்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

10 முதல் 12 வயதுகள்: இரண்டு கடத்தல்கள்
12 முதல் 14 வயதுகள்: எட்டு கடத்தல்கள்
14 முதல் 16 வயதுகள்: 59 கடத்தல்கள்
16 முதல் 18 வயதுகள்: 109 கடத்தல்கள்[37]

## பொலீசார் நடவடிக்கை எடுக்காத நிலமை

மேலே குறிப்பிட்டபடி, கடத்தல்கள் மற்றும் பலவந்த ஆள் சேர்ப்புப் பற்றிய பல சம்பவங்கள் பதியப்படாமலே போயுள்ளன. பொலீசாரிடம் சென்று முறையிடாது விடப்பட்ட சம்பவங்களும் இதற்குள் அடங்குகின்றன. கடத்தல்கள் தொடர்பாக பொலீசாரிடம் சென்று முறையிடாத குடும்பங்கள் இரண்டு பிரதான விடயங்கள் தொடர்பாக தமது

---

[34] SLMM மட்டக்களப்பு மாவட்டம், இலங்கை கண்காணிப்பு அமைப்பு, அத்துமீறல்களும் முறைப்பாடுகளும் ஆவணங்களின் சாராம்சம், 2006, டிசம்பர் 27. 2002ம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமுமே கையொப்பமிட்ட தரப்பினராவர். 2006, டிசம்பர் 27 வரையான SLMM இன் புள்ளி விபரங்கள

[35] SLMM அம்பாறை மாவட்டம், இலங்கை கண்காணிப்பு அமைப்பு, அத்துமீறல்களும் முறைப்பாடுகளும் ஆவணங்களின் சாராம்சம், 2006, டிசம்பர் 27. இலங்கையின் சகல மாவட்டங்களிலும், 131 சிறார்களும் 248 வயது வந்தோரும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடாத தரப்பினரால் கடத்தப்பட்டுள்ளதாக, SLMM பதிவு செய்துள்ளது.

[36] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு UNICEF இனால் வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

[37] கட்தப்பட்ட தினத்திலான வயதுகளே வழங்கப்பட்டள்ளன. பதிவுசெய்யப்பட்ட சகல கடத்தப்பட்ட நபர்களினதும் வயதுகள் UNICEF ற்கு தெளிவாக தெரியவில்லை.

கவலையைத் தெரிவிக்கின்றனர். முதலாவது அச்சம் தொடர்பானது. கடத்தல்கள் தொடர்பாக சர்வதேச அமைப்புக்களான, SLMM, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கமிட்டி (ICRC) மற்றும் பொலீசாரிடம் சென்று முறையிடக்கூடாது என, கருணா குழுவினர் பல குடும்பங்களை அச்சுறுத்தியுள்ளனர். "நான் இப்போது உங்களுடன் கதைக்கிறேன் என்று TMVPயினருக்கு தெரிய வந்தாலே அவர்கள் இரவு வந்து என்னைச் சுடுவார்கள்." என்று, கடத்தப்பட்ட 18 வயது இளைஞன் ஒருவனின் சிறியதாயார் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்.[38] அக்குடும்பங்கள் கூறிய இரண்டாவது விடயம், கடத்தல் தொடர்பாக பொலீசில் சென்று பதிவு செய்வதால், தமது பிள்ளைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அது எவ்வகையிலும் உதவப் போவதில்லை என்பதாகும். அவ்வாறு பொலீசாரிடம் சென்று முறையிட்ட குடும்பங்கள்கூட, கருணா குழுவின் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பது பற்றி சந்தேகமே தெரிவித்தனர். " அவங்கள் எல்லாமே சேந்துதான் இதைச் செய்யிறாங்கள் - அப்பிடித்தானே? " என, கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் பாட்டி மிக இலகுவான பேச்சு மொழியில் எம்மிடம் கேட்டார்.[39]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் நேர்காணல் செய்யப்பட்ட 20 குடும்பங்களில், பதினைந்து குடும்பங்கள் தமது பிள்ளைகள் கடத்தப்பட்டமை தொடர்பாக உள்ளூர் பொலீசாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இவ்வெல்லா சம்பவங்களின் போதும், பொலீசார் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். ஆனால், பல சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு பொலீசார் மறுத்ததாக, மனித உரிமைக் குழுக்களும் நிவாரண அமைப்புக்களும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தன. எவ்வாறாயினும், இந்த பதினைந்து கடத்தல்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பாக, பெற்றோர்கள் கருதுகின்றபடி முழுமையான விசாரணைகள் பொலீசாரினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஒரு சம்பவம் தொடர்பாகவேனும் ஒரு பிள்ளையாயினும் பாதுகாப்பாக அவர்கள் விடுவித்தார்கள் என்பதும் நடைபெறவிலை. "கருணாதான் இதைச் செய்தார் என்பதை நாங்கள் பொலீசாரிடம் கூறினோம், ஆனால் இதுவரை அவர்களிடமிருந்து எமக்கு எந்தவிதமான பதிலும் தரப்படவில்லை," என, செப்டெம்பரில் கடத்தப்பட்ட இளவயதுடைய ஒருவரின் தாயார் கூறினார்.[40]

பொலீசாரிடம் சென்று முறையிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பொலீசாரிடமிருந்து பலவிதமான பிரதிபலிப்புக்கள் கிடைத்தன. சில சம்பவங்களின் போது பொலீசார் மிக பக்குவமாக, தாங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதாக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் பெரும்பாலானவற்றில், குறிப்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சந்தித்த குடும்பங்கள் கூறியபடி, பொலீசார் மிகக் கடுமையாகவும் ஆத்திரத்துடனுமே நடந்து கொண்டுள்ளனர். " நாங்கள் பொலீசாரிடம் [ஏறாவூர் நகரிலுள்ள] சென்று முறையிட்டோம்." என, கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாய் கூறினார். "நாங்கள் முறைப்பாட்டைப் பெற்றுக் கொள்கிறோம் ஆனால் அவர்களைத் தேடமாட்டோம் என்று அவர்கள் கூறினார்கள். என்னை அவர்கள் ஒரு நாயைப் போலவே நடத்தினார்கள்" என அவர் மேலும் எம்மிடம் கூறினார்.[41]

---

[38] கடத்தப்பட்ட இளைஞனொருவனின் சிறியதாயார், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். அம்பாறை மாவட்டம், 2006, அக்டோபர்.

[39] கடத்தப்பட்ட சிறுவனொருவனின் பாட்டியுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். மட்டக்களப்பு மாவட்டம், 2006, அக்டோபர்.

[40] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். மட்டக்களப்பு மாவட்டம், 2006, அக்டோபர்.

[41] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். மட்டக்களப்பு மாவட்டம், 2006, அக்டோபர்.

“கருணா குழுவினர் உங்கள் பிள்ளைகளை கொண்டு போயிருந்தால். நீங்கள் ஏன் அவர்களிடம் போய் முறையிடுவதில்லை?” என, முறைப்பாடொன்றைப் பதிவுசெய்யச் சென்ற மற்றுமொரு குடும்பத்திடம் பொலீசார் கூறியதாகச் சொல்லப்படுகிறது.[42] பொலீசாரின் இத்தகைய பதிலளிக்கும் விதங்களைச் சுட்டிக்காட்டிய உள்ளூர் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர், பொதுமக்கள் தொடர்பாக பொலீசாரின் பொறுப்பு பற்றிய அக்கறை அருகி வருவதை சுட்டிக் காண்பித்தார். “கருணா குழுவினரிடமிருந்து பரிகாரம் தேடுவதற்கு நீங்கள் எங்கேதான் போவது?” என அவர் கேட்டார். “பொலீசார் அல்லது விசேட அதிரடிப்படையினரைப் (STF) பொறுத்தவரை, ஏதாவது ஒரு ஒழுங்கு முறை (mechanism) இருக்கிறது, புலிகள் அமைப்பிலும் அப்படித்தான். ஆனால் கருணா குழுவினரைப் பொறுத்தவரை, எங்கே யார் பொறுப்பு? என்பது எவருக்கும் தெரியாது”[43]

பொலீசார் முறைப்பாடுகளை பதிவு செய்து கொண்டாலும், அநேகமாக அவர்கள் மிகக் குறைந்தளவு விபரங்களையே பெற்றுக் கொண்டுள்ளார்கள், அத்துடன் முறைப்பாட்டு இலக்கத்தையும் வழங்க மறுத்துள்ளனர். கடத்தல் பற்றி முறையிடுவதற்கு தனது கணவர் ஏறாவூர் பொலீஸ் நிலையத்திற்கு சென்றதாக கடத்தப்பட்ட சிறுவன் ஒருவனின் தாயார் கூறினார். “முறைப்பாடு தொடர்பாக பொலீசார் ஒரு கோப்பைத் (File) திறந்தார்கள். ஆனால் அவர்கள் முறைப்பாட்டு இலக்கத்தை தரவில்லை,” என அவர் மேலும் கூறினார். “அவர்கள் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதாக கூறினார்கள், ஆனால் அவர்கள் எதையுமே செய்யவில்லை. ஏனைய பெற்றோர்களைப் போல், நானும் எனது மகனுடைய புகைப்படத்தைக் கொண்டு சென்றிருந்தேன், ஆனால் அவர்கள் அதை பெற்றுக்கொள்ளவில்லை.”[44]

கடத்தப்பட்ட சிறார்களின் குடும்பங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பதிவு செய்யுமாறு, அண்மையில் அரசாங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளதாக, இலங்கையின், பேரழிவு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்ஹ, டிசம்பர் 1ம் திகதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்.[45] ஆறு வாரங்களின் பின்னர் இதையே அவர் பத்திரிகையாளரிடம் திரும்பவும் கூறினார். சில சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் இராணுவத்தினரால் டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக தெரியவருகிறது. எவ்வாறாயினும், 2007, ஜனவரி 15ம் திகதியான பின்பும், கடத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு பொலீசாரிடமிருந்து எந்த விதமான பதில்களும் கிடைத்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

---

[42] நிவாரணப் பணியாளர் ஒருவருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். மட்டக்களப்பு மாவட்டம், 2006, அக்டோபர்.

[43] நிவாரணப் பணியாளர் ஒருவருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். அம்பாறை மாவட்டம், 2006, அக்டோபர்.

[44] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். மட்டக்களப்பு மாவட்டம், 2006, அக்டோபர்.

[45] நம்மினி விஜேதாச “சிறார்களை படைகளில் சேர்ப்பது தொடர்பாக புலிகள் வழங்கிய உறுதிமொழி மதிக்கப்படவில்லை – மனித உரிமைகள் அமைச்சர்,” *த ஐலண்ட்* (கொழும்பு) 2007, ஜனவரி 14.

## V. உடந்தையாக அரசாங்கமும் உத்தியோகபூர்வ மறுப்புகளும்

கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் கடத்தல்களில் அரசாங்கத்திற்கு தொடர்புகள் இருப்பது வெளிப்படையான உண்மையென, இலங்கையின் கிழக்கு மாகாண மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பரவலாகப் பேசிக்கொண்டனர். கருணா குழுவினர் இலங்கை இராணுவத்தினருடன் சோதனைச் சாவடிகளில் பணியாற்றுவதை தாங்கள் கண்டதாக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் கூறுகிறார்கள். அத்துடன் கருணா குழுவைச் சேர்ந்த ஆயுதமேந்திய அங்கத்தவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கிராமங்களில் சுதந்திரமாகவும், சில வேளைகளில் இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்தபடியும் நடமாடுவதாக, அவர்கள் கூறுகின்றனர். இக்குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் மறுக்கிறது.

சர்வதேச அமைப்புக்கள் மற்றும் இலங்கை கண்காணிப்புக் குழு என்பவற்றைப் பொறுத்தவரை இத்தொடர்பு பற்றி நன்கு தெளிவிருக்கின்றது. “கருணா குழுவினருக்கும் பாதுகாப்புப் படையின் சில சக்திகளுக்குமிடையே சில காலமாக ஒருவித கூட்டுறவு இருப்பதை நாம் அறிந்திருந்தோம்,” என, 2006 நவம்பரில், இலங்கை கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். “இது தொடர்பாக நாம் மேலதிக விபரங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம், இவ்விடயம் தொடர்பாக விரிவானதொரு அறிக்கையை நாம் அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ளோம்.”[46]

கருணா குழுவினரால் சிறார்கள் கடத்தப்படுவது தொடர்பாக, சர்வதேச அமைப்பொன்றில் பணியாற்றும் அதிகாரியொருவர் மிக வெளிப்படையாக கருத்து வெளியிட்டார். “எந்த விதத்திலும் சட்டத்துக்கு அஞ்சாமலும் மிக வெளிப்படையாகவுமே இக்கடத்தல்கள் நிகழ்கின்றன.” என்றார் அவர். “ஆனால், இங்கு என்ன நடக்கிறது என தமக்கு எதுவுமே தெரியாது என அரசாங்கம் கூறுவதைத்தான் எங்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது.”[47]

2006 நவம்பர் நடுப்பகுதி வரையிலும், கருணா குழுவினரால் நடத்தப்படும் கடத்தல்கள் பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்றே அரசாங்கம் கூறிவந்துள்ளது. ஆனால், ஆகக் குறைந்தது 2006 ஜுன் மாதம் முதல், அல்லது அதற்கு முன்னர் இருந்தே, இந்தக் கடத்தல்கள் தொடர்பாக அரசாங்கம் அறிந்திருந்தது என்பதையே, ஏற்கனவே மேலே குறிப்பிட்ட விபரங்களும், கீழே தரப்படும் விபரங்களும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

- 2006 ஜுன் மாதத்தில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமமொன்றிலிருந்து 13 சிறுவர்களையும் ஒரு இளைஞனையும் கருணா குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர். இக்கடத்தல்களை, வீதிக்கு மறுபுறமாக அமைந்திருக்கும் தமது முகாம்களில் இருந்த வண்ணம் இராணுவத்தினர் பார்த்துக்கொண்டு இருந்ததாக கடத்தப்பட்ட சிறுவர்கள் நால்வரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். இராணுவத்தினரை அதில் தலையிட்டு தடுக்கும்படி பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்தனர், இராணுவத்தினர் கருணா குழுவின் அங்கத்தவர்களுடன் கதைத்தனர். ஆனால் அவர்கள் அப்பிள்ளைகளை

---

[46] நம்மினி விஜேதாச, “ஐ.நா.வின் அலென் ரொக் இலங்கையில் பரிகாசம் செய்யப்பட்டார்,” டொரன்டோ ஸ்டார், நவம்பர் 23, 2006. தாங்கள் அறிக்கையை தயாரித்திருந்ததாகவும் அதன் உள்ளடக்கம் பகிரங்கப் படுத்தப்படாமல் இருந்ததாகவும், SLMM மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தது. (2007, டிசம்பர் 27ம் தகதி. SLMM மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் நடத்திய மின் அஞ்சல் தொடர்பாடல்)

[47] சர்வதேச நிவாரண ஸ்தாபனமொன்றின் உத்தியோக அங்கத்தவர் ஒருவருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். மட்டக்களப்பு மாவட்டம், 2006, அக்டோபர்.

விடுவிப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. (பார்க்க அத்தியாயம் VI, சம்பவம் #3)

- ஜூன் 22ம் திகதி UNICEF அமைப்பானது, கருணா குழுவினரால் நடத்தப்படும் கடத்தல்கள் தொடர்பாக பகிரங்கமான அறிக்கையொன்றை வெளியிட்டதுடன், அவை தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தது:

> கருணா குழுவினரால் பலவந்தமாக சிறார்களைக் கடத்தி படைகளில் சேர்க்கும் நடவடிக்கையை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று UNICEF இலங்கை காரியாலயம் கோரிக்கை விடுகின்றது. கடந்த வாரத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 கடத்தல் சம்பவங்கள் பற்றிய தகவல்களை எமது அமைப்பு ஆராய்ந்து உறுதிப்படுத்தியுள்ளது. இந்த வருட மார்ச் மாதம் முதல், இந்தப் பகுதியில் இருந்த 18 வயதிற்கு குறைந்த சிறார்கள் கடத்தப்பட்டு பலவந்தமாக படைகளில் சேர்க்கும் நடவடிக்கையானது அதிகரித்துள்ளது.[48]

- ஜூலை மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 48 தாய்மார்களைக் கொண்ட குழுவினர், கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்படும் கடத்தல்கள் பற்றிய மகஜர் ஒன்றை உச்ச நீதிமன்றத்திடம் கையளித்தனர். கடத்தப்பட்ட சிறார்களின் பெயர்கள் உட்பட அக்கடத்தல்கள் தொடர்பாக விரிவான சகல விபரங்களும் அடங்கிய அந்த மகஜரின் பிரதிகள் 48 தாய்மார்களினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், பேரழிவு மற்றும் மனித உரிமைகள் அமைச்சருக்கும், மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

  அம்மகஜரை இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் தாம் பார்த்ததாக, பேரழிவு மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்ஹ, டிசமபர் 1ம் திகதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். ஆனாலும். அது ஜூலை மாதமளவில் அனுப்பப்பட்டிருக்கலாம் என்பதை அவர் ஒத்துக்கொண்டார்.[49] இந்த 48 சம்பவங்களின் சில சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்தினரின் விசாரணை 2006 டிசம்பரில் ஆரம்பமானது. ஆனால் உள்ளூர் மனித உரிமை அமைப்புக்களின் கருத்துப்படி, கடத்தல்கள் தொடர்பாக கருணா குழுவை இனங்காட்ட வேண்டாம் என, பல பெற்றோர்களின் மீது இராணுவத்தினர் அழுத்தமிட்டுள்ளனர். கடத்தல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும்படி பொலீசாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக, 2007 ஜனவரியில் மகிந்த சமரசிங்ஹ ஒரு பத்திரிகையாளரிடம் கூறினார்.[50]

கடத்தப்பட்ட சிறார்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கருணா குழுவினரின் முகாம்கள் அமைந்திருக்கின்ற இடங்களைப் பார்க்கும்போது, கருணா குழுவினரின் கடத்தல்கள் அரசாங்கத்திற்கு தெரிந்தே நடக்கின்றன என்பதற்கும், அதற்கு உடந்தையாக அரசாங்கம் இருக்கிறது என்பதற்குமான மேலதிக சாட்சியங்கள் தென்படுவதைக் காணலாம்.

---

[48] "கருணா குழுவினரால் இலங்கையில் சிறார்கள் கடத்தப்பட்டு பலவந்தமாக படைகளில் சேர்க்கப்படுவதை UNICEF கண்டிக்கிறது" UNICEF செய்தி அறிக்கை, 2006, ஜூன் 22, http://www.unicef.org/infobycountry/media_34677.html (2007, ஜனவரி 9ல் பார்க்கப்பட்டது).

[49] பேரழிவு மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்ஹவுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல். ஜெனீவா, 2006, டிசம்பர் 1.

[50] நம்மினி விஜேதாச "சிறார்களை படைகளில் சேர்ப்பது தொடர்பாக புலிகள் வழங்கிய உறுதிமொழி மதிக்கப்படவில்லை – மனித உரிமைகள் அமைச்சர்," *த ஐலண்ட்* (கொழும்பு) 2007, ஜனவரி 14.

வெலிகந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள அம் முகாம்களில் தமது பிள்ளைகளைப் பார்க்கச் சென்ற பெற்றோர்களின் கருத்துப்படி, அப்பிரதேசமானது அரசாங்க கட்டுப்பாட்டின் கீழிருப்பதோடு, கருணாவின் சில முகாம்களுக்கான சோதனைச் சாவடிகள்கூட, இராணுவம் அல்லது பொலீசாரின் கண்பார்வைக்கு எட்டும் தூரத்திலேயே அமைந்துள்ளன. (வரைபடத்தைப் பார்க்க) தமது பிள்ளைகளைப் பார்க்க கருணா குழுவின் முகாம்களுக்கு செல்கின்ற பெற்றோர்களைப் பொறுத்தவரை, கருணா குழுவினருக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையேயான தொடர்புகளும் கூட்டுச் செயற்பாடும் மிக நெருக்கமாக இருக்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. கருணா முகாமுக்குச் செல்வதற்காக பெரும்பாலான பெற்றோர்கள் A11 பிரதான வீதியில், இலங்கை இராணுவத்தின் சோதனைச் சாவடியொன்று அமைந்துள்ள செவனபிட்டிய சந்திக்குச் செல்வதற்கு பேருந்திலேயே செல்கின்றனர். அங்கு தமது பிள்ளைகளைப் பார்க்கச் செல்லும் பெற்றோர்கள், தமது விபரங்களை இராணுவத்தினரிடம் கொடுக்க வேண்டும் (சில வேளைகளில் தமது அடையாள அட்டைகளையும் கொடுக்க வேண்டும்). இராணுவத்தினர் இப் பெற்றோர்களின் வருகையை அங்குள்ள கருணா குழுவினரின் அங்கத்தவர்கள் எனச் சொல்லப்படுவோருக்கு அறிவிப்பார்கள். அதன் பின்னர் பெற்றோர்கள் முச்சக்கர வண்டிகளிலோ அல்லது பேருந்திலோ கருணா முகாமிற்குச் செல்வார்கள். அப்பகுதியல் கருணா படையினர் தமிழில் பேசியபடி இலங்கை இராணுவத்தினரின் பச்சை நிற சீருடைகளை உடுத்தியிருந்ததை கண்டதாக, அப்பெற்றோர்கள் கூறினர். “அச்சந்தியல் இலங்கை இராணுவத்தினரின் சோதனைச் சாவடியொன்றுக்கு ஊடாகவே நான் செல்ல வேண்டியிருந்தது. நால்வர் கொண்ட எமது குழுவுக்கு பொறுப்பாகச் சென்றவர், அச்சோதனைச் சாவடியில் நின்ற இராணுவ அதிகாரியிடம் எமது பிள்ளைகளின் பெயர்களையும், எந்த முகாமுக்கு நாம் போகிறோம் என்ற விபரத்தையும் கொடுத்தார், இராணுவம் எங்களை போக அனுமதித்தது.”[51] என, கடத்தப்பட்ட 16 வயதுடைய மகனின் தாயார் கூறினார்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஆவணப்படுத்திய மற்றுமொரு சம்பவத்தின்படி. தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக சென்றபொழுது, அப் பெற்றோர்களிடம் இலங்கை இராணுவத்தினர் உரையாடியுள்ளனர். ஏனைய பல பெற்றோர்களுடன் சென்ற ஒரு இளைஞனின் தாயார் தனது மகன் கருணா முகாமில் இருந்ததைக் கண்டுள்ளார், அங்கு அருகிலுள்ள முகாம்களில் இருக்கும் இராணுவத்தினருக்கு, நாங்கள் ஏன் அங்கே போகிறோம் என்பதற்கான காரணம் தெரிந்தேயிருந்தது, ஆனால் கடத்தப்பட்டவர்களை பாதுகாப்பாக விடுவிப்பதற்கு அவர்கள் எதுவுமே செய்யவில்லை:

> முதல் முறையாக நாங்கள் முத்துகலை முகாமிற்குச் சென்றபோது, 30 நிமிட நேரத்திற்குள், இராணுவ முகாமிலிருந்து இரண்டு இராணுவத்தினர் அங்கு வந்து கருணா அணி நபர்களிடம், இந்த தாய்மார்கள் இங்கு என்ன செய்கிறார்கள் என வினவினர். நாங்கள் எமது பிள்ளைகளைப் பார்க்க வந்துள்ளதாக கருணா குழுவின் நபர்கள் கூறினர். இராணுவத்தினர் எம்மிடம் கேள்விகள் கேட்டு, என்ன நடந்தது என்றும் கேட்டார்கள். அவர்கள் எங்களிடம் சிங்களத்திலேயே கதைத்தார்கள். எங்களுக்கு சரியாகப் புரியவில்லை. கருணா குழுவினருடன் அவர்கள் சிங்களத்தில் கதைத்தனர். அவர்கள் இராணுவத்துடன் கதைத்த பின்னர், கருணா குழுவின் நபர்கள் எங்களை முகாமை விட்டு போகும்படி சொன்னார்கள், நாங்கள் போய் விட்டோம்.[52]

[51] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[52] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயும், உள்ளூர் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினரிடம் கூறியதன்படி, இக்கடத்தல் சம்பவங்களுக்கு அரசாங்கமும் உடந்தையாக இருப்பதை அப்பட்டமாக வெளிக்காட்டும் சம்பவம் யாதெனில், கருணா முகாமிலிருந்து ஒரு இளைஞன் தப்பியோடி தனது பாதுகாப்புக்காக இலங்கை இராணுவத்தினரின் முகாமொன்றிற்குச் சென்றான். ஆனால் இராணுவத்தினர் அவனை மீண்டும் கருணா குழுவிடமே ஒப்படைத்து விட்டனர்.[53] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இந்த சம்பவம் தொடர்பாக சுதந்திரமான விசாரணையை மேற்கொள்ளவில்லை.

கிழக்கு மாவட்டங்களில் இருந்து வெலிகந்தையை நோக்கிச் செல்லும் பிரதான பாதையானது அரசாங்கத்தின் மிகக் கடுமையான கட்டுப்பாட்டின் கீழிருப்பதோடு, அதிகளவு இராணுவ மயப்படுத்தப்பட்டும் உள்ளது. அவ் வருடம் முழுவதும் கடத்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்களையும் சிறார்களையும் அரசாங்க பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாமல் கருணா முகாம்களுக்கு கொண்டு செல்வதென்பது நடக்க முடியாத காரியமாகும். அப்பகுதியில் பிரயாணங்கள் மேற்கொள்ளும்போது பல எண்ணிக்கையான இராணுவ மற்றும் பொலீஸ் சோதனைச் சாவடிகளுக்கூடாக கடந்து சென்றேயாக வேண்டும்.




மட்டக்களப்பு நகரத்திற்கும் வாழைச்சேனைக்கும் இடையே அமைந்துள்ள A11 வீதியில் இருக்கும் ஒரு பாதுகாப்புச் சோதனைச் சாவடி. கருணா குழுவினரால் கடத்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கொண்டு செல்லப்படும்போது இதுபோன்ற பல எண்ணிக்கையான சோதனைச் சாவடிகளைக் கடந்தே சென்றிருக்க வேண்டும்.
© 2006 Fred Abrahams/ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

திருகோணமலையிலிருந்து வடக்கு-தெற்காக கடற்கரையோரமாக கீழ் நோக்கி மட்டக்களப்புவரை செல்லும் A15 வீதி நெடுகிலும், மட்டக்களப்பு நகரத்தின் வடக்கேயிருந்து கிழக்கு-மேற்காக வெலிகந்தையை நோக்கிச் செல்லும் A11 வீதி

53 கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

நெடுகிலும், 10 கிலோ மீற்றர் தூரத்திற்கு மேல் எந்த ஒரு பாதுகாப்புக் கெடுபிடியுமின்றி பயணித்தல் இயலாத காரியமாகும். 2006, அக்டோபர் 13ம் திகதி, மட்டக்களப்பில் இருந்து வெலிகந்தை வரையான சுமார் 50 கி.மீ தூரத்தை கடப்பதற்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் வாகனத்தில் பயணித்தபோது, வாகனச் சோதனை சாவடிகள் முதல் நிரந்தர முகாம்கள் 14 வரை அங்கு அமைந்திருந்ததை ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர். கிழக்கில் அதிகமாக பணியாற்றும் மனிதாபிமான அமைப்புக்களின் கருத்துப்படி, வாழைச்சேனைக்கும் வெலிகந்தைக்குமிடையே A11 வீதியில் அரசாங்க பாதுகாப்புப் படையினர் 11 சோதனைச் சாவடிகள் மட்டில் நிட்சயமாக வைத்துள்ளனர், அவற்றில் இரண்டில் சகல பயணிகளும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதிக்கப்படுகின்றனர்.[54]

அம்பாறை மாவட்டத்திலிருந்து கடத்தப்பட்ட சிறார்களையும் இளைஞர்களையும் கொண்டு செல்வதைப் பார்க்கும்போது, இவ்விடயம் இன்னும் உறுதியாக நிரூபணமாகிறது. அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு நகரத்தை நோக்கி கடற்கரையோரமாக செல்லும் A4 வீதியில் விசேட அதிரடிப் படையினர் STF இனர் மிக அதிகமாக இருப்பதைக் காணலாம். அவ்வீதியில் STF இனரின் மூன்று பாரிய முகாம்கள் அமைந்திருப்பதை, அக்டோபர் 17ம் திகதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் அவதானித்தனர்.

கடத்தப்பட்ட தமது பிள்ளைகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பெற்றோர்கள் கண்ணுற்ற இன்னுமொரு இடம், TMVP இனரின் காரியாலயமாகும். அக்காரியாலய வளவுக்குள் ஆயுதம் தரித்த சிறார்கள் நிற்பதை சர்வதேச நிவாரண அமைப்பினரும் கண்டுள்ளனர். அக்டோபர் 16ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் அக்காரியாலயத்திற்கு அருகாமையால் நடந்து சென்றபோது, அக்கட்டிடத்தின் மூன்று பக்கங்கள் இலங்கைப் பொலீசாரினால் காவல் காக்கப்படுவதை அவதானித்தனர். 2006ம் ஆண்டு அக்கட்டிடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டதில் இருந்தே அதற்கு பொலீசார் பாதுகாப்பு வழங்கி வருவதாக சர்வதேச நிவாரணப் பணியாளர்கள் கூறுகின்றனர். அக்கரைப்பற்றில் அமைந்துள்ள TMVP காரியாலயத்தையும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் அவதானித்தனர், அது STF இனரால் காவல் காக்கப்படுகிறது. திருகோணமலையில் அமைந்துள்ள TMVP காரியாலயம் கடற்படையினரால் காவல் காக்கப்படுகிறது.

கட்சிக் காரியாலயங்கள் தொடர்ச்சியாக புலிகள் இயக்கத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாவதால், TMVP காரியாலயத்திற்கு அரசாங்கத்தினால் பாதுகாப்பு வழங்கப்படுவது புரிந்து கொள்ளக் கூடியது. ஆனால், அக்கட்டிடங்களைச் சுற்றி பாதுகாப்புப் படையினரின் கடுமையான பாதுகாப்பு இருக்கையில், கடத்தப்பட்ட சிறார்கள் அந்தக் கட்டிட வளவுக்குள் இருப்பதை தாம் பார்க்கவில்லை எனக் கூறுவதையே நம்ப முடியாதுள்ளது.

அரசாங்கம், கருணா குழு ஆகிய இருசாராருமே தமக்கிடையே தொடர்புகள் இருப்பதை மறுக்கின்றனர். இலங்கையின் பாதுகாப்புத் துறைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல கருணா குழுவினர் தொடர்பாக ஊடகங்களுக்கு கூறுகையில்: "அவர்களுடன் கூட்டு வைத்துப் பணியாற்றுகிறோம் என்பதை நாம் தொடர்சியாகவே மறுத்து வந்துள்ளோம்" என்றார்.[55] 2006 நவம்பர் பிற்பகுதியில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கருணா கூறுகையில்: "நாங்கள் இராணுவத்துடன் கூட்டுவைத்து பணியாற்றுவதுமில்லை, இராணுவம் எம்முடன் கூட்டு வைப்பதுமில்லை" என்றார். அவர்களுடன் கூட்டு

---

[54] சர்வதேச நிவாரணப் பணி அமைப்பின் உத்தியோகத்தர் ஒருவருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு நகரம், 2006 அக்டோபர்.

[55] Anthony Deutsch, "இலங்கையின் கிழக்கு கரையோரப் பகுதிகளில் அரசாங்கமும் – ஆயுதப் குழுவினரும் நூற்றுக் கணக்கானவர்களை கடத்துகின்றனர்," அசோசியேட்ட் பிரஸ், 2006, அக்டோபர் 4.

வைத்திருப்பதாக கூறுவது தனது படையணியின் பெயருக்கு தீங்காக அமையும் என்பதை சுட்டிக்காட்டும் நோக்கில், “ஆயுதங்களுடன் நடமாடியதற்காக எமது 34 அங்கத்தவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.” எனவும் கருணா கூறினார்.[56]

ஆனால் அரசாங்கத்துக்கும் கருணா குழுவினருக்குமிடையே நெருக்கமான உறவிருப்பதை கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்சியாக அவதானித்துள்ளனர். கிழக்கு மாவட்டங்களில் பணியாற்றுகின்ற இரு சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகையில், கருணா குழுவினரைத் தொடர்பு கொள்ளுவதற்கு தமக்கு இருக்கும் மிக இலகுவான வழி இலங்கை இராணுவத்துக்கூடாக அணுகுவதுதான், என்றனர்.

இறுதி ஆராய்வில் பார்க்கும்பொழுது, ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவதற்கு சிறார்கள் பலவந்தமாக சேர்க்கப்படுவதை தடுப்பதும், அல்லது அதில் ஈடுபடுவதற்கென சுயவிருப்பில் வந்து சேருவதைத் தடுப்பதும், ஆயுதக் குழுக்களால் நபர்கள் கடத்தப்படாத வகையில் சிவில் மக்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்வதென்பதும் இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும். அதிலும் குறிப்பாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பாக இது முக்கியமான பொறுப்பு என்பது கவனிக்கப்படல் வேண்டும்.

## கிழக்கில் இருக்கும் படையினர்

கிழக்குப் பிரதேச மாவட்டங்களில் பெரும்பாலும், இலங்கை இராணுவம், கடற் படையினர், நிரந்தர பொலீசார் (Regular Police), மற்றும் பொலீஸ் விசேட அதிரடிப்படையினர் (STF) ஆகியோரே கிளர்ச்சி ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசாங்க பாதுகாப்புப் படையினராவர். 2006 அக்டோபரில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அப்பிரதேசத்துக்கு சென்றபோது கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே, கீழே தரப்பட்டுள்ள, பாதுகாப்பு படையணிகள் மற்றும் அவற்றுக்கு பொறுப்பான கட்டளை (command) அதிகாரிகள் பற்றிய விபரங்கள் தரப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்புப் பொறுப்பு பிரதானமாக இராணுவத்தினரிடமே உள்ளது, அதற்காக பல முகாம்களையும் மற்றும் பாதுகாப்பு சாவடிகளையும் இராணுவம் அமைத்துள்ளது. அம்மாவட்டத்தில் இயங்கும் மூன்று இராணுவ அணிகளாவன (brigades): 231 படையணி, அது கேர்ணல் வீரமன் என்பவரின் கட்டளையின் கீழ் இயங்குவதுடன், அம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதிக்கு பொறுப்பாகவும் இருக்கிறது. 232வது படையணி, அது கேர்ணல் நாபாகொட என்பவரின் கட்டளையின் கீழ் இயங்குவதுடன், அம்மாவட்டத்தின் வடக்குப் பகுதிக்கு பொறுப்பாக இருக்கிறது.[57] 233வது படையணி, அது லெப். கேர்ணல் அநுர சுபசிங்ஹ என்பவரின் கட்டளையின் கீழ் இயங்குவதுடன், அது மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ளது. மட்டக்களப்பில் உள்ள சகல படையணிகளும், வெலிகந்தையில் அமைந்துள்ள, பிரிகேடியர் தயா ரட்னாயக்காவின் கட்டளையின் கீழ் இயங்கும், 23வது டிவிசன் தலைமையகத்திற்கே வகை சொல்லல் வேண்டும். 2006ம் ஆண்டின் பெரும் பகுதியும், கிழக்கு மாகாணத்துக்கான பாதுகாப்புத் தலைமையக

---

[56] கேர்ணல் கருணா என அறியப்பட்ட வி.முரளீதரனுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், 2006, நவம்பா 29.

[57] ஆகக் குறைந்தது 2006 ஜுலை மாதத்திலிருந்து 232வது படையணிக்கு கேர்ணல் நாபாகொட கட்டளைத் தளபதியாக இருந்தார். (பார்க்க “இலங்கை: இலங்கை இராணுவத்தினரின் உடல்களை ICRC இலங்கை இராணுவத்தினரிடம் கையளித்தது,” ICRC ஊடக அறிக்கை, 2006, ஜுலை 15, http://www.icrc.org/web/eng/siteeng0.nsf/html/srilanka-regnews-150706 (2007, ஜனவரி 9ல் பார்க்கப்பட்டது). அவருக்கு முன்னர் அப்பொறுப்பில் இருந்தவர் கேர்ணல் சந்தன ருபசிங்ஹ, அவர் எப்போது அப்பதவியில் இருந்து அகன்றார் என்பது தெரியவில்லை.

கட்டளைத் தளபதியாக (Commander of Security Forces Headquarters-East) மேஜர் ஜெனரல் நிஸ்சங்க விஜெசிங்ஹ இருந்தார். டிசம்பர் மாத பிற்பகுதியில் அவருக்கு பதிலாக மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிபிட்டிய நியமிக்கப்பட்டார்.

திருகொணமலை மாவட்டத்துக்கான பாதுகாப்பின் உத்தியோகபூர்வ பொறுப்பானது, மேஜர் ஜெனரல் சமரசிங்ஹ என்பவரின் கட்டளையின் கீழ் இயங்கும், 22வது இராணுவ டிவிசனுக்கே உரியதாகும். திருகோணமலையில் கடற்படைத் தளம் அமைந்திருப்பதால் அந்நகரில் பெருந் தொகையாக கடற்படையினரின் நடமாட்டத்தைக் காணக்கூடியதாக இருப்பதுடன், விஷயமறிந்த வட்டாரங்களின் தகவல்களின்படி கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சமரசிங்ஹ என்பவரே அங்கு உத்தியோகப் பற்றற்ற கட்டளைத் தளபதி என்று கூறப்படுகிறது.

இலங்கையின் ஆயுதப் படைகளுக்கு பிரதம தளபதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி வகிப்பதோடு, பாதுகாப்பு அமைச்சும் அவரது பொறுப்பிலேயே இருக்கிறது. ஜனாதிபதியின் சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷ, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் இருக்கிறார்.[58] பாதுகாப்பு படைகளின் பிரதம தலைமை அதிகாரியாக (Chief of Defence Staff) எயார் சீப் மார்சல் டொனால்ட் பெரேரா இருக்கிறார். 2005 டிசம்பர் 6ம் திகதியில் இருந்து இராணுவத் தளபதியாக லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா பதவி வகிக்கிறார்.

2006 ஜூலை மாதத்தில் வடக்கு நோக்கி பாரிய மோதல்களுக்காக இராணுவ அணிதிரட்டல்கள் நடந்த பொழுது, திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்டங்களில் STF இனரும் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தனர்.[59] அக்கால கட்டத்தில் மட்டக்களப்பு நகரத்தின் பாதுகாப்பை STF பொறுப்பேற்றது.

கிழக்கு மாவட்டங்களில் கருணா குழுவினருக்கு பொறுப்பான பிரதேச தலைவர்கள் யார் என்பது இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது. கடத்தப்பட்டவர்களின் பெற்றோர்கள், உள்ளூர் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மற்றும் சர்வதேச நிவாரணப் பணியாளர்களின் கருத்துப்படி, மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள TMVP காரியாலயத்திற்கு பொறுப்பாக இருக்கும் பிரதீபன் என்றழைக்கப்படும் நபரே, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான TMVPயின் அரசியல் பொறுப்பாளராகவும் இருக்கிறார். மங்களன் என்றழைக்கப்படும் இன்னுமொரு நபரே மற்றுமொரு பிரதேச தலைவர் என சொல்லப்படுகிறது. அக்கரைப்பற்றில், சிந்துஜன் என அழைக்கப்படும் நபரொருவராலேயே TMVP காரியாலயம் நடத்தப்படுகிறது. வெலிகந்தைப் பகுதியில் இருக்கும் கருணா குழுவினால் மேற்கொள்ளப்படும் பலவந்த ஆள்சேர்ப்பிற்கு பாரதி என்னும் பெயருடைய நபரொருவரே பொறுப்பு எனச் சொல்லப்படுகிறது.

## ஐ.நா.வின் கண்டனம்

ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதியின் விசேட ஆலோசகரான அலன் ரொக், இலங்கையில், பிரதானமாக வடக்கு கிழக்கில் சிறார்களின் நிலைமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக, 2006, நவம்பரில் அங்கு விஜயமொன்றை மேற்கொண்டார். ஆயுத மோதல்களினால்

---

[58] கோத்தாபய ராஜபக்ஷ இராணுவத்தின் தாக்குதல் படையணி (infentry) அதிகாரியாக ஓய்வுபெற்றார். அவர் பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக 2005, நவம்பரில் பதவியேற்றார். 2006, டிசம்பர் 1ம் திகதி, அவரது வாகனத் தொடரணி மீது புலிகள் இயக்கம் நடத்திய தற்கொலைத் தாக்குதலிலிருந்து உயிர் தப்பினார்.

[59] STFஇன் உத்தியோகபூர்வ பின்னணியை அறிவதற்கு, பார்க்க http://www.police.lk/divisions/stf.html (2007, ஜனவரி 7ல் பார்க்கப்பட்டது).

பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பாக செயற்படுத்துவதற்கு, இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஏற்றுக்கொண்டு இணக்கம் காணப்பட்ட, 2003ம் ஆண்டு செயல் திட்டம் தொடர்பாகவே அவர் அதிக கவனம் செலுத்தினார். சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதை முடிவுக்கு கொண்டுவருவது, தமது படையணிகளில் இருக்கும் சிறார்களை விடுவிப்பது தொடர்பாக, இரு சாராரும் UNICEF அமைப்புடன் இணைந்து பணியாற்ற உறுதி கூறியிருந்தனர்.

அலன் ரொக் தனது 10 நாள் ஆய்வுப் பணியின் முடிவில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்ததோடு, முதற் படியாக தான் திரட்டிய தகவல்களை அறிவிப்பதற்கு ஊடக மாநாடொன்றையும் நடத்தினார். புலிகள் இயக்கமானது, செயற்திட்டத்தில் தாம் நடைமுறைப்படுத்துவதாக ஏற்றுக்கொண்டவற்றை மதித்து அதன்படி ஒழுகவில்லை, என்று அவர் முதலில் கூறினார். சிறார்களைப் படையில் சேர்ப்பது தொடர்ந்து நடைபெறுவதாகவும், தமது படைகளில் இருக்கும் நூற்றுக்கணக்கான சிறார்களை புலிகள் இயக்கம் இன்னும் விடுவிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.[60]

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில், கருணா குழுவினர் தொடர்ந்தும் பிள்ளைகளைக் கடத்தி படைகளில் சேர்ப்பதாகவும் அலன் ரொக் விமர்சனங்களை முன்வைத்தார். 2006ல் மே மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில், பராயமடையாத சிறார்கள் கடத்தப்பட்டமை தொடர்பான 135 சம்பவங்களை UNICEF அமைப்பு பதிவு செய்திருப்பதாகவும், கிடைத்திருக்கின்ற ஆதாரங்களின்படி அந்தப் போக்கு அதிகரித்தே செல்வதாகவும், அவர் மேலும் கூறினார்.

அத்துடன், கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் கடத்தல்களுக்கு "அரசாங்கத்தின் சில சக்திகளும்" உடந்தையாக இருப்பதாக, அலன் ரொக் குற்றம் சாட்டினார். மேலும் அவர் கூறுகையில், தமது ஆய்வுப் பணியானது:

> கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் மற்றும் பலவந்தமாக சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்க பாதுகாப்பு படையின் சில சக்திகள் ஆதரவு வழங்குவதாகவும், சில சந்தர்ப்பங்களில் அந்நடவடிக்கைகளில் அவர்கள் பங்கு பற்றியிருப்பது தொடர்பாகவும் மிக நம்பத்தகுந்த ஆதாரங்களைத் திரட்டியுள்ளதாக அவர் கூறினார்.
>
> மட்டக்களப்பு மாவட்டத்தில் கடத்தப்பட்ட பலருடைய பெற்றோர்களுடன் எமது ஆய்வுப் பணிக் குழு சந்திப்புக்களை மேற்கொண்டது. அதன் பிரதிபலனாக, கருணா குழுவினரது கடத்தல்களுக்கும் அரசாங்கத்தில் சில சக்திகளுக்குமிடையே தொடர்புகள் இருப்பதை கண்ணால் கண்ட சாட்சிகள் இருப்பதும் தெரிய வந்துள்ளது. கிடைக்கப் பெற்ற ஒட்டுமொத்த ஆதாரங்களின்படி, அரசாங்க பாதுகாப்பு படையின் சிலர் மிகத் தீவிரமாக இக்குற்றச் செயலில் ஈடுபடுகின்றனர் எனவும் அப்பணிக் குழு முடிவுக்கு வந்துள்ளது.[61]

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கமும் கருணா குழுவினரும் சாதகமாகவே பதிலளித்திருப்பதாக ரொக் அறிவித்தார். வயது குறைந்தவர்களை படையில் சேர்த்துக்கொள்வதற்கு தாங்கள் தடை விதிப்பதாகவும், கருணா குழுவில் சிறார்கள் எவராவது இருந்தால் அவர்களை தாங்கள் விடுவிப்பதாகவும் TMVP யினர்

[60] ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான ஐ.நா. சபையின் விசேட ஆலோசகரின் அறிக்கை, கொழும்பு, 2006. நவம்பர் 13. http://www.un.org/children/conflict/pr/2006-11-13statementfromthe127.html (2007, ஜனவரி 9ல் பார்க்கப்பட்டது)

[61] Ibid

அவரிடம் கூறினார்கள். கடத்தப்பட்ட சிறார்களை விடுவிப்பதற்காக UNICEF உடன் தாம் இணைந்து செயற்படுவதாகவும் அக்கட்சியினர் ஏற்றுக்கொண்டனர்.

கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் கடத்தல்களுக்கு உடந்தையாக பாதுகாப்பு படையினர் எவராவது செயற்படுகிறார்களா என்பதை கண்டறிவதற்காக, உடனடியான விசாரணைகளை நடத்துவதற்கு உத்தரவிடுவதாக ஜனாதிபதி ராஜபக்ஷவிடமிருந்து, தான் உத்தரவாதத்தை பெற்றுக் கொண்டதாக ரொக் தெரிவித்தார். இவ்வகையான குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், சட்டத்தை யாராவது மீறியிருந்தால் அவர்களை அதற்கு பொறுப்புச் சொல்ல வைப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.[62]

அலன் ரொக்கினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் ஏனைய பல அங்கங்கள் முற்று முழுதாக மறுத்துரைத்தன. வெளி நாட்டமைச்சர் மங்கள சமரவீர அலன் ரொக்கின் ராஜதந்திர செயற்திறன்கள் தொடர்பாக விமர்சித்தார். “சர்வதேச சமூகத்தின் பொறுப்பான அங்கத்தவரொருவராக இருந்தால். இப்படியான ஆதாரமற்ற அறிக்கையை பொறுப்பற்ற விதத்தில் வெளியிட்டிருக்கமாட்டார்,” என அவர் கூறினார். “அப்படித்தான் அவை உண்மையாக இருந்தாலும்கூட, அந்தத் தகுதியில் உள்ள ஒரு நபர், அதனை மிகவும் ஜாக்கிரதையாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரக்கூடிய பக்குவத்தைக் கொண்டிருக்க வேண்டும்,”[63] எனவும் அவர் மேலும் கூறினார். அரசுக்கு சொந்தமான டெய்லி நியூஸ் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில்: “எவ்வித ஆதாரங்களுமின்றி தான் முன்வைத்த குற்றச்சாட்டுகளினால், இலங்கையின் தேசிய நலனின் மீது அது ஏற்படுத்தக்கூடிய பாதகமான விளைவுகளுக்கு ஐ.நா. சபையின் பிரதிநிதி முகம் கொடுக்கத் தயாராக வேண்டும்,”[64] என்று எழுதியிருந்தது.

கருணா குழுவினரோடு தமக்கு தொடர்புகள் இருப்பதாக ரொக்கினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை இலங்கை இராணுவம் முற்றாக மறுத்ததோடு, அவற்றை மறுத்து அது வெளியிட்ட அறிக்கையில், “முற்று முழுதாக தவறாக திசை திருப்புகிறது” என்றும், “அவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமாதலால், அது தொடர்பாக விளக்கமளித்தலும் அவற்றை வாபஸ் பெறுவதற்கான அவசியப்பாடும் இருக்கிறது”[65] எனவும் கூறியிருந்தது. மிகவும் மனதைப் புண்படுத்தக்கூடிய வகையான கண்டனமானது, இலங்கை பாதுகாப்புப் படையின் ஊடகப் பிரிவினரால் நடத்தப்படும் இணைய தளத்திற்கூடாக தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தினாலேயே முன்வைக்கப்பட்டது. “யார் இந்த ரொக்?” என்று தலைப்பிடப்பட்டிருந்த ஒரு கட்டுரையில், கனேடிய அரசாங்கத்தில் முன்னாள் அமைச்சரும், தனது அரசியல் பிரச்சார பணிகளுக்காக கனடாவில் வாழும் புலி ஆதரவு சமூகத்தினரிடம் பணம் பெற்றுக்கொண்டு, புலிகள் இயக்கத்தை கனேடிய அரசாங்கம் தடை செய்யாமல் தடுத்து வந்தவர் என்றும், அந்த இராணுவ இணையதளம் ஐ.நா. அதிகாரி மீது குற்றம் சுமத்தியது. “எவ்வாறாயினும், கனடாவில் வாழும் தமிழ் சமூகத்தினதும் சில புலி ஆதரவாளர்களினதும் உதவியுடன் ரொக் ஐ.நா. சபையில் ஒரு பதவியை பெற்றுக்கொள்ள கூடுமாக இருந்துள்ளது,” எனவும், மேலும் அக்கட்டுரை குறிப்பிட்டிருந்தது.[66]

---

62 Ibid

63 நம்மினி விஜேதாச, “ஐ.நா.வின் அலன் ரொக் இலங்கையில் பரிகாசம் செய்யப்பட்டார்,” டொரண்டோ ஸ்டார், 2006, நவம்பர் 23.

64 “வார்த்தைகளை கவனமாக பிரயோகியுங்கள், திரு. ரொக்,” டெய்லி நியூஸ் (கொழும்பு), 2006, நவம்பர் 15. http://www.dailynews.lk/2001/pix/PrintPage.asp?REF=/2006/11/15/main_Editorial.asp (2007 ஜனவரி 2ல் பார்க்கப்பட்டது).

65 Krishan Fransis, “சிறார்களைப் படைகளில் சேர்க்கும் நடவடிக்கைக்கு இலங்கை அரசாங்கம் உதவுவதாக ஐ.நா. குற்றம் சாட்டுகிறது,” அசோசியேட்டட் பிரஸ், 2006, நவம்பர் 13.

66 “யார் இந்த ரொக்?”, தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம், 2006, டிசம்பர் 5. http://www.nationalsecurity.lk/fullnews.php?id=2665 (2006, டிசம்பர் 16ல் பார்க்கப்பட்டது).

வயது குறைந்த பிள்ளைகளை படையில் சேர்ப்பதில்லை என்னும் தமது இணக்கப்பாட்டை TMVP யினர் ஏற்றுக்கொண்டுள்ள போதும், அவர்கள் தொடர்ந்தும் ரொக்கின் கருத்துக்களை மறுத்ததோடு, கிழக்கில் உள்ள சில "எட்டப்பர்களால்" கொடுக்கப்பட்ட "ஆதாரமற்றதும் மிக அற்பத்தனமானதுமான இட்டுக்கட்டப்பட்ட தகவல்களையே" அவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார், எனக் கூறுகின்றனர்.[67]

ரொக்கிற்கு எதிராக அரசாங்கத் தரப்பிலிருந்து வெளிவந்த மற்றுமொரு முறைப்பாடானது, இலங்கையின், பேரழிவுகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்ஹவினால் முன்வைக்கப்பட்டது. ரொக் தனது கூற்றுக்களை நிரூபிக்கக்கூடிய வகையிலான ஆதாரங்களை முன்வைக்கத் தவறிவிட்டார், என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் அவர் அழுத்திக் கூறினார்.[68] 2006, நவம்பர் 7ம் திகதி, தான் ஆய்ந்து அறிந்த விடயங்கள் தொடர்பாக விபரமான குறிப்புகளுடன், ரொக், ஜனாதிபதி மகிந்தவுக்கு கடிதமொன்றை அனுப்பினார். கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் கடத்தல்களுடன் அரசாங்கத்திற்கு இருக்கும் தொடர்புகளை விசாரிப்பதற்காக, நம்பகத்தன்மையுள்ள, ஸ்தூலமான, தாக்கமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, அலன் ரொக் அக்கடிதத்தின் மூலம் கோரியிருந்தார்.[69]

இத்தகவல்கள் தொடர்பாக அரசாங்கம் பகிரங்கமாக வெளிப்படுத்தும் ஆச்சரியமானது கபடத்தனம் நிறைந்தது. மேலே ஆவணப்படுத்தப் பட்டுள்ளதன்படி, கருணாவினால் நடத்தப்பட்ட கடத்தல்கள் தொடர்பாக அரசாங்கமானது, ஆகக்குறைந்தது 2006 ஜூன் மாதத்திலிருந்தே அறிந்திருந்தது. கடத்தப்பட்ட சிறார்களின் பெற்றோர்கள் கடத்தல்கள் பற்றி பொலீசாரிடமும், சில சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்தினரிடமும் கூட முறையிட்டுள்ளனர். ஆனால் அச்சிறார்களை விடுவிப்பதற்காக இருதரப்பினருமே எந்தவித பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

2006, நவம்பர் 28ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, தனது இந்த அறிக்கைக்கும் அடிப்படையாக அமைந்த, இலங்கையில் தான் மேற்கொண்ட ஆய்வுப் பணியினை அடிப்படையாக வைத்து, கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் தொடர்பான ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அவ்வறிக்கையில், "இலங்கையின் இராணுவத்தினரும் பொலீசாரும் கருணா குழுவினருக்கு உடந்தையாக செயற்படுகிறார்கள் என்றும், சில வேளைகளில் அவர்களுடன் நேரடியாக இணைந்து பணியாற்றுகிறார்கள்"[70] என்றும் கூறியிருந்தது. கருணா குழுவினருடன் அரசுக்கு தொடர்பிருக்கிறது என்னும் கூற்றை பாதுகாப்புத் துறைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல மிக அவசரமாக மறுத்தார். "தாங்கள் கூறுவது தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது நம்பத் தகுந்த ஆதாரங்களைத் தரவேண்டும். அவை எமக்கு கிடைத்தவுடன், அதுபற்றி தொடர்ந்து ஆராய எம்மால் முடியும்," என அவர்

---

[67] "புலிகளின் குற்றச்சாட்டுகளையே ஐ.நா.வின் ரொக்கும் திரும்பத் திரும்பக் கூறுகிறார் – கருணா குழு," Asian Tribune, 2006, நவம்பர் 16, http://www.asiantribune.com/index.php?q=node/3241 (2007, ஜனவரி2ல் பார்க்கப்பட்டது)

[68] மனித உரிமைகள் மற்றும் பேரழிவுகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்ஹவுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், ஜெனீவா, 2006, டிசம்பர் 1.

[69] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு, அலன் ரொக்கிடம் இருந்து நேரடியாக கிடைக்கப்பெற்ற தகவல், 2007, ஜனவரி 16.

[70] "இலங்கை: கருணா குழுவினரால் சிறார்கள் கடத்தப்படுவதை உடனடியாக நிறுத்துக," மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் புதிய வெளியீடு, 2006, நவம்பர் 28. http://hrw.org/english/docs/2006/11/28/slanka14678.htm.

கூறினார். "அதைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் நிட்சயமாக நடவடிக்கை எடுப்பதோடு, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம்."[71] என்றும் அவர் கூறினார்.

## கருணாவின் பதில்கள்

கருணா குழுவினரின் கடத்தல்கள் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தனது அறிக்கையை வெளியிட்ட மறுதினமே, அக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு, கேர்ணல் கருணா என அறியப்பட்ட வி. முரளீதரன் எமது அமைப்புடன் தொடர்பு கொண்டார். வெளிப்படுத்தப்படாத மறைவிடம் ஒன்றிலிருந்து தொலைபேசி மூலம் நடத்தப்பட்ட உரையாடலில், சிறார்களைக் கடத்தி பலவந்தமாக படைகளில் சேர்ப்பது தொடர்பாக தனக்கு தொடர்புகள் இருப்பதாக மேற்கொள்ளப்படும் குற்றச் சாட்டுக்களை கருணா முற்று முழுதாக மறுத்தார். "அவ்வாறான விடயங்களை நான் செய்வதில்லை, சிறார்களை பலவந்தமாக படைகளில் சேர்ப்பது, மற்றும் கடத்தல்கள் போன்றவற்றை நான் விரும்புவதில்லை,"[72] என்றும் அவர் கூறினார்.

கருணா குழுவில் சேருவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 20 என்று அவர் கூறியதோடு, அதற்கு குறைந்த வயதுள்ள நபர்களை படையில் சேர்க்கும் தனது எந்தவொரு தளபதிக்கெதிராகவும் தனது அமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். "நாங்கள் அவரை இயக்கத்தைவிட்டு வெளியே அனுப்பிவிடுவோம்," என்று மேலும் கருணா கூறினார்.




[71] "சிறார் படையினர் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பு இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்கிறது," றொய்டர்ஸ், 2006 நவம்பர் 28. மேலும் பார்க்க Krishan Francis, "சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதற்கு உதவுவதை நிறுத்த வேண்டும் என இலங்கைப் படையினரை மனித உரிமைகள் குழு கோருகிறது," அசோசியேடட் பிரஸ், 2006, நவம்பர் 28.

[72] கேர்ணல் கருணா என அறியப்பட்ட வி.முரளீதரனுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், 2006, நவம்பர் 29.

மட்டக்களப்பு நகரின் மத்தியில் நிற்கும் கருணாவின் அரசியல் கட்சியான TMVPயின் பெயர்ப் பலகை. கடத்தப்பட்ட தமது பிள்ளைகள் உள்ளூர் TMVP காரியாலயத்தில் இருப்பதை தாம் கண்டதாக பெற்றோர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார்கள்.
© 2006 Fred Abrahams/ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

மேற்சொன்ன கருணாவின் கூற்றானது, இலங்கைப் பத்திரிகையொன்றுக்கு பேட்டி வழங்கிய TMVP கட்சியின் பேச்சாளர் ஒருவர், கருணா குழுவின் படையணிகளில் சிறார்கள் இருப்பதை மறுக்காத விதத்தில், வெளியிட்ட கருத்துகளுடன் முரண்படுகின்றது. "நாங்கள் சிறார்களைக் கடத்துவதில்லை, இணைந்துகொள்ள விருப்பம் தெரிவிப்பவர்களையே நாம் இணைத்துக் கொள்ளுகிறோம்," என, செங்கலடி கட்சிக் காரியாலயத்திலுள்ள ஒரு பேச்சாளர் கூறினார்.[73]

தமது படையினருக்கென தனியான ஒழுக்கக் கோவையொன்று இருப்பதாக கருணா கூறினார். அதன் பிரதியொன்றை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினருக்கும் அனுப்பிவைப்பதாக அவர் கூறினார். ஆனால், 2007 ஜனவரி 15ம் திகதி வரையும் அக்குழுவினர் அதன் பிரதியை அனுப்பி வைக்கவில்லை.

இலங்கை இராணுவத்தினருடனான தொடர்பு பற்றி கருணா கூறும்போது, அத் தொடர்பானது அரசியல் தன்மை கொண்டது என்றார். "எங்களுக்கிடையே இராணுவத் தொடர்புகள் கிடையாது, ஆனால் எமக்கு சில அரசியல் தொடர்புகள் உண்டு," என அவர் கூறினார். அவருடைய இராணுவ ரீதியான ஆதரவாளர்கள் அரசாங்க கட்டுப்பாட்டப் பிரதேசங்களில் எவ்வாறு சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருக்கிறது என்று கேட்டதற்கு: எமது அரசியல் செயற்பாட்டாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு பொலீசாருடன் தொடர்புகள் உண்டு. ஏனெனில் பொலீஸாரே அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர். மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள், அதாவது கருணா பிரதேசங்களிலேயே எமது இராணுவ அணியினர் செயற்படுகின்றனர். புலிகள் இயக்கத்திடமிருந்து நாம் சில பிரதேசங்களைக் கைப்பற்றியுள்ளோம், ஆகவே நாம் அவற்றைக் கட்டுப்படுத்துகிறோம்.

கருணாவின் கூற்றின்படி, TMVP யினருக்கு நாடு பூராகவும் 16 கட்சிக் காரியாலயங்கள் இருக்கின்றன. கடத்தப்பட்ட சிறார்களை TMVP காரியாலயங்களில் பெற்றோர் காணக்கூடியதாக இருந்தது எவ்வாறு, எனக் கேட்டதற்கு, "எவரும் வந்து எமது காரியாலயங்களைப் பார்வையிடலாம்," என அவர் பதிலளித்தார். "ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தைப் போன்று அவை வெளிப்படையானவை, எவரும் வந்து பரிசோதிக்கலாம்," என்று அவர் மேலும் கூறினார். கருணா குழுவினால் நடத்தப்பட்டதாக கூறப்பட்ட கடத்தல்கள் தொடர்பாக அவர் புலிகள் இயக்கத்தையும் அதன் ஆதரவாளர்களையும் குற்றம்சாட்டினார். "இவையெல்லாம் புலிகள் இயக்கத்தினதும் அதற்கு ஆதரவான புலம்பெயர்ந்த சக்திகளினதும் பிரச்சார நடவடிக்கைகளே." என்றும் அவர் கூறினார்.

அலன் ரொக் வெளியிட்ட கருத்துகளின் பின்னால் புலிகள் இயக்கமே இருக்கிறது, என ரொக் தொடர்பாக கருணா மிகப் பிடிவாதமாகக் கூறினார். "எம்மைப்பற்றி அலன் ரொக்கிடம் முறையிடுவதற்காக சில குடும்பங்களை புலிகள் இயக்கத்தினர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர்," என்றும் அவர் கூறினார். "இத் தகவல்களை உண்மையென்று ருசுப்படுத்துவதற்கு அலன் ரொக்கிற்கு எந்த வழி வகையுமில்லை. அலன் ரொக் எமது காரியாலயத்திற்கு வந்தபொழுது நாம் இவற்றை தெளிவாக விளக்கினோம்," என்றார்.

[73] ரங்க ஜயசூரிய, "ஐ.நா.தூதுவரை கையாண்டவர்கள் யார்?" *Sunday Observer* (Colombo), 2006, நவம்பர் 19, http://www.sundayobserver.lk/2006/11/19/fea02.asp (2007,ஜனவரி 9ல் பார்க்கப்பட்டது)

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் தொடர்பு கொண்டு பேசி 5 நாட்களின் பின்னர், கருணா, ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசாமியுடன், சிறார்கள் கடத்தல் தொடர்பாக பேசுவதற்கு தொடர்பு கொண்டார். அதிலும் முக்கியமாக, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பாக ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையில் கருணா குழுவின் பெயரும் உள்ளடக்கப் பட்டிருப்பது தொடர்பாக பேசுவதற்கே அவர் தொடர்பு கொண்டார்.[74] ஐ.நா.வின் கருத்துப்படி, சிறார்களைக் கடத்துவதை கருணா மறுத்துள்ளதோடு, சிறார்களைப் பாதுகாப்பதற்காக தாம் UNICEF உடன் இணைந்து பணியாற்றத் தயாரென்றும் உறுதி கூறியுள்ளார். கருணா குழுவும் UNICEF உம் இணைந்த நடைமுறைப் படுத்தக்கூடிய வேலைத் திட்டமொன்றை வடிவமைத்து நடைமுறைப் படுத்தவதற்கு உகந்ததாக, தான் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக கூறினார்:

1. சிறார்களை பலவந்தமாக படைகளில் சேர்ப்பதும் பயன்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறையல்ல, என்பதை விளக்கும் கொள்கை நிலைப்பாட்டு அறிக்கையை கருனா குழுவின் தளபதிகளுக்கு மீள விநியோகிப்பது.
2. சர்வதேச சமூகத்தின உதவியுடன் சிறார்களின் உரிமை தொடர்பாக தமது சகல தளபதிகளுக்கும் பயிற்சி வழங்குவது.
3. கருணா குழுவில் சிறார்கள் எவராவது இருப்பின் அரச சார்பற்ற நிறுவனங்களுடன்/அல்லது UNICEF உடன் சேர்ந்து, அவர்களை குடும்பங்களிடம் மீளச் சேர்ப்பிப்பது.
4. கருணா குழுவில் சிறார்கள் எவரும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக, UNICEF அமைப்பை கருணாவின் முகாம்களுக்கு சுதந்திரமாக செல்வதற்கு அனுமதிப்பது.[75]

கருணாவினால் விடுக்கப்பட்ட அறிக்கையை ஐ.நா.வின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசாமி வரவேற்றார். “இலங்கையில் சிறார்கள் ஆயுதக் குழுவினரால் பாவிக்கப்படுவதை தடுப்பதற்கு உதவக்கூடியதாக எடுக்கப்பட்ட பாரியதொரு நடவடிக்கையாகவே இதனைக் கருத வேண்டும்,” என அவர் கூறினார். தளத்தில் மிகவும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இது வகைசெய்யக்கூடும் என நான் நம்புகிறேன்,” என்றும் அவர் கூறினார்.[76] இதே போன்று புலிகள் இயக்கமும், தமது முகாம்களுக்கு சுதந்திரமாகச் சென்று நிலைமைகளை பரிசீலிப்பதற்கான வசதிகளை செய்து தருவதாக வாக்குறுதியைத் தரவேண்டும், என விசேட பிரதிநிதியின் காரியாலம் கூறியது.[77]

2007, ஜனவரி 2ம் திகதி, “தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (TMVP) இராணுவ பிரிவினருக்கான சட்டதிட்டங்கள்” என அவர்கள் அழைத்த விடயத்தை TMVP யினர்

---

[74] ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அறிக்கை, 2006, ஒக்டோபர், 26,
S/2006/826, http://daccessdds.un.org/doc/UNDOC/GENN06/577/95/PDF/N0657795.pdf?openElement (2007, ஜனவரி 5ல் பார்க்கப்பட்டது)

[75] “சிறார்களைப் படைகளில் சேர்த்துப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு ஐ.நா.வுடன் சேர்ந்து இயங்குவதற்கு கருணா இணக்கம் தெரிவித்துள்ளார்.” ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பாக, செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் காரியாலயம் வெளியிட்ட ஊடக அறிக்கை, 2006, டிசம்பர் 4. http://www.un.org/children/conflict/pr/2006-12-07srilankakarunaco34.html (2007, ஜனவரி 3ல் பார்க்கப்பட்டது).

[76] Ibid

[77] Ibid

UNICEF அமைப்பிடம் வழங்கினர். (பார்க்க பின்னிணைப்பு V). தமது இயக்கத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றவர்கள் சகலரும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதோடு, அவர்கள் தமது வயதை நிரூபிப்பதற்கு பிறப்பு சாட்சிப் பத்திரத்தையும், இராணுவ அணியில் சேருவதற்கான இணக்கப்பாட்டையும் வழங்க வேணடுமென அந்த சட்டதிட்டங்கள் கூறுகின்றன. தமது படைகளில் சிறார்களை பலவந்தமாக சேர்துக்கொள்ளும் சகல கருணா குழு அங்கத்தவர்களும் உடனடியாக தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் அச்சட்டதிடங்கள் கூறுகின்றன. உதாரணமாக. முகாமில் சமைத்தல் அல்லது ஆகக் குறைந்தது மூன்று மாத காலத்திற்கு விவசாயப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுவது என்பன தண்டனைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அதற்குப் புறம்பாக, கொலை, பாலியல் பலாத்காரம், கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்டால், அந்த அங்கத்தவர் உடனடியாக அமைப்பிலிருந்து நீக்கப்பட்டு பொலீசாரிடம் ஒப்படைக்கப் படுவதாகவும், அச்சட்டதிட்டங்களில் மேலும் கூறப்பட்டுள்ளது. புகை பிடித்தல், மதுபானம் பாவித்தல், மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் அமைப்பிலிருந்து வெளியெற்றப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

2007, ஜனவரி 15ம் திகதியாகின்ற பொழுது, கருணாவினால் ஏற்றுக்கொள்ளபட்ட விடயங்களை அமுல்படுத்துவது தொடர்பாகவும். அவர்களது சட்டதிட்டங்களின் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும் UNICEF அமைப்புடன் கலந்துரையாடல்கள் நடந்துகொண்டிருந்தன. UNICEFஇன் தகவலின்படி, நவம்பர் டிசம்பர் ஆகிய மாதங்களில் கருணா குழுவினர் ஆறு சிறார்களை விடுதலை செய்துள்ளனர். ஆனால் அக்காலகட்டத்தில் அவர்கள் 21 சிறார்களை கட்த்தியுள்ளனர்.[78]

## விடாது தொடரும் கடத்தல்கள்

கிழக்கிலுள்ள மாவட்டங்களில் இளைஞர்களும் சிறார்களும் கருணா குழுவினரால் கடத்தப்படுவது இன்றுவரை, விடாது தொடர்ந்து நடைபெறுகிறது. கடத்தல்கள் தொடர்பாக சரியான எண்ணிக்கைகள் கிடைக்காவிட்டாலும், உள்ளூர் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் சர்வதேச நிவாரண அமைப்புக்கள் அறிக்கையிடுகின்றபடி. கருணா குழுவினராலும் புலிகள் இயக்கத்தினாலும் கடத்தல்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இலங்கை கண்காணிப்புக் குழுவினரின் கருத்துப்படி, நவம்பர் இறுதிப் பகுதியில் கருணா குழுவினரும் புலிகள் இயக்கத்தினரும், “கடத்தல்கள் மற்றும் கொலைகள் தொடர்பாக சந்தேகிக்கப்பட்டனர்.”[79]

UNICEF அமைப்பினதும், பெற்றோர்களினதும் மற்றும் வேறு பலரினதும் தகவல்களின்படி நவம்பர் மாதத்தில் 21 கடத்தல்களும், டிசம்பர் மாத்தில் 8 கடத்தல்களும் கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[80] நவம்பரில் நடந்ததாக கூறப்படும் கடத்தல்கள், குறிப்பாக கருணா குழுவுக்கும் அரசாங்கப் பாதுகாப்பு படைகளுக்கும் எதிராக ஐ.நா.

---

78 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு UNICEFஇனால் வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

79 இலங்கை கண்காணிப்புக் குழு, SLMM,இன் வாராந்த நிலைமை அறிக்கை, 2006 நவம்பர் 20-26,” http://www.slmm.lk/W_Report?SLMM%20WSR%2020%20-26%20Nov%20public.pdf (2007, ஜனவரி 3ல் பார்க்கப்பட்டது). 2006 டிசம்பர் 4-10 வரையான SLMM இன் வாராந்த நிலைமைகள் பற்றிய அறிக்கையில், மட்டக்களப்பில் நிகழ்ந்த 12 கடத்தல்கள் தொடர்பாக தமக்குத் தெரியுமென்றும், அவற்றில் அநேகமானோர் சிறார்கள் என்றும் கூறியிருந்தது, ஆனால் இக்கடத்தல்களுக்கு யார் பொறுப்பு என்பதுபற்றி அவ்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

80 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு UNICEFஇனால் வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

குற்றச்சாட்டுக்களை வைத்த நவம்பர் 13ம் திகதிக்குப் பின்னர் நடந்தவையா, என்பது தொடர்பாக UNICEFஇன் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும், கிழக்கு மாவட்டங்களில் பணியாற்றுகின்ற உள்ளூர் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் சர்வதேச நிவாரண அமைப்புக்களின் கருத்துப்படி, அம்மாதத்தின் இறுதி இரண்டு வார காலப்பகுதியிலும் சில கடத்தல்கள் நடந்துள்ளன.

மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் (UTHR-J) அறிக்கையின்படி, டிசம்பர் மாதம் பத்தாம் திகதி மட்டில் கருணா குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று சிறுவர்களை கடத்தியுள்ளனர். இந்தச் சம்பவங்களும் UNICEF அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி சரியாகத் தெரியவில்லை.[81]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, தான் அக்கோடபர் மாதம் நடத்திய ஆய்வுப் பணியின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், கருணா குழுவினர் மேற்கொள்ளும் கடத்தல்களுக்கு அரசாங்கம் உடந்தையாக இருப்பதை சுட்டிக்காட்டி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், பேரழிவு மற்றும் மனித உரிமைகள் அமைச்சருக்கும், நவம்பர் 21ல் கடிதமொன்றை அனுப்பியது (பார்க்க பின்னிணைப்பு I). அக்கடிதமானது, கடத்தல்களில் அரசாங்கத்தின் தொடர்புகள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விருப்பம் தெரிவித்ததை வரவேற்றதோடு, அவ்விசாரணைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படப் போகின்றன என்பது பற்றிய விபரங்களையும் கோரியிருந்தது. அக்கடிதமானது டிசம்பர் முற்பகுதியில் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் 2007, ஜனவரி 15ம் திகதி வரை, ஜனாதிபதியின் காரியாலயமோ மனித உரிமைகள் அமைச்சோ அது தொடர்பாக எவ்வித பதிலையும் அனுப்பவில்லை

[81] மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் (UTHR-J) அமைப்பு, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் நடத்திய தொடர்பாடல், 2006, டிசம்பர் 20. UTHR தொடர்பாக மேலும் வாசிக்க, www.uthr.org.

# VI. கருணா குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் மற்றும் பலாத்கார ஆட்சேர்ப்பு தொடர்பான விபரங்கள்

2006ம் ஆண்டில் கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட கடத்தல்கள் தொடர்பாக, கண்ணால்கண்ட சாட்சிகள், மற்றும் பெற்றோர் ஆகியோரால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்ட விபரங்களே கீழே தரப்படுகின்றன. பாதுகாப்புக் காரணங்கள் கருதி, சில சம்பவங்கள் தொடர்பான பெயர்கள், இடங்கள், திகதிகள் போன்ற மிகக் குறிப்பான விபரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

### சம்பவம் 1 – மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இளைஞனும் ஒரு சிறுவனும், மே

2006 மே மாதத்தில் கருணா படையினர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து சிறுவனொருவனையும் இளைஞனொருவனையும் கடத்திச் சென்றனர். அவ்விருவருமே கருணா குழுவினரிடம் இருப்பதை அவர்களின் குடும்பத்தினர் கண்டுள்ளனர்.

தனது ஒரு மகனை ஏற்கனவே புலிகள் இயக்கம் 2001ம் ஆண்டில் கடத்திச் சென்றதால், தனது மற்றொரு மகனை கருணா இயக்கத்தினர் குறி வைத்திருக்கலாம் என அந்த இளைஞனின் தாய் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். 2006 மே மாதம் அந்த கடத்தல் எவ்வாறு நடந்தது என்பதை அவர் எமக்கு விளக்கினார்:

> பி.ப.8 மணியளவில் எமது வீட்டின் பின்புறமாக என்னுடனும் எனது மகளோடும், எனது மகன் உணவருந்திக் கொண்டிருந்தான். அப்போது எமது வளவுக்குள் நுளைந்த சில நபர்கள் எம்மை சூழ்ந்து கொண்டனர். இரண்டு நபர்கள் நேராக பிரதான முற்றத்திற்கு செல்ல இன்னுமிருவர் பின்புறமாக நாங்கள் உணவு அருந்திக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் எனது மகனைக் கொண்டுபோனார்கள். எமது வளவுக்கு வெளியேயும் இன்னும் பலர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் எல்லோருமாக 10பேர் மட்டில் இருந்தனர். அவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு முகங்களையும் மூடிக் கட்டியிருந்தனர். அவர்கள் அணிந்திருந்த சீருடைகளில் பதவி தராதரங்களைக் காட்டும் சின்னங்களேதும் இருக்கவில்லை. அவர்களில் ஒருவரின் கால்களைப் இறுகப் பிடித்து எனது மகனை விட்டுவிடும்படி நான் கெஞ்சினேன். அவன் என்னை முரட்டுத்தனமாக உதைத்துவிட்டான். "நாங்கள் உனது மகனை விசாரிக்கப் போகிறோம் எல்லாம் விசாரித்து முடிந்ததும் விட்டுவிடுவோம்," என அவர்களில் ஒருவன் சொன்னான். அதை அவர்கள் தமிழிலேயே கூறினார்கள். அவர்கள் அனைவரும் ரைபிள் துப்பாக்கிகளுடன் ஆயுதபாணிகளாக நின்றனர். அவை என்ன வகை துப்பாக்கிகள் என எனக்கு தெரியாது. அவர்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள்.
>
> அவர்கள் வாகனத்தில் வரவில்லை. அவர்கள் நடந்தே வந்திருந்தனர், அதேபோல் திரும்பிப் போயினர். நாங்களும் அவர்களைத் தொடர்ந்து சிறிது தூரம் போனோம், ஒரு இடத்தில் அவர்கள் வலது புறமாக ஒரு சிறு ஒழுங்கைக்குள் நுளைந்தார்கள் அத்துடன் நாங்கள் நின்று விட்டோம்.[82]

---

[82] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

அந்த தாயின் கருத்துப்படி. தனது மகனைக் கொண்டு போக வேண்டாம் என கருணா குழுவினரை அவர் கெஞ்சினார். “நீ புலிகள் இயக்கத்திற்கு ஒரு மகனைக் கொடுத்துள்ளாய், எனவே எமக்கும் ஒரு மகனைத் தரவேண்டும்,” என, அவர்களில் ஒருவன் கூறியதாக அத்தாய் கூறினார்.

கடத்தல் தொடர்பாக அக்குடும்பத்தினர் வாழைச்சேனையிலுள்ள பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அங்கிருந்த பொலீஸ் அதிகாரி ஒரு கோப்பைத் (file) திறந்து அதில் சில குறிப்புக்களை வாசித்ததாக, அத்தாய் கூறினார். அவர் சில கேள்விகளைக் கேட்ட பின்னர் முறைப்பாட்டு இலக்கத்தை அக்குடும்பத்தினரிடம் கொடுத்தார். ஒரு மாதத்தின் பின்னர் அவர்களுக்கு பொலீசாரிடமிருந்து ஒரு அறிக்கை வந்தது, அதனை மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பும் ஆராய்ந்து பார்த்தது. எவ்வாறாயினும், அக்குடும்பத்தினரைப் பொறுத்தவரை, இன்றுவரை பொலீசார் எதனையும் செய்யவில்லை.

அக்கடத்தல் நடந்ததன் பின்னர். அக்குடும்பத்தினர் மூன்று அல்லது நான்கு தடவைகள் வெலிகந்தைப் பிரதேசத்தில் கறாபொல என்னும் இடத்தில் அமைந்துள்ள TMVP காரியாலயத்திற்கு சென்றுள்ளனர். அவர்கள் இறுதியாக சென்றபோது, அவர்களது மகனைப் பார்வையிடுவதற்கு சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதாக அங்கு காரியாலயத்தில் இருந்த அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர்.

இரண்டு வாரங்களின் பின்னர், “கடத்தப்பட்ட சிறார்களை பெற்றோர்கள் பார்வையிடும் விசேட வீடு” என அழைக்கப்பட்ட இடத்தில், அவர்களின் மகனைப் பார்க்க அனுமதித்ததாக, அத்தாயார் கூறினார். அவர் மேலும் விபரிக்கையில்:

கருணா அணியினர் கறாபொல என்னும் இடத்தில் அமைந்திருந்த வீடொன்றுக்கு எம்மை அழைத்துச் சென்றனர். அங்கே நாங்கள் எமது பிள்ளைகளைக் கண்டோம்... “நான் இங்கிருந்து போக எனக்கு அனுமதி கிடையாது. நான் இங்கேதான் இருக்க வேண்டும்.” என அவன் கூறினான். அவன் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்தான், ஆயுதம் ஒன்றும் வைத்திருந்தான். “என்னால் இங்கிருந்து தப்ப முடியாது.” என்றும் அவன் மேலும் கூறினான்.” மதியத்திலிருந்து பி.ப. 3 மணிவரை, நாங்கள் அங்கு மூன்று மணி நேரமாக நின்றோம்.

அவர்களின் மகன் தன்னை கடத்திய கருணா குழுவின் அங்கத்தவர்களுடன் வேறு இரண்டு தடவைகள் வீட்டுக்கு வந்த பொழுதும், அக்குடும்பத்தினர் தமது மகனை பார்த்துள்ளனர். அவர்கள் சகலரும் ஆயுதபாணிகளாகவும் இலங்கை இராணுவச் சீருடைகளையும் அணிந்திருந்தனர், என தாயார் கூறினார். அவரது மகன் மிகவும் மாறியிருந்தான்:

> எனது மகன் இன்னுமொரு நபராக மாறியிருந்தான். அவனது நடவடிக்கைகளில் மாற்றம் தெரிந்தது. அவன் கதைக்கும் விதத்திலும் மாற்றம் தெரிந்தது. அவன் அதிகமாக அரசியல் கதைத்தான். சில சந்தர்ப்பங்களில் அவன் என்னுடன் தனியாக இருக்கும்போது மாத்திரம் நான் மீளவும் எனது மகனைக் கண்டேன். மற்றைய நபர்கள் அருகே இல்லாதபோது அவன் சாதாரணமாக இருந்தான்.

அக்கிராமத்தில் அதே தினத்தன்று கடத்தப்பட்ட மற்றுமொரு சிறுவனின் தாயாரையும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது, ஆனால் அவர் கடத்தலைக் கண்ணால் காணவில்லை. “அது இரவு ஒன்பது மணி போல் இருக்கும்... நான்

வீட்டில் இருந்தேன். எனக்கு எதுவுமே கேட்கவில்லை. அதன் பின்னர் ஒரு சத்தம் கேட்டது, தொடர்ந்து சிலர் அழுவதும் கேட்டது."[83] என அவர் கூறினார்.

அக்கடத்தல் சம்பவம் தொடர்பாக தான் வாழைச்சேனையிலுள்ள பொலீசாரிடம் முறைப்பாடு செய்ததாகவும், பொலீசார் ஒரு கோப்பைத் திறந்தாகவும், ஆனால் முறைப்பாட்டு இலக்கம் எதனையும் அவர்கள் தரவில்லை, என்றும் அவர் கூறினார். "பொலீசார் என்னிடம் எந்த கேள்வியும் கேட்கவில்லை, எனது மகனின் உருவ அமைப்பைப் பற்றியோ அவரது புகைப்படத்தையோ அவர்கள் கேட்கவில்லை," எனவும் அவர் கூறினார்.

தனது பிரதேசத்திலிருந்து கடத்தப்பட்ட சிறார்கள் மற்றும் இளைஞர்களின் தாய்மாருடன் இவரும் கறாபொல என்னும் இடத்தில் அமைந்துள்ள TMVP காரியாலயத்திற்குச் சென்றார். அங்கு அவர் தனது மகன் இருப்பதைக் கண்டார். அந்தக் காரியாலயமானது ஒரு இராணுவ முகாமினதும் பொலீஸ் நிலையத்தினதும் கண்ணுக்கெட்டிய தூரத்திலேயே இருந்தது, என்றும் அவர் கூறினார்.

அதன் பின்னர், இரண்டு சந்தர்ப்பங்களில் அவரது மகன் அவரைப் பார்க்க வீட்டிற்கு வந்துள்ளான். இரண்டு தடவைகள் அவன் வரும்போதும் சாதாரண உடையுடன் வந்தாலும் ஆயுதபாணியாகவே காணப்பட்டான், என அவர் கூறினார். "அவன் அதிகம் மாறியிருந்தான், முன்னர் இருந்ததைபோல் அவன் இருக்கவில்லை," என அவர் விளக்கினார். "தான் தற்போது கருணாவுக்கு ஆதரவாக பணியாற்றுவதாக அவன் கூறினான். ஆனால், முடிந்தால் தான் வீட்டிற்கு வருவதாகவும் கூறினான்."

### சம்பவம் 2 – மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 சிறுவர்களும் ஒரு இளைஞனும், ஜூன்

ஜூன் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் எட்டு சிறுவர்களையும் ஒரு இளைஞனையும் கருணா படையினர் கடத்திச் சென்றனர். அக்குறிப்பிட்ட தினத்தில் தங்கள் மகன்மார்கள் கடத்தப்பட்ட நான்கு குடும்பங்களை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. கடத்தல்கள் தொடர்பாகவும், தமது பிள்ளைகளை விடுவிப்பதற்காக கருணா குழுவினரின் முகாமுக்குச் சென்றமை தொடர்பாகவும் ஒரே விதமான வாங்குமூலங்களை அவர்கள் வழங்கினார்கள். அதில் மூன்று குடும்பங்களின் கருத்துப்படி, கடத்தல் நடந்த தினத்தன்று காலையில் இராணுவத்தினர் அக்கிராமத்திற்கு வந்தனர். சிறார்களும் இளைஞர்களுமாக 7பேரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்த்து வைத்து அவர்களைப் புகைப்படங்கள் எடுத்தனர். அவர்களில் நான்கு பேர் பின்னர் கருணா குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டனர். கடத்தப்படுவதற்கு தகுதியானவர்களை இனங்காட்டுகின்ற விதத்தில் செயற்படுவதன் மூலம், இலங்கை இராணுவத்தினர் கருணா குழுவினருடன் நேரடியாக கூட்டாக செயற்படுகின்றார்களா, அல்லது புலிகள் இயக்க அங்கத்தவர்களை இனங்காணுவதற்கென வழமையாக நடத்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகிறார்களா என்பது இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது.

இலங்கை இராணுவத்தினர் எவ்வாறு தமது கிராமத்திற்கு முற்பகல் 10 மணிக்கு வந்தார்கள், எவ்வாறு சிறார்களையும் இளைஞர்களையும் ஒரு குழுவாக அருகிலுள்ள

---

[83] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

வெளிக்கு கொண்டு போய், அவர்களைப் புகைப்படமெடுத்தார்கள் என்பதை, கடத்தப்பட்ட இளைஞனொருவனின் தாயார் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு விபரித்தார்:

> அவர்கள் எமது பிள்ளைகளை சுற்றி வளைத்தார்கள், சில யார் தூரத்துக்கு அப்பால் இருந்த ஒரு வெளியான இடத்திற்கு அவர்களை கொண்டு போனார்கள். அவர்களை அங்கு வைத்து புகைப்படமெடுத்தார்கள். அத்துடன் எங்கள் பிள்ளைகளின் அடையாள அட்டைகளைக் காண்பிக்கும்படியும் கேட்டார்கள். அந்தப்பகுதி முழுவதையும் சுற்றிவர அதிகமான இராணுவத்தினர் நின்றிருந்தனர். அவர்கள் இராணுவ ட்ரக் வண்டிகளில் வந்திருந்தனர். அவர்கள் வீடு வீடாக வந்து பெற்றோர்களைத் தவிர்த்து, பிள்ளைகளை மாத்திரம் கூட்டிச் சென்றனர். பின்னர் அவர்கள் பிள்ளைகளை அருகிலிருந்த வெளிக்கு கூட்டிச் சென்றார்கள். அவர்கள் பிள்ளைகளை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்களோ என நான் அச்சமடைந்தேன். ஏழு பிள்ளைகள் இராணுவத்தினரால் வெளியான இடத்திற்கு கொண்டு போகப்பட்டனர். இந்த ஏழு பிள்ளைகளில் நான்கு பேர் அதே தினமிரவு [கருணா குழுவினரால்] கடத்தப்பட்டனர். "நாங்கள் பிள்ளைகளை புகைப்படமெடுக்க வேண்டும் அதன் பின் அவர்களை விட்டுவிடுவோம்," என இராணுவத்தினர் கூறினார்கள். அடையாள அட்டைகளையும் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் பெற்றோர்களை வரவேண்டாம் என்று உத்தரவிட்டார்கள். "உங்கள் பிள்ளைகளை பாதுகாப்பதற்காக நாங்கள் அவர்களைப் புகைப்படம் எடுக்கப்போகிறோம், அப்போது கருணா அணியினர் எங்கள் பிள்ளைகளை கடத்த மாட்டார்கள்," என்றும் ஒரு இராணுவத்தினர் எம்மிடம் கூறினார். அவர்களிடம் ஒரு சிறிய புகைப்படக் கருவி இருந்தது. அங்கு பல இராணுவத்தினர் வந்திருந்தனர். எத்தனை பேர் என்று என்னால் சொல்ல முடியாது, சுமார் 200 பேர்மட்டில் இருப்பார்களா. அதன் பின்னர் அதே தினமிரவு அப்பிள்ளைகள் கடத்தப்பட்டார்கள்.[84]

கடத்தப்பட்ட அவ்விளைஞனின் தந்தையின் கருத்துப்படி, இரவு 11 மணியளவில் கருணா படையினர் தமது கிராமத்திற்கு வந்தார்கள். அவர்கள் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு கறுப்பு முகமூடிகளையும் அணிந்திருந்தனர். அவர்கள் தமிழிலேயே கதைத்தனர், அவர்கள் கருணா குழுவினர்தான் என்பது எனக்குத் தெரியும், ஏனெனில், பின்னர், கடத்தப்பட்ட எனது மகனை நான் கருணா குழுவின் முகாமிலேயே சென்று பார்த்தேன். அவர் மேலும் விபரிக்கையில்:

> நான் அங்கேதான் நின்றேன், நான் எல்லாவற்றையும் பார்த்தேன். அது நடப்பதை நான் தடுக்க முயன்றேன் ஆனால் கடத்தலாளர்கள் என்னைச் சுட்டுவிடுவதாக மிரட்டினார்கள். எனது மகன் அழுது கொண்டிருந்தான். எனது மனைவி அவர்களைத் தடுக்க முயன்றார், ஆனால் அவர்கள் அவரை பின்புறமாக தள்ளிவிட்டார்கள்.[85]

கடத்தப்பட்ட சிறார்கள் மற்றும் இளைஞர்களினது பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக பல தடவைகள் வெலிகந்தைப் பகுதியில் அமைந்துள்ள கருணா குழுவினரின் முகாமுக்குச் சென்றுள்ளதாக, அத்தாயும் தந்தையும் கூறினார்கள். அங்கு போவதற்காக அப்பெற்றோர்கள் A11 பிரதான வீதியில், இராணுவ மற்றும் பொலீசாரின் பாதுகாப்புச் சாவடிகள் அமைந்துள்ள செவனபிட்டிய சந்திக்குச் செல்லும் பேருந்திலேயே

---

[84] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[85] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தந்தையுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

செல்கின்றனர். அங்கு செல்லும் பெற்றோர்கள் தமது பெயர் விபரங்களை அங்கு கடமையில் நிற்கும் இராணுவத்தினரிடம் கொடுக்க வேண்டும். அவர்கள் அந்த விபரங்களை கருணா குழுவினருக்கு வழங்குவதோடு பெற்றோர்களின் வருகையையும் அவர்களுக்கு அறிவிப்பார்கள். அதன் பின்னர், இரண்டு அல்லது மூன்று மைல் தொலைவிலுள்ள கருணா முகாமிற்கு செல்வதற்கு, பெற்றோர்கள் முச்சக்கர வண்டிகளில் (ரிக்ஷோ) செல்வார்கள். கருணா குழுவினர் தமிழ் மொழியில் பேசியதோடு இலங்கை இராணுவத்தினரின் பச்சை நிறமான சீருடைகளை அணிந்திருந்தார்கள், என அவர்கள் தெரிவித்தனர்.

அத்தாயின் கூற்றுப்படி, அவர் மூன்றாவது முறையாக சென்றபோதே தனது மகனைச் சந்திக்க முடிந்தது. அவரோடு சேர்ந்து கடத்தப்படட ஏனைய சிறார்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய ஏழு பேருடன் அவன் இன்னுமொரு முகாமில் இருந்தான். "காட்டுப் பிரதேசத்தில் இருந்த முகாமின் பகுதிக்குள் சென்று, அங்கு காவலுக்கு நின்றவர்களிடம் அறிவித்து விட்டு பிரதான வாயிலில் ஒரு மணித்தியாலம் வரை நாங்கள் நின்றிருந்தோம்," என அவர் கூறினார். "எனது மகன் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு ஒரு ஆயுதமும் வைத்திருந்தான், என்னைக் கண்டதும் அவன் அழுதான்."

கடத்தல் நடந்து இரு நாட்களுக்குப் பின்னர், அச்சம்பவம் தொடர்பாக முறையிடுவதற்கு அவனது தந்தையார் ஏறாவூர் பொலீஸ் நிலையத்திற்குச் சென்றார். பொலீசார் ஒரு கோப்பைத் திறந்தார்கள், ஆனால் அவர்கள் முறைப்பாட்டு இலக்கத்தை தர மறுத்து விட்டார்கள், என்றும் அவர் கூறினார். "உங்கள் பிள்ளைகளை கருணா பிடித்தால் நீங்கள் முறைப்பாடு செய்ய இங்கே வருகிறீர்கள், ஆனால் புலிகள் இயக்கம் பிடித்தால் நீங்கள் ஒரு நாளும் இங்கே வருவதில்லை." என அப்பொலீஸ் அதிகாரி குறிப்பிட்டதாக, அத்தந்தை கூறினார்.

அன்றைய தினம் காலை இலங்கை இராணுவத்தினர் வந்தது முதல், இரவு கருணா குழுவினர் வந்து கடத்திய சம்பவங்கள் தொடர்பாக, கடத்தப்பட் சிறுவனொருவனின் தாயொருவரை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தனியாக நேர்காணல் செய்தபோது, அவரும் அதே மாதிரியான விபரங்களையே தெரிவித்தார்:

> கடத்தல் நடந்த அன்றைய தினமிரவு நாங்கள் எமது வீட்டின் பினபுறம் அமர்ந்திருந்தோம், அதிகாலை 1 மணிக்கு தீடீரென, இலங்கை இராணுவத்தினரின் சீருடையில் ஆயுதமேந்திய நபர்கள் தோன்றினார்கள். ஏழு அல்லது எட்டு நபர்களால் நாங்கள் சூழப்பட்டோம். அவர்கள் எப்படி வந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு எதுவுமே கேட்கவில்லை.
>
> அதே தினம், ஆனால் காலை 10 மணிக்கு இராணுவத்தினர் வந்து எமது பிரதேசத்தை சுற்றி வழைத்து எமது பிள்ளைகளை வீதிக்கு மறுபுறமுள்ள ஒரு வெளியான பகுதிக்கு கூட்டிச் சென்றார்கள். அவர்கள் எனது மகனையும் அங்கு கூட்டிச் சென்றனர். அவர்கள் வாகனங்களில் வந்திருந்தனர். அவர்கள் பிள்ளைகளை தமது அடையாள அட்டைகளுடன் வரும்படி கூறியிருந்தனர். இராணுவத்தினர் அரைகுறைத் தமிழில் பேசினார்கள். "பெற்றோர்கள் எவரும் வரக்கூடாது, பிள்ளைகள் மட்டும்தான்," என அவர்கள் கூறினர். அவர்கள் ஏழு சிறுவர்களை அவ்வெளிக்கு கூட்டிச்சென்று அவர்களை புகைப்படம் எடுத்தனர். அதே தினம் இரவு, அந்த ஏழு பேரில் நான்குபேர் கடத்தப்பட்டனர். அங்கு 20 இராணுவத்தினர் வந்து நின்றனர். சரியான எண்ணிக்கை எனக்கு மிக நிட்சயமாகத் தெரியும். அவர்கள் ஒரு காரிலும் ஒரு ட்ரக்டரிலும் வந்திருந்தனர். பின்பு அவர்கள் பிள்ளைகளை விடுவித்து விட்டு சென்றுவிட்டனர்.

> அதே தினம் இரவு திடீரென வந்த நபர்களும் அன்று காலையில் வந்த இராணுவத்தினர் அணிந்திருந்த அதே சீருடைகளையே அணிந்திருந்தனர், ஆனால் அவர்கள் முகமூடிகளை அணிந்திருந்ததோடு மிக நல்ல தமிழில் கதைத்தார்கள். அவர்கள் ஏழு அல்லது எட்டுப்பேர், சகலரும் ஆயுதபாணியாக இருந்தனர். அவர்கள் எமது பிள்ளைகளை கொண்டு போகாமல் தடுக்க நாங்கள் முயற்சித்தோம், ஆனால் அவர்கள் எங்களை பின்னால் தள்ளிவிட்டு எங்களை உதைத்தார்கள். எனது மகன் அழுதான். அந்தப் பகுதியைச் சேர்ந்த எட்டு சிறுவர்கள் அன்றிரவு கடத்தப்பட்டார்கள்.[86]

சற்று நேரத்தின் பின்பு, கடத்தப்பட்ட சிறார்கள் மற்றும் இளைஞர்களின் பெற்றோர்கள் ஏறாவூர் பொலீஸ் நிலையத்திற்குப் போனார்கள், என அத்தாயார் கூறினார். தான் பொலீஸ் நிலையத்திற்குப் போகவில்லை என்றும், அங்கு என்ன நடந்தது என்பதை தனது கணவர் விபரித்ததாகவும், அவர் கூறினார்:

> கடத்தல்கள் தொடர்பாகத் தனக்குத் தெரியும் என்று ஒரு பொலீஸ் அதிகாரி கூறினார். அதற்குப் பொறுப்பானவர்களின் பெயர்கள் என்ன என்று அவர் கேட்டார். அவர்களின் பெயர்கள் எமக்குத் தெரியாதென்றும், ஆனால் அவர்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தமக்குத் தெரியும் என்றும் என் கணவர் கூறினார். அவர் சிலரை அடையாளம் கண்டுகொண்டிருந்தார். எனது கணவருக்கு இந்தப் பிரதேசம் நன்றாகத் தெரியும். புலிகள் இயக்கம் இருந்த போது அவர் அவர்களுக்காக சில வேலைகளைச் செய்துள்ளார். அப்போது புலிகள் இயக்கத்தோடு யார் யார் இருந்தார்கள். இப்போது கருணா குழுவோடு யார் யார் இருக்கிறார்கள் என்பது அவருக்கு நன்கு தெரியும். பொலீசார் முறைப்பாட்டு இலக்கத்தைக் கொடுக்கவில்லை. அவர்கள் இதுவரை எதனையும் செய்யவுமில்லை.

தமது மகன்மாரைப் பார்ப்பதற்காக கருணாவின் முகாமுக்குச் சென்ற பெற்றோர்கள் குழுவுடன் இத்தாயும் ஒருவராகச் சென்றிருந்தார். "நான் அங்கு சென்றிருந்தேன், நான் மூன்று முறை எனது மகனை அங்கு பார்த்திருக்கிறேன்,' என அவர் கூறினார். "அவன் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு கையில் ஆயுதமும் வைத்திருந்தான்."

அத்தாயாரின் கருத்துப்படி, முதல் முறையாக அவர் தனது மகனை வெலிகந்தைக்கு அருகாமையில் கறாபொல என்னும் இடத்திலுள்ள முகாமிலேயே பார்த்தார். அம்முகாமுக்கு போவதற்கு அப்பெற்றோர்கள் வெலிகந்தைக்கு செல்லும் வீதியில் அமைந்துள்ள சந்திக்குப் போகும் பேருந்திலேயே சென்றனர், அச்சந்தியின் பெயர் அவருக்கு சரியாகத் தெரியவில்லை. அச்சந்தியில் இலங்கை இராணுவத்தினரின் சோதனைச் சாவடி அமைந்திருந்ததாகவும், தாங்கள் பார்ப்பதற்காகச் சென்ற சிறுவர்களினதும் இளைஞர்களினதும் பெயர்களை அக்குடும்பங்களுக்கு தலைமை தாங்கிச் சென்றவர், இராணுவத்தினரிடம் கொடுத்ததாகவும் அவர் கூறினார். இராணுவத்தினர் பெற்றோர்களை சோதனைச் சாவடிகளுக்கூடாக செல்ல அனுமதித்தனர். அங்கிருந்து அவர்கள் முச்சக்கர வண்டிகளில் முகாமுச்குச் சென்றனர். அத்தாயார் இரண்டாவது தடவை, வெலிகந்தைக்கு அருகிலுள்ள தீவுச்சேனை என்னும் இடத்தில் அமைந்துள்ள முகாமிலேயே தனது மகனைப் பார்ப்பதற்குச் சென்றார்.

---

86 கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

“நான் அவனைப் பார்த்தபோது அவன் மிக கவலையுடனேயே இருந்தான்,” என அத்தாயார் கூறினார். “அவன் மிகவும் மெலிந்து போய்க் காணப்பட்டான்.” தனக்கு மாதக் கொடுப்பனவு ஒன்று கிடைப்பதாகவும் அதனை தான் வீட்டுக்கு அனுப்புவதாகவும் கூறினான். தனது மகனிடமிருந்து 5,000 ரூபாய்களுக்கான இரண்டு போஸ்டல் ஓடர்களை அக்குடும்பம் பெற்றுக்கொண்டுள்ளது. (46அமெ.டொ.)

அதே தினத்தில் கடத்தப்பட்ட இன்னொரு இளைஞனின் தந்தையும் ஏனைய குடும்பங்களின் வாக்கு மூலங்களை ஆமோதித்ததோடு, தான் கருணா முகாமுக்கு சென்றது தொடர்பாக மேலதிக விபரங்களையும் வழங்கினார்.

இரவு 10 மணியளவில், இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்தபடி கருணா குழுவைச் சேர்ந்த 25 அல்லது 30 பேர் அவரின் குடும்பம் வாழ்ந்த பிரதேசத்தைச் சுற்றி வளைத்தனர், என அவர் கூறினார். அவர்கள் முகமூடிகளை அணிந்திருக்கவில்லை, ஆனால் அவர்கள் தலையில் துணிகளைக் (bandanas) கட்டியிருந்ததோடு, ஆயுதங்களும் வைத்திருந்தனர். அவை T 56 அல்லது AK 47 ரக துப்பாக்கிகள் என அத்தந்தை அடையாளப்படுத்தினார். ஓரிரு நபர்கள் உபஇயந்திரத் துப்பாக்கிகளை (Submachine guns) வைத்திருந்தார்கள், என்றும் அவர் கூறினார். அவர்கள் எல்லோரும் தமிழிலேயே கதைத்தார்கள்.[87]

சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட எட்டுப் பேரை அந்த நபர்கள் சுற்றி வளைத்து பிரதான வீதியை நோக்கி கூட்டிச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து அத்தந்தை வீதிவரை சென்றார். அங்கு நின்ற கருணா குழு அங்கத்தவர்கள் அத்தந்தையிடம், இச்சிறுவர்கள் புலிகள் இயக்கத்தோடு தொடர்பு வைத்துள்ளதாக சந்தேகங்கள் உண்டு, எனவே இவர்களை விசாரிக்க வேண்டும் என அத்தந்தையிடம் கூறினார்கள். இவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள, எனவும் அவர்கள் கூறினர். ஆனால் எட்டு சிறார்களையும் அவர்கள் கூட்டிச் சென்றுவிட்டனர்.

கடத்தல் நடந்து சிறிது நேரத்தின் பின்னர், இக்குற்றச் செயல் தொடர்பாக முறையிடுவதற்காக, ஏறாவூருக்கு அருகேயுள்ள பொலீஸ் நிலையத்திற்கு அத்தந்தை சென்றார். பொலீசார் குறிப்புக்களை பெற்றுக்கொண்டதோடு கோப்பு ஒன்றையும் திறந்தனர், என அத்தந்தை கூறினார். ஆனால் பொலீசார் முறைப்பாட்டின் இலக்கத்தை குடும்பத்திடம் கொடுக்க மறுத்துவிட்டனர். ஆறு வாரங்களின் பின்னர், கடத்தப்பட்ட தமது மகன் வெலிகந்தைப் பகுதியில் கறாபொல என்னுமிடத்தில் அமைந்துள்ள கருணா முகாமில் இருப்பதாக அக்குடும்பத்தினருக்கு வதந்தியொன்றின் மூலம் தெரியவந்தது. அந்தப் பிரதேசத்தில் வாழும் தனது நண்பரொருவரை அத்தந்தை தொடர்பு கொண்டு, தமது மகன் பற்றி விசாரிக்கும்படி கூறினார். மூன்று நாட்களின் பின்னர் அந்த நண்பர் தொடர்பு கொண்டு அவரின் மகன் அங்கு இருப்பதாக அறிவித்தார். கடத்தப்பட்ட ஏனைய சிறுவர்களின் குடும்ப அங்கத்தவர்களுடன் தானும் தமது பிள்ளைகளைப் பார்க்க, எவ்வாறு போனார்கள் என்பது பற்றி அத்தந்தை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு விபரித்தார்:

> நாங்கள் செவனபிட்டிய என்னும் இடத்திற்கு பேருந்தில் சென்று அங்கிருந்து முச்சக்கர வண்டிகள் மூலம் கறாபொல என்னுமிடத்திற்குச் சென்றோம். முதலில் ஒரு இராணுவ முகாம் இருந்தது. அதனைத் தொடர்ந்து கருணாவின் முகாம்

---

[87] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தந்தையுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

இருந்தது. அது ஒரு அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகும். முச்சக்கர வண்டிச் சாரதி அவ்விடத்தை நன்கு அறிந்திருந்தார். அது செவனப்பிட்டிய என்னும் இடத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்திருந்ததோடு, அங்கு செல்வதற்கு ஒருவருக்கு 30 ருபாய்கள் செலவாகியது.

அவர் மேலும் தொடர்ந்தார்:

நாங்கள் பிரதான வாயிலுக்குச் சென்றோம். அங்கு கருணா குழுவைச் சேர்ந்த நபர்கள் நின்றிருந்ததோடு, சிலர் சீருடைகளுடனும் சிலர் சாதாரண உடைகளுடனும் நின்றிருந்தனர். அதில் ஒருவர் எங்களை நோக்கி, “இங்கே என்ன செய்கிறீர்கள்? இங்கே ஏன் வந்தீர்கள்?” என வினவினார். “நான் எனது மகனைப் பார்க்க வேண்டும;” என நான் பதிலளித்தேன். “பொறுங்கள்... பொறுங்கள்;” என்று கூறிவிட்டு அவர் இரண்டு கதிரைகளைக் கொண்டு வந்தார். அதன் பின்பு உணவும் தண்ணீரும் கொண்டு வந்தார். நாங்கள் காலை 8 மணி முதல் பி.ப. 2மணி வரையும் அங்கு நின்றோம். அதன் பின்னர் நாங்கள் முகாமுக்குள் போனோம். அங்கு உட்புறம் சாதாரண உடையில் நபர்கள் இருந்தனர். நாங்கள் முகாமின் வாயிலுக்கு அதிக தூரத்தில் நிற்கவில்லை, அவர்கள் எமது பிள்ளைகளைக் கூட்டி வந்தார்கள்.

எனது மகன் இலங்கை இராணுவத்தின் சீருடைகளை அணிந்திருந்தான். அவன் ஒரு துப்பாக்கியும் ஆர்.பி.ஜீ.யும் (rocket propelled granade) வைத்திருந்தான். எனது மகனைப் போலவே ஏனைய ஏழு சிறுவர்களும் சீருடைகளையணிந்து துப்பாக்கிகளும் வைத்திருந்தனர். அங்கு தான் பிரைச்சினையில்லாமல் இருப்பதாகவும் என்னைக் கவலைப்பட வேண்டாம் என்றும் எனது மகன் கூறினான். நான் எனது மகனுடன் தனியாக விடப்படவில்லை. எங்களைச் சுற்றி கருணா குழுவினரின் நபர்கள் நின்றிருந்தனர். அவன் மிகவும் கவலையோடு காணப்பட்டான். எங்கள் சந்திப்பு 2 மணிநேரம் நடந்தது.

அதன் பின்னரும் அத்தந்தை இரண்டு தடவைகள் தனது மகனைப் பார்க்கச் சென்றார். முதலாவது தடவை போகும்போது அவரது மகன் காயப்பட்டிருப்பதை அவர் கண்டார். “அவனது காதும் காலும் கறுத்துப் போயிருந்தன.” என அத்ததந்தை கூறினார். “ஒரு சண்டையின்போது தனக்கு அருகாமையில் ஒரு கண்ணிவெடி வெடித்ததாகவும். தனக்கு அருகிலிருந்த தன் நண்பன் கொல்லப்பட்டதாகவும் அவன் கூறினான்”. இளைஞனின் தாய் தனது மகனைப் பார்ப்பதற்காக இரண்டு தடவைகள முகாமிற்குச் செல்ல முயற்சித்தாலும், அவரது மகன் அங்கே இல்லை என கருணா குழு அங்கத்தவாகள் அவரிடம் கூறினர்.

அத்தந்தையின் கூற்றுப்படி, கடத்தப்பட்ட ஏனைய நால்வரின் குடும்பத்தாரும் தானும், மாதம் 5,000 ரூபாய்களை தமது மகன்மாரிடம் இருந்து போஸ்டல் ஓடர்கள் மூலம் பெற்றுக்கொள்வதாக கூறினார்.

தமது மகனைக் கடத்திய நபர்களை அக்குடும்பத்தினர் அடையாளம் கண்டுகொண்டாலும் அவர்களின் பெயர் விபரங்கள் அவர்களுக்குத் தெரியவில்லை. “அவர்கள் முன்னர் புலிகள் இயக்கத்துடன் இருந்தவர்கள்,” என அந்த இளைஞனின் தாயார் கூறினார்.[88]

---

[88] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

ஆயுதக் குழு ஒன்றினால் இரண்டாவது தடவையாக தமது ஒரு மகன் கடத்தப்பட்ட சம்பவம் இது, என அத்தாயும் தந்தையும் கூறினார்கள். ஏற்கனவே அவர்களின் மூத்த மகனை 2 வருடங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கம் கடத்திச் சென்றது. 2006ம் ஆண்டு ஜூன் மாதம் கடத்தப்பட்ட அதே மகன் 2005ம் ஆண்டிலும் புலிகள் இயக்கத்தால் கடத்தப்பட்டான், ஆனால் பின்னர் விடுவிக்கப்பட்டான்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாய்,
தனது மகனின் புகைப்படத்தை கையில் வைத்திருக்கிறார்.
© 2006 Fred Abrahams/ Human Rights Watch

### சம்பவம் 3 - மட்டக்களப்பு மாவட்டத்தில் பதின்மூன்று சிறுவர்களும் ஒரு இளைஞனும், ஜூன்

ஜூன் மாதத்தில் கருணா படையினர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து 13 சிறுவர்களையும் இளைஞனொருவனையும் கடத்திச் சென்றனர். அக்குறிப்பிட்ட தினத்தில் பிள்ளைகள் கடத்தப்பட்ட நான்கு குடும்பங்களுடன் தனித்தனியாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு உரையாடியது. இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்த வண்ணம் கருணா குழுவினரின் அங்கத்தவர்கள் 10 அல்லது 15 பேர் எவ்வாறு சிறுவர்களையும் இளைஞர்களையும், அருகிலிருந்த கடையொன்றுக்குள் தடுத்துவைத்து போலியாக “விசாரணை” செய்வதாக கூறினார்கள் என்பது பற்றி, அக்குடும்பங்கள் ஒரே மாதிரியான வாக்குமூலங்களை வழங்கினார்கள். அந்தக் கடையானது இராணுவச் சோதனைச் சாவடி அமைந்திருந்த வீதிக்கு மறுபுறமாக அமைந்திருந்ததோடு, சில பெற்றோர்கள் இராணுவத்தினரிடம் அதில் தலையிடுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். சில இராணுவத்தினர் கருணா குழு அங்கத்தவர்களுடன் போயக் கதைத்தாலும் அவர்கள் கடத்தலைத் தடுப்பதற்கு எந்த உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கடத்தல்களின் பின்னர் பல குடும்பங்கள் கடத்தப்பட்ட தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்கு கருணா முகாமிற்கே சென்றுள்ளனர்.

அன்றைய தினம் கடத்தப்பட்ட சிறுவனொருவனின் தந்தையின் கூற்றுப்படி, காலை 9 மணிக்கு அவரது வீட்டிற்கு ஆயுதமேந்திய கருணா இயக்கத்தின் அங்கத்தவர்கள் நான்குபேர் வந்த பொழுதே அச்சம்பவம் நிகழ்ந்தது. அவர் அதை விபரித்தார்,

> ஒரு கூட்டம் நடப்பதாகவும் அதற்கு எனது மகனையும் வரும்படி அவர்கள் அழைத்தார்கள். அவன் அவர்களுடன் போனான். எனது வீட்டிற்கு வந்த நான்கு பேரும் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு தலையில் தொப்பிகளை அணிந்திருந்தனர், ஆனால் முகங்களை மூடியிருக்கவில்லை. அவர்கள் ரைபிள்களுடன் ஆயுதபாணியாக நின்றனர். அவர்கள் தமிழில் பேசினார்கள். அவர்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள். எனது மகன் போக மறுத்தாலும் அவர்கள் அவனை பலாத்காரமாக எடுத்துச் சென்றனர். எனது மகன் 9ம் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவன். நான் அவர்களைப் பின் தொடர்ந்து போவதற்கு முயற்சித்தேன், ஆனால் அவர்கள் என்னைத் தடுத்தனர். பெற்றோர்கள் வரமுடியாது என்று கூறி, அவர்கள் என்னை பின்நோக்கித் தள்ளிவிட்டார்கள்.
>
> அன்று எமது கிராமத்தில் அவர்களைப் போல் நிறையப்பேர் வந்து நின்றார்கள். அன்றைய தினம் எமது கிராமத்தில் மேலும் பல இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என நாங்கள் பின்னர் கேள்விப்பட்டோம்.[89]

இந்தக் குற்றச்செயல் தொடர்பாக முறையிடுவதற்காக அந்த நபரின் மனைவி வாழைச்சேனையிலுள்ள பொலீஸ் நிலையத்திற்குச் சென்றார். பொலீசார் ஒரு கோப்பைத் திறந்தனர், ஆனால் அவர்கள் எனது மகனின் அடையாளங்களையோ அவனது புகைப்படத்தையோ கேட்கவில்லை, என அத்தந்தை கூறினார். "அவன் எவ்வளவு உயரம் என்று அவர்கள் கேட்டார்கள், அவனது தலை மயிரின் நிறம், மற்றும் அவன் என்ன உடுத்தியிருந்தான் என்றும் கேட்டார்கள", என அவர் மேலும் கூறினார். "அவர்கள் முறைப்பாட்டு இலக்கத்தை எமக்குத் தரவில்லை. இன்றுவரை அவர்கள் எதுவுமே செய்யவில்லை. அவர்கள் இங்கு வந்து விசாரணைகளை ஆரம்பிப்பதில்கூட அக்கறை காட்டவில்லை.

சில நாட்களின் பின்னர், தமது மகன் வெலிகந்தைப்பகுதியில் உள்ள முத்துக்கல என்னும் இடத்தில் கருணா குழுவின் முகாமில் வைக்கப்பட்டிருப்பதாக அப்பெற்றோர்கள் கேள்விப்பட்டனர். கடத்தல் நடந்து சில நாட்களின் பின்னர் தந்தை அங்கு சென்றார். அவர் விபரிக்கையில்,

> இலங்கை இராணுவத்தினரின் முகாமுக்கு அருகிலேயே கருணாவின் முகாம் அமைந்துள்ளது. நான் வாழைச்சேனையிலிருந்து வெலிகந்தைக்குச் செல்லும் பேருந்தில் சென்று, அங்கிருந்து முத்துக்கல என்னும் இடத்திற்கு மற்றுமொரு பேருந்தில் சென்றேன். வெலிகந்தையில் ஒரு இராணுவ சோதனைச் சாவடியுண்டு. அவர்கள் எனது அடையாள அட்டையை பார்வையிட்டார்கள்.....அந்த முகாம், இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்த, தமிழ் பேசும், ஆயுதம் தாங்கிய நபர்களால் காவல் காக்கப்பட்டது. வெளியே எந்த விதமான அடையாளங்களும் கிடையாது.
>
> முதல் தடவை நான் எனது மகனைப் பார்க்க முடியவில்லை. நான் முகாமுக்கு வெளியே நின்றேன், ஆனால் நான் எனது மகனைக் காணவில்லை. அவர்கள்

[89] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தந்தைடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

> அவனைக் கூட்டிவந்து காண்பிக்கவில்லை. நான் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். ஒரு மாதத்தின் பின்னர் நான் மீண்டும் முத்துக்கல என்னும் இடத்திலுள்ள அதே முகாமுக்குத் திரும்பி போனேன். கடத்தப்பட்டவர்களைச் சந்திப்பதற்கென முகாமுக்கு அருகில் விசேடமான இடம் ஒன்றுண்டு. நான் அங்கு சிறிது நேரம் நின்று கொண்டிருந்தேன், அவர்கள் எனது மகனைக் கூட்டிவந்தனர். நான் அவனைப் பார்த்தேன். அவன் கவலையுடன் இருந்தான். அவன் சாதாரண உடைகளை உடுத்தியிருந்ததுடன் ஆயுதம் எதுவும் வைத்திருக்கவில்லை.

அத்தந்தை இதேபோல் மூன்று தடவைகள் முத்துக்கல முகாமிற்குச் சென்றுள்ளதாக கூறினார். தனது மகனிடமிருந்து இரண்டு மாதச் சம்பளமாக மொத்தம் 12,000 ரூபாய்களையும் அத்தந்தை பெற்றுக்கொண்டுள்ளார் (122 அமெ.டொ.). அவர் மகனை சந்தித்தபோது நேரடியாக மகனிடம் இருந்தே இத்தொகையை பெற்றுக் கொண்டுள்ளார்.

அதே தினம் கடத்தப்பட்ட மற்றொரு இளைஞனின் குடும்பத்தினரையும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. கருணா குழுவினர் எவ்வாறு 13 சிறுவர்களைக் கடத்தி கடையொன்றுக்குள் தடுத்து வைத்திருந்தார்கள் என்பது தொடர்பாகவும், வீதிக்கு மறுபுறம் அமைந்துள்ள இராணுவ முகாமிலுள்ள இலங்கைப் படையினர் அதில் எவ்வாறு சம்பந்தப்பட்டார்கள் என்பது பற்றியும், அவ்விளைஞனின் மூத்த சகோதரன் தெளிவானதும் உறுதியானதுமான வாக்குமூலத்தை வழங்கினார்:

> அன்றைய தினம் [எனது சகோதரன்] மீன்பிடித் தொழிலிலிருந்து வந்து கொண்டிருக்கும் பொழுது, எமது கிராமத்தில் சிறுவர்கள் கடத்தப்படுவதாக அவன் கேள்விப்பட்டான். அவன் விரைவாக வீட்டிற்குச் சென்றான், ஆனால் அவன் வீட்டுக்கு முன்னால் வைத்துக் கடத்தப்பட்டான். அவனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறி ஆறு நபர்கள் அவனைக் கூட்டிச்சென்றனர். அவர்கள் 25 க்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் சாதாரண உடைகளை அணிந்திருந்தனர், ஆனால் ஆயுதபாணிகளாக இருந்தனர். அவர்கள் தமிழில் கதைத்தனர். அவர்கள் எனது சகோதரனை அருகிலிருந்த வீடொன்றுக்குள் கூட்டிச் சென்றனர். எனது சகோதரன் மறுப்புத் தெரிவிக்க முயலவில்லை. அது நடக்கும்போது எனது பெற்றோர்கள் வீட்டில் இருக்கவில்லை. கடத்தலாளர்களையும் எனது சகோதரனையும் தொடர்து செல்வது என நான் முடிவெடுத்தேன்.
>
> கடத்தலாளர்கள் தாங்கள் பிடித்த சகல சிறுவர்களையும். பிரதான வீதியில் இருந்த கடையொன்றுக்குள் கொண்டு சென்றனர். நான் அந்தக் கடையை அண்மித்தபொழுது, கடத்தப்பட்ட ஏனைய சிறுவர்களின் பெற்றோர்கள் அங்கு நிற்பதைக் கண்டேன். அவர்கள் தமது பிள்ளைகளுக்காகவே அங்கு நின்றிருந்தனர். அன்றைய தினம் கடத்தப்பட்ட 13 சிறுவர்களும் அந்த கடைக்குள் இருந்தனர். எனது சகோதரனும் அங்கிருந்தான். அப்போது எனது தாயாரும் என்னோடு இணைந்து கொண்டார். எனது சகோதரனை விடுவிக்கும்படி கடத்தலாளர்களை நாங்கள் கேட்டோம். நாங்கள் மற்றப் பெற்றோர்களுடன் கூடவே நின்றோம். ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு முறை கடத்தலாளர்கள் எம்மிடம் வந்து, எனது சகோதரனை விட்டுவிடுவதாகவே கூறினார்கள். மாலை 5 மணியளவில் அவர்கள் அனைவரும் அங்கிருந்து புறப்பட்டு ஆலங்குளம் வீதியால் சென்றார்கள். அவர்கள் நடந்து போனார்கள், பின்னர் ஒரு வாகனம் வந்து அவர்களை ஏற்றிச் சென்றது.[90]

[90] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் சகோதரனுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

அந்த சகோதரனின் கூற்றுப்படி, கடத்தப்பட்ட சிறார்களும் இளைஞர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த கடைக்கு அருகிலிருந்த வீதிக்கு அப்பால் இலங்கை இராணுவத்தினரின் முகாமொன்றிருந்தது. ஆனால் கடத்தல்களைத் தடுப்பதற்கு படையினர் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை, என அவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார்.

> கடத்தப்பட்ட சில சிறுவர்களின் தாய்மார்கள் இலங்கை இராணுவத்தினரின் இராணுவ முகாமுக்கு சென்று உதவி கோரினர். இறுதியாக இராணுவத்தினர் வெளியே வந்து கருணா குழுவின் அங்கத்தவர்களுடன் அரைகுறைத் தமிழில் கதைத்தனர். கருணா குழுவினர் சிறுவர்களை விசாரணை செய்வதாகவும் விரைவில் அவர்களை விட்டுவிடுவதாக அவர்கள் சொன்னதாகவும், இராணுவத்தினர் எம்மிடம் வந்து சொன்னார்கள். ஒரு பிரைச்சினையும் இல்லையென்றும், இனிப் பெற்றோர்கள் அங்கிருந்த தமது வீடுகளுக்கு போகும்படி கருணா குழுவினர் சொல்வதாகவும், இராணுவத்தினர் எம்மிடம் வந்து கூறினர். அதன் பின்னர் இராணுவத்தினர் தமது முகாமுக்கு போய்விட்டனர்.

இராணுவத்தினரிடம் உதவி கேட்ட பெற்றோர்களில், கடத்தப்பட்ட அந்த இளைஞனின் தாயும் ஒருவராவார். தனது முயற்சிகள் தொடர்பாக அவர் மேலும் விபரித்தார்:

> இரு இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியே வந்து கருணா குழு நபர்களுடன் பேசுவதற்காக ஆலங்குளம் வீதிக்குச் சென்றார்கள். பின்னர் அவர்கள் முகாமுக்குத் திரும்பி வந்து எம்மிடம், ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம், பிள்ளைகள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறினார்கள். மேலும் 2 மணி நேரம் நாங்கள் அங்கு நின்றோம், ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. பின்னர் நாங்கள் பொலீஸ் நிலையத்திற்குச் சென்றோம்.[91]

அன்றைய தினம் மாலை தனது தந்தையார் வேறு சில பெற்றோர்களுடன் ஒரு குழுவாக வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்திற்குச் சென்றார், என்று அந்த மூத்த சகோதரன் கூறினார். பொலீசார் ஒரு கோப்பைத் திறந்ததோடு, அவர்களின் பிள்ளைகள் விரைவில் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள், அதுபற்றி கவலைப்பட வேண்டாம், என்றும் கூறினார்கள். ஆரம்பத்தில் பொலீசார் முறைப்பாட்டு அறிக்கையின் பிரதியொன்றை கொடுக்க மறுத்தாலும் பின்னர் 125 ரூபாய்கள் பெற்றுக் கொண்டு அதை வழங்கினார்கள். (சாதாரணமாக அப்படியான அறிக்கைக்கு 10 அல்லது 15 ருபாய்களே வழங்கப்பட வேண்டும், என அச்சகோதரன் கூறினார்.) இரண்டு பெற்றோர்கள் மட்டுமே அவ்வறிக்கைகளை பெற்றுக்கொண்டனர். கடத்தல் சம்பவம் தொடர்பாக பொலீசார் இதுவரை எதுவுமே செய்யவில்லை என அக்குடும்பத்தினர் கூறினர்.

கடத்தலுக்கு இரண்டு மாதங்களுக்குப் பின்னர், கடத்தப்பட்ட இந்த இளைஞனைப் பார்ப்பதற்காக அக்குடும்பத்தினர் முத்துக்கல என்னும் இடத்திலுள்ள கருணா முகாமுக்கு சென்றனர். தாங்கள் மொத்தமாக நான்கு தடவைகள் அவனைச் சென்று பார்த்து வந்துள்ளதாக அந்த சகோதரன் கூறினான்.

அன்றைய தினம் நடந்த கடத்தல்களுக்கு பொறுப்பான கருணா குழுவைச் சேர்ந்த இருவரை தனக்கு தெரியும் என அந்த இளைஞனின் தாய் உறுதியாக கூறினார். அவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறும்போது,

---

[91] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

யார் இந்த பிள்ளைகளின் கடத்தல்களை திட்டமிட்டவர்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களின் பெயர்களாவன [பெயர்கள் வெளியிடப்படாமல் வைக்கப்பட்டுள்ளன]. அவர்கள் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், அவர்களில் ஒருவனை கடத்தல் நடந்த பொழுதும் நான் கண்டேன். அன்று, கருணாவின் குழுவைச் சேர்ந்த 9 அல்லது 10 பேரை மட்டுமே நான் கண்டேன், ஆனால் அவர்கள் அதைவிட கூடுதலாக இருந்தார்கள், 13 பேர் மட்டில் இருக்கலாம். அவர்கள் டீ சேர்ட்டுகளும் நீளக் காற்சட்டைகளும் அணிந்திருந்ததோடு, ஆயுதபாணிகளாக இருந்தனர். அவர்களில் இரண்டு நபர்கள் தொடர்ந்து இங்கே வந்தார்கள். நான் எனது மகன் தொடர்பாக பல தடவைகள் கெஞ்சிப் பார்த்தேன். அவர்கள் எனது மகனை விடுவிக்க மறுத்து விட்டார்கள்.

அதே தினம் கடத்தப்பட்ட மற்றுமொரு இளைஞனின் தாயாரை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. அந்தத் தாயாருக்கு மூன்று மகன்மார்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் முன்னர் சுய விருப்பின் பேரில் புலிகள் இயக்கத்தில் போய்ச் சேர்ந்தான். இதன் காரணமாகவே அவரது இரண்டாவது மகன் கருணா குழுவினால் கடத்தப்படுவதற்கு குறிவைக்கப்பட காரணமாக இருந்திருக்கலாம். இலங்கை இராணுவத்தினருடன் தான் பேசியவைகள் உட்பட, அக்கடத்தல்கள் நடந்த தினம் தான் கண்டவற்றையும் அவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் விபரித்தார்:

கடத்தல் நடந்த தினத்தில் நான் மீன்பிடிக்கச் சென்றிருந்தேன். எனது குடும்பத்தின் வருமானத்திற்காக உழைக்கும ஒரே ஒரு நபர் நான்தான். அன்று நான் கிராமத்திற்கு வந்தபொழுது பல கிராமத்தவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியே நின்று கத்திக்கொண்டும் அழுதுகொண்டும் நின்றார்கள். கருணா குழுவின் நபர்களால் கிராமத்திலிருந்து பல சிறுவர்கள் கடத்தப்பட்டிருந்தார்கள்...

நானும் [கடையடியில்] ஏனைய பெற்றோர்களுடன் சேர்ந்து கொண்டேன், நாங்கள் அங்கு பி.ப. 2 மணிவரை நின்றோம். நான் அங்கு நிற்கும்போது, எனது மகனைக் கண்டு, அவனை விடுவிக்கும்படி கெஞ்சினேன். அவனை விடுவிக்கும்படி கருணா அணி நபர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். எமது பிள்ளைகளை தாங்கள் விசாரணை செய்யப் போவதாகவும், அதன்பின் அவர்களை விடுவிப்பதாகவும் அவர்கள் எங்களுக்கு சொன்னார்கள். எமது கிராமத்திலிருந்து 13 சிறுவர்கள் கடத்தப்பட்டார்கள். அவர்கள் எல்லோரையும் நான் அந்த கடையில் கண்டேன்.

பி.ப. 5 மணியளவில், கருணா குழு நபர்கள் எமது பிள்ளைகளை ஆலங்குள வீதிக்கு அழைத்துச் சென்றனர். வாகனமொன்று வந்து ஆலங்குள வீதியில் இருந்து எமது பிள்ளைகளை ஏற்றிச் சென்றது. அது, கண்ணாடிகள் கறுப்பாக்கப்பட்ட ஒரு வெள்ளை வாகனம்...

ஒரு கட்டத்தில் சில இராணுவத்தினர் வந்து கருணா அணி நபர்களுடன் பேசினார்கள். பின்னர் கடைக்கருகில் வந்த இராணுவத்தினர், கருணா அணியினர் எமது பிள்ளைகளை விசாரிக்கப் போவதாக எம்மிடம் கூறினார்கள். "கவலைப்பட வேண்டாம், கருணா நபர்கள் பிள்ளைகளை விட்டு விடுவார்கள்," என அவர்கள் மேலும் எம்மிடம் கூறினார்கள்.[92]

[92] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

அத்தாயின் கூற்றுப்படி, மறுநாள் அவர் தனது மகனைத் தேடி வெலிகந்தைப் பகுதிக்குச் சென்றார்:

> நாங்கள் முத்துகலையிலுள்ள கருணா முகாமுக்கு சென்றோம், அங்கு எமது பிள்ளைகளைக் கடத்திய நபர்களையும், எங்கள் பிள்ளைகள் அம்முகாமுக்குள் நடமாடுவதையும் கண்டோம். நாங்கள் எங்கள் பிள்ளைகளைத் திருப்பிக் கேட்டோம். அவர்களை பயிற்சிக்கு அனுப்பிவிட்டதாக, அவர்கள் எம்மிடம் கூறினார்கள். கடத்தப்பட்ட சில சிறுவர்களை அங்கு நான் கண்டேன். ஆனால் எனது மகனைக் காணவில்லை. நாங்கள் அங்கு பி.ப. 5 மணிவரை நின்றோம். பின்னர் நாங்கள் இங்கு வந்து சேர 9 மணியாகிவிட்டது. அங்கு கருணா முகாமுக்கு மிக அருகாமையில் இராணுவ முகாம் ஒன்றும் அமைந்திருக்கிறது.

செவனபிட்டியவுக்கும் முத்துகலைக்கும் இடையில் ஒரு இராணுவ முகாமும் பொலீசாரின் முகாமும் இருக்கின்றன, என அத்தாய் கூறினார். இராணுவ முகாமுக்கு பக்கத்திலேயே TMVP முகாம் அமைந்திருந்ததாக அவர் கூறினார். பெற்றோர்கள் அங்கு நின்று கொண்டிருக்கும்போது, என்ன நடக்கிறது என விசாரிப்பதற்காக இராணுவத்தினர் வெளியே வந்தனர். அவர் மேலும் கூறுகையில்,

> முத்துகலையில உள்ள கருணா முகாமிற்கு முதலாவது முறை நாம் சென்றபொழுது, 30 நிமிட நேரத்தில், அருகில் உள்ள இராணுவ முகாமிலிருந்து இலங்கை இராணுவத்தினர் வெளியே வந்து கருணா குழுவின் அங்கத்தவர்களிடம், இந்தத் தாய்மார் இங்கே என்ன செய்கிறார்கள் எனக் கேட்டார்கள். நாங்கள் எமது பிள்ளைகளை பார்க்க வந்துள்ளதாக கருணா குழு நபர்கள் கூறினார்கள். அவர்கள் சிங்களத்தில் கதைத்தார்கள் எங்களுக்கு சரியாகப் புரியவில்லை. அவர்கள் கருணா அங்கத்தவர்களுடனும் சிங்களத்திலேயே கதைத்தார்கள். இலங்கை இராணுவத்தினரிடம் கதைத்த பின்பு கருணா குழு அங்கத்தவர்கள் எங்களை முகாமைவிட்டு போகும்படி கூறினார்கள் நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டோம்.

இரண்டு மாதங்களுக்கு பின்னர், அத்தாயார் தனது மகனை கருணா முகாமில் கண்டார். அதற்குப் பின்னரும் இரண்டு தடவைகள் அவர் அவனைப் போய்ப் பார்த்ததாக எம்மிடம் கூறினார். "நான் வீட்டிற்கு வரவேண்டும், ஆனால் என்னால் இங்கிருந்து தப்ப முடியாது," என அவன் சொன்னதாக, அவர் எம்மிடம் கூறினார். அவர் மேலும் கூறுகையில், கடைசியாக இரண்டு கிழமைகளுக்கு முன்னர் நான் அவனைப் பார்த்தேன். அவனை நான் பார்க்கச் சென்ற பொழுதெல்லாம், ஒரு தடவையைத் தவிர மற்றெல்லா தடவையின் போதும் அவன் சீருடையொன்றை அணிந்திருந்தான், அது இலங்கை இராணுவத்தினரின் சீருடை. அம்முகாமில் இருந்த பலர் அந்த சீருடைகளையே அணிந்திருந்தனர்."

அத்தாயின் கூற்றுப்படி, அவர் மூன்று தடவைகளில் 5,000 ரூபாய்களைப் பெற்றுள்ளார்.

அதே தினம் கடத்திக்கொண்டு போகப்பட்ட மற்றுமொரு சிறுவனின் தாய் கூறுகையில், கடத்தலை தான் நேரடியாகக் காணவில்லை, ஆனால் ஆயுதம் தரித்த நபர்கள் கிராமத்தில் நின்றது முதல், அவர்களை கொண்டு சென்ற வாகனத்தை தான் கண்டதுவரை கூறினார். "எனது மகனை திருப்பித் தாருங்கள்" என, அவர்கள் அவ்விடத்தைவிட்டு வாகனத்தை கொண்டு போகு முன்னர், அவர்களை நோக்கித் தான்

கத்தியதாக, அவர் எம்மிடம் கூறினார். “உனது மூத்த மகனை எமக்கு தந்தால் மட்டும்தான்..” என அவர்கள் தன்னிடம் கூறியதாக. அவர் எம்மிடம் கூறினார்.[93]

“ இந்த கருணா குழுவினர் இதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு எங்களைப் பற்றி எல்லாம் தெரியும்.” என அந்த தாய் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார். அவர் மேலும் கூறுகையில். “கருணாவின் நபர்களே இந்த கடத்தல்களுக்கு பொறுப்பானவர்கள். இந்தக் குழுவுக்கு பொறுப்பாக இருக்கும் நபரையும் எனக்குத் தெரியும். அதாவது இந்த 14 சிறுவர்களை கடத்தியதற்கு பொறுப்பான நபர். அவரின் பெயர் [பெயர் வெளியிடப்படாமல் வைக்கப்படுகிறது]. அவர் கருணா குழுவைச் சேர்ந்தவர்.”

இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அத்தாயார் வாழைச்சேனைப் பொலீசாரிடம் முறையிட்டார். அவர்கள் ஒரு கோப்பைத் திறந்ததுடன் அதுதொடர்பாக ஒரு அறிக்கையையும் அவரிடம் கொடுத்தனர், அவ்வறிக்கையை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பரிசோதித்தது.

பொலீசாரின் விசாரணைகள் மூலம் எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்பதால். தனது கணவர் மகனைத் தேடி கருணா முகாமுக்குச் செல்லத் தீர்மானித்தார் என, அவர் கூறினார். ஒக்டோபர் முற்பகுதியல் அவர் A11 பிரதான வீதியில் உள்ள செவனபிட்டிய என்னும் இடத்திற்கு பேருந்தில் சென்றார். அங்கிருந்து இராணுவ சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் அவரிடம் எங்கு போகிறார் எனக் கெட்டனர். கருணா குழுவினர் தனது மகனை கடத்திச் சென்றுவிட்டதாக அவர் கூறியதும், இராணுவத்தினர் அவரைப் பொக அனுமதித்தனர். ஒருவாறாக அத்தந்தை தனது மகனை கருணா குழுவினரின் முகாமிற்குச் சென்று பார்ப்பதில் வெற்றி கண்டார். தாயும் வேறு இரண்டு சந்தர்ப்பங்களில் அம்முகாமில் தனது மகனைச் சென்று பார்த்துள்ளார்.

### சம்பவம் 4 – மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒன்றுவிட்ட சகோதரர்கள் இருவர், ஜுன்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமமொன்றில் ஜுன் மாதத்தில், சகோதரிகளான இரு தாய்மார்களின் இளம் மகன்மார் இருவர், ஒரே இடத்தில் வைத்து ஒன்றாக கடத்தப்பட்டனர். அவாகளின் தாய்மார்களை ஒன்றாகவே வைத்து, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்தது. ஒரு இளைஞனின் தாய் விபரிக்கும்போது,

> எனது மூன்றாவது மகன் பி.ப. 8 மணியளவில், எனது பெறாமகனான அவனது ஒன்றுவிட்ட சகோதரனுடன் சேர்த்து கடத்தப்பட்டான். நாங்கள் அப்போது வீட்டுக்குள்ளிருந்து செய்தி கேட்டுக்கொண்டிருந்தோம், அப்போது திடீரென, சாதரண உடையில் ஆயுதம் தாங்கிய மூவர் எமது வீட்டுக்குள் நுளைந்தனர். அவர்கள் தமிழில் கதைத்தனர். எல்லாப் பிள்ளைகளையும் வீட்டுக்கு வெளியே போகும்படியும், பெற்றோர்களை மட்டும் வீட்டுக்குள்ளேயே இருக்கும்படியும் அவர்கள் உத்தரவிட்டதோடு, அப்படிச் செய்யாவிட்டால் சுட்டுவிடுவதாகவும் கூறினார்கள். தாங்கள் பிள்ளைகளை விசாரிக்கப் போவதாகவும் அதன் பின்னர் பிள்ளைகள் விடுவிக்கப்படுவதாகவும் அவர்கள் கூறினர்கள். அப்போது எனது வீட்டிலிருந்த ஏழு பிள்ளைகளை அவர்கள் கொண்டு சென்றனர், அவர்களில் 3பேர் எனது பிள்ளைகள், ஏனைய 4பேர் எனது சகோதரியின் பிள்ளைகள், அனைவரும்

[93] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

> அப்போது எனது வீட்டில் நின்றனர். அரைமணி நேரத்தின் பின்னர் இரண்டு பிள்ளைகளைத் தவிர ஏனைய பிள்ளைகள் திரும்பி வந்தனர். அன்று இரவு முழுவதும் நாம் வீட்டிலேயே இருந்தோம்.[94]

மறு நாள் அக்குடும்பத்தினர் கடத்தப்பட்டவர்களைத் தேடி மாங்கேணியிலுள்ள TMVP காரியாலயத்திற்குச் சென்றனர். அவ்விரு தாய் மார்களின் கூற்றுப்படி, அவ்விரு இளைஞர்களையும் தாங்கள் தடுத்து வைத்திருப்பதாகவும் தற்போது அவர்கள் பயிற்சிக்காக வேறு ஒரு முகாமுக்கு மாற்றப்பட்டு விட்டதாகவும், அந்த காரியாலயத்தில் இருந்தவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அத நடந்து சிறிது நேரத்தின் பின்னர் அக்குடும்பத்தினர் இக்கடத்தல் சம்பந்தமாக வாழைச்சேனையிலுள்ள பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலீசார் ஒரு கோப்பைத் திறந்ததுடன் முறைப்பாட்டு இலக்கத்தையும் கொடுத்தனர். "அவர்கள் பிள்ளைகளின் புகைப்படங்களையோ, அடையாள அட்டைகளையோ கேட்டகவில்லை," என ஒரு தாய் கூறினார். "அவர்களின் உயரம் பாரம் மற்றும் உருவ அமைப்பு பற்றி அவர்கள் கெட்டனர். ஆனால் இன்றுவரை பொலீசாா எதுவும் செய்யவில்லை."

சுமார் ஆறு வாரங்களின் பின்னர், கருணா குழுவைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர்கள், இரண்டு மணி நேரத்திற்கு குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக அந்த இரு இளைஞர்களையும் வீட்டிற்கு கூட்டி வந்தனர், என அத்தாய்மார்கள் கூறினர். "அவர்கள் இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு, சகலரும், அந்த ஐந்து பேரும் ஆயுதங்களும் வைத்திருந்தனர்," என அத்தாய் கூறினார். "தாங்கள் அங்கிருந்து தப்ப முடியாது என்றும் அப்படிச் செய்தால் அவர்கள் தங்களைச் சுடுவார்கள் என்றும், ஒரு கட்டத்தில் இவ்விரு இளைஞர்களும் எம்மிடம் கூறினார்கள்," எனவும் அத்தாய் கூறினார். மறு நாளும் மூன்று மணி நேரம் அக் குடும்பத்தினரைப் பார்க்க அதே குழுவினர் வந்தனர். "தாங்கள் முத்துக்கலை முகாமில் இருப்பதாக அவர்கள் சொன்னார்கள்," என அத்தாயார் கூறினார்.

அத்தாய்மார்கள் இருவரும் இரு தடவைகள் முத்துக்கலை கிராமத்திற்கு சென்றுள்ளனர். அவர்களில் இளையவனின் தாய் விபரிக்கையில்,

> முத்துகலையில் உள்ள கருணா முகாமுக்கு அருகே ஒரு பொலீஸ் நிலையமும் இராணுவ முகாமும் இருக்கின்றன. கருணா முகாமை அடைவதற்கு நீங்கள் இராணுவ முகாமை தாண்டிச் செல்ல வேண்டும். செவனப்பிட்டியவிலிருந்து முத்துகலைக்கு போகும்போது வழியில் கருணா குழுவின் சோதனைச் சாவடியொன்றுண்டு. நாங்கள் அங்கு நிறுத்தப்பட்டோம். எங்கே போகிறோம் என அவர்கள் தமிழில் எம்மிடம் கேட்டார்கள். சிலர், இலங்கை இராணுவத்தினரின் சீருடைகளை அணிந்திருந்ததோடு, சிலர் சாதாரண உடைகளில் நின்றனர். கருணா முகாமுக்கு அருகாமையில் இலங்கை இராணுவத்தினரின் சோதனைச் சாவடியொன்று, கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருந்தது. முகாமக்கு உள்ளே, சமயலறைப் பிரதேசம் போன்ற இடமுண்டு, அங்கு நாங்கள் நபர்களை மிக நெருக்கமாக சந்திக்கலாம். ஒரு மாதத்திற்கு முன்னரே நான் கடைசியாக அங்கு சென்றிருந்தேன். எனது மகனைப் பார்க்க நான் சென்றபோது இரண்டு தடவைகள் நான் 5,000 ரூபாய்களை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளேன்.

[94] கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

**சம்பவம் 5 – மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 சிறுவர்களும் இளைஞர்களும், செப்டெம்பர்**

2006 செப்டெம்பர் மாதத்தில் ஒரு நாள் கருணா படையினர் மட்டக்களப்பு நகரத்திற்கு வடக்கேயுள்ள கிராமமொன்றிலிருந்து 14 சிறுவர்களையும் ஒரு இளைஞனையும் கடத்திச் சென்றனர். மூன்று பிள்ளைகள் பிடித்துச் செல்லப்பட்ட கிராமமொன்றுக்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சென்றிருந்தது. கடத்தப்பட்டவர்களுள் வயது குறைந்த சிறுவனின் தாயார் எம்மிடம் கூறும்போது, கடத்தப்பட்ட ஏனைய இரு சிறுவர்களையும் தனது மகனையும் மட்டக்களப்பு TMVP காரியாலயத்தில் தான் கண்டதாக கூறினார்.

கறுப்பு நிறமான மேற்சட்டைகளையும் கறுப்பு நிற காற்சட்டைகளையும் அணிந்து, கையில் தானியங்கித் துப்பாக்கிகளுடன வந்த 15 நபர்கள், எவ்வாறு, மணல் நிறைந்த இடத்தில் வியைாடிக்கொண்டிருந்த சிறுவர்களை, தம்மை நோக்கி வரும்படி கைதட்டி அழைத்தபடி அவர்களை அணுகினார்கள் என்பதை, அக்கட்தல்களை கண்ணால் கண்ட சாட்சியான ஒரு இளவயதுப் பையன் விபரித்தான். அந்த நபர்கள் சிறுவர்களை நோக்கி மிக நல்ல தமிழில், சில துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க வேண்டியிருப்பதாக கூறினார்கள். "நாங்கள் இங்கு விளையாடிக்கொண்டிருக்கும் போது அவர்கள் எங்களை அழைத்தனர்," என அச்சிறுவன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினான். "எங்களில் யார் பள்ளிக்கூடம் போவது என அவர்கள் எம்மிடம் கேட்டார்கள். நான் எனது பெயரையும் எனது பாடசாலையின் பெயரையும் கொடுத்தேன், என்னை அங்கிருந்து போய்விடும்படி அவர்கள் கூறினார்கள்."[95]

தனது மகனைப் போகமல் தடுக்க தான் முயற்சித்ததாக, கடத்தப்பட்ட வயது குறைந்த சிறுவனுடைய தாய் கூறினார். "நான் அவனது கையைப் பிடித்துக் கொண்டிருந்தேன், 'ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் சில துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதற்காக நாங்கள் இவனை கூட்டிக்கொண்டு போகிறோம்', என அவர்கள் கூறினார்கள்," என அவர் கூறினார். "நான் அவர்களை நம்பவில்லை, ஆகவே நான் அவர்களை பின் தொடர்ந்தேன், இந்த கிராமத்தில்தான் அது நடப்பதாக அவர்கள் கூறினார்கள், என்னை 'அங்காலே போ' என அவர்கள் கூறினார்கள், அவர்கள் சரளமாக தமிழில் கதைத்தார்கள்," என அத்தாய் கூறினார். "தாங்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் எம்மிடம் கூறினார்கள்."[96]

ஆயுதம் தாங்கிய நபர்கள் மூன்று சிறுவர்களை பிடித்துச் செல்வதை வயது முதிர்ந்த ஒருவரும் கண்டுள்ளார். "கருணா குழுவின் நபர்கள் அவர்களைக் கொண்டு செல்லும்போது நான் அவர்களை பின் தொடர்ந்தேன்," என அவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார். "அவர்கள் தமது துப்பாக்கிகளை என்னை நோக்கி நீட்டி 'அங்காலே போய்விடு' என கத்தினார்கள். என்னைப் பிடிக்கும்படி ஒருவன் கூறினான். அவர்கள் துப்பாக்கிப் பிடியினால் என்னைத் தாக்கினார்கள்."[97]

---

[95] ஒரு இளவயதுப் பையனுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[96] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[97] வயது முதிர்ந்த ஒருவருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

அக்குறிப்பிட்ட தினத்தில் அந்தப் பகுதியிலிருந்து கடத்தப்பட்ட ஏனைய 11 இளம் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட கடந்தப்பட்ட இந்தச் சிறுவர்களின் பெற்றோர்கள் அனைவரும் தமது பிள்ளைகளை மீளப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தார்கள். அடுத்த சில நாட்களில் அவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், UNICEF ஆகிய அமைப்புகளிடம் சென்று, இக்கடத்தல் சம்பவங்கள் பற்றி முறையிட்டார்கள், சிலர் தமது பிள்ளைகளைத் தேடி கருணா அணியினரின் முகாம்களுக்குச் சென்றார்கள்.

“கருணாவின் செங்கலடி முகாமுக்கு நான் சென்றேன், சிறுவர்கள் எல்லொரும் மட்டக்களப்பில் இருப்பதாக அவர்கள் கூறினார்கள்,” என கடத்தப்பட்ட மிக வயது குறைந்த சிறுவனின் தாய் கூறினார். மட்டக்களப்பில் இருக்கும் TMVP காரியாலயத்திற்கு நான் சென்றேன். முச்சக்கர வண்டியொன்றில் பிள்ளைகளைக் கண்டேன். பிரதான வீதியில் இருந்த பஸ் டிப்போவுக்கு அருகிலேயே அதனைக் கணடேன். அவர்கள் ஒரு முச்சக்கர வண்டியில் மட்டக்களப்புக்கு போய்க்கொண்டிருந்தார்கள்.”

கருணா குழுவினர் சுற்றிவர நின்றதால் அத்தாய் அச்சம் காரணமாக பிள்ளைகளை நெருங்கவில்லை, ஆனால் இரண்டு நாட்களின் பின்னர் அவர் மட்டக்களப்பு நகரத்தில் உள்ள TMVP காரியாலயத்திற்குச் சென்றிருந்தார். அங்கு அவர் என்ன கண்டார் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார்:

> TMVP காரியாலயத்தின் மேல் மாடியில் நாங்கள் எமது பிள்ளைகளைக் கண்டோம். அங்கு கடத்தப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாய்மார்கள் அங்கு நின்றோம். எங்களை அங்கிருந்து போய்விடும் படியும், அல்லது தங்களை அடிப்பார்கள் என்றும், எமது பிள்ளைகள் சைகை மூலம் எமக்கு காண்பித்தார்கள். இரண்டாம் தடவை நாங்கள் அங்கு சென்ற பொழுது அவர்கள் [TMVP அதிகாரிகள்] எங்களை போகும்படி கலைத்தார்கள். “அவர்கள் பயிற்சி முடித்ததன் பின் ஒக்டோபர் 24ம் திகதி செவனபிட்டிய முகாமிற்குச் சென்று பாருங்கள்,” என அவர்கள் கூறினார்கள். நாங்கள் மீண்டும் போனோம் அவர்கள் “திரும்பிப் போங்கள், மீண்டும் நவம்பர் 5ம் திகதி வாருங்கள்.” எனக் கூறினார்கள்.

இத் தாயாரும் தனது மகனின் கடத்தல் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் கமிஷனுக்கும் ஏறாவூரிலுள்ள பொலீசுக்கும் அறிவித்தார். பொலீஸ் நிலையத்தில் இருந்த பொலீசார் பக்குவமாக நடந்து கொண்டார்கள், என அவர் கூறினார். அவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொண்டதோடு, அத்தாயார் அங்கிருந்த பொறுப்பதிகாரியோடும் கதைத்தார், ஆனால் பொலீசார் இதுவரை ஒன்றும் செய்யவில்லை. “அது கருணா குழுவினர்தான் என நாங்கள் அவர்களிடம் சொன்னோம். ஆனால் இன்றுவரை அவர்களிடம் இருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை,” என அத்தாயார் மேலும் கூறினார்.

கடத்தப்பட்ட சிறுவர்கள் கறாபொல என்னும் இடத்திலுள்ள கருணா குழுவின் முகாமிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என தான் நினைப்பதாக, கடத்தப்பட்ட சிறுவர்களில் இன்னுமொரு சிறுவனின் பாட்டியார் கூறினார். கடத்தப்பட்ட 14 சிறுவர்களில் இரண்டு சிறுவர்களின் தாய்மார்கள், மட்டக்களப்பிலுள்ள TMVP காரியாலயத்தில சில சிறுவர்கள் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை கண்டுள்ளததாக, அவர் மேலும் கூறினார். ஏனையவர்கள் கறாபொல முகாமில் இருப்பதாக அச்சிறார்கள் கூறினார்கள்.

பொலீசாரிடம் முறையிடுவதால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை என நம்பியதால், தமது குடும்பத்தினர் இக்கடத்தல் தொடர்பாக பொலீசாரிடம் சென்று முறையிடவில்லை என அப்பாட்டியார் கூறினார்.[98]

**சம்பவம் 6 – மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு சிறுவர்கள், செப்டெம்பர்.**

2006 செப்டெம்பர் மட்டக்களப்பு நகரத்துக்கு வடக்கே உள்ள பிரதேசத்திலிருந்து இரண்டு இளம் சிறுவர்கள் கருணா படையினரால் கடத்திச் செல்லப்பட்டனர்.

கடத்தப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டதும், கடத்தப்பட்டவர்களில் வயது கூடிய சிறுவனின் தாயார் மொறக்கொட்டாஞ்சேனை மற்றும் செங்கலடி ஆகிய இடங்களிலுள்ள TMVP காரியாலயங்களுக்குச் சென்றார். "கருணாவின் சகல, ஐந்து முகாம்களுக்கும் நான் சென்றேன்," என அவர் கூறினார். "அவர்கள் 'அவன் இங்கு இல்லை' என்று கூறினார்கள். அதன் பின்னர், 'ஒரு மாதத்திற்குப் பின்னர் திரும்பி வாருங்கள்,' என கூறினார்கள், நாங்கள் ஒரு புகைப்படத்தைக் காண்பித்தோம், அதற்கு அவர்கள், 'சில வேளை இருக்கலாம், இருந்தாலும் ஒரு மாதத்திற்குப் பின்னர் தான் காண்பிப்போம்' என கூறினார்கள்." என அவர் கூறினார்.[99]

மூன்று நாட்களுக்குப் பின்னர், மட்டக்களப்பில் உள்ள TMVP காரியாலயம் அவரை ஒக்கடோபர் மாதம் வரும்படி கூறியது, ஆனால் தாங்கள்தான் அவரது மகனைக் கொண்டு வந்தோம் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தவில்லை.

முகாம்களில் தெடி பயனற்றுப் போனதால், கடத்தல் நடந்து நான்கு நாட்களின் பின்னர், அவர் அச்சம்பவம் பற்றி பொலீசில் முறையிட்டார். அவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொண்டனர், ஆனால் அவர்கள் அவரை "ஒரு நாயைப் போலவே" நடத்தினார்கள் என அவர் கூறினார்.

> நாங்கள் அதைப் பொலீசாரிடம் கூறினோம். நாங்கள் முறைப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுகிறோம், ஆனால் அவர்களைத் தேடமாட்டோம் என அவர்கள் கூறினார்கள். அது ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில நடந்தது. அவர்கள் அந்த முறைப்பாட்டை எடுக்க விரும்பவில்லை. நாங்கள் இரண்டு மணி நேரமாக வாதாடினோம் அதன் பின்னரே அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டனர்...." நாங்கள் உங்கள் முறைப்பாட்டை பெற்றுக்கொள்ளவோம் ஆனால் அதை ஒரு மூலையில் வைத்து விடுவோம்..."என பொலீசார் கூறினர். அவர்கள் என்னை ஒரு நாயைப் போல் நடத்தினார்கள்.... "இது உங்கள் தமிழர்தான் உங்கள் பிள்ளைகளை கொண்டு போகிறார்கள் அவர்களிடம் போய் சொல்லுங்கள்."

[98] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் பாட்டியுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[99] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

கடத்தப்பட்ட வயது கூடிய சிறுவனின் தாயாருடன் ஒன்றாக வைத்து நேர்காணல் செய்த, கடத்தப்பட்ட வயது குறைந்த சிறுவனின் தாயார், தனது மகனின் கடத்தல் பற்றி பொலீசாரிடம் முறையிடவில்லை, "எனக்கு பயமாக இருந்தது," என அவர் கூறினார்.[100]

**சம்பவம் 7 - திருகோணமலை நகரில் ஒரு சிறுவன், செப்டெம்பர்**

2006 செப்டெம்பரில் கருணா குழுவின் அங்கத்தவர்கள் நகரத்தில் ஒரு கடையிலிருந்து சிறுவனொருவனைக் கடத்திச் சென்றனர். என்ன நடந்தது என்பதை தாய் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு விபரித்தார்:

> கருணா குழுவின் நபர்கள் எமது வீட்டிற்கு வந்து எனது மகனைக் கேட்டனர். அன்று அவன் வெளியே போயிருந்ததால், அவன் வேலைக்குப் போயவிட்டான் என நான கூறினேன். அவர்கள் சென்று விட்டனர். சில நாட்களின் பின்னர் மதிய நேரம், எனது மகன் அருகிலிருந்த கடையொன்றுக்கு வாழைப்பழம் வாங்கச் சென்றிருந்தான், அது வீட்டிலிருந்து 50 மீட்டர் தொலைவிலேயெ இருந்தது. கருணா நபர்கள் அக்கடைக்கு வந்து அவனைக் கொண்டு சென்றனர்.[101]

கடத்தல் நிகழும்போது கடையடியில் நின்ற, கடத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட அச் சிறுவனின் சகோதரியுடனும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு உரையாடியது. அவர் விபரிக்கையில்,

> எனது தம்பி வாழைப்பழங்கள் வாங்குவதற்கு தனது சைக்கிளில் கடைக்கு வரும்போது, நான் ஏற்கனவே கடையில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் திடீரேன வந்த இரு நபர்கள் அவனை அழைத்தார்கள். "நான் வர மாட்டேன்." என அவன் பதிலளித்தான். உடனே அவர்கள் ஒரு பிஸ்டலை எடுத்தார்கள். அவர்களில் ஒருவரிடமே துப்பாக்கி இருந்தது, அது கறுப்பு நிறமானது, அதை அவர் தனது பைக்குள் வைத்திருந்தார். அதன் பின் எனது தம்பி சரியென்றதும், அவர்கள் எனது தம்பியை நடுவில் அமர்த்தி, மூவரும் மோட்டார் சைக்கிளில் சென்று விட்டனர். அவர்கள் சாதாரண உடையில் இருந்ததோடு சற்று வயது கூடியவர்களாக [கடத்தப்பட்ட சிறுவனை விட] இருந்தார்கள், ஆனால் அதிக வயதில்லை. அவர்கள் தமிழர்கள்...அவர்களின் பெயர்கள் எனக்குத் தெரியாது, ஆனால் தாங்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என அவர்கள் கூறினர்....அதன் பின்னர் அவர்களை நான் காணவில்லை.[102]

கடத்தப்பட்ட அச்சிறுவனின் தாயின் கூற்றுப்படி, சம்பவத்தைத் தொடர்ந்து அவரது கணவன் நகரத்திலுள்ள TMVP காரியாலயத்திற்குச் சென்றார். அங்கே அவரது மகன் கால்களில் சங்கிலிகள் பூட்டப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டார்.

சில நாட்களின் பின்னர் அவரது கணவன் மீண்டும் TMVP காரியாலயத்திறகுச் சென்றார், ஆனால் அங்கு அவரது மகன் இருக்கவில்லை, என அவர் கூறினார். "பின்னர் நானே நேரடியாக அக்காரியாலயத்திற்குச் சென்று எனது மகனைத் தரும்படி கேட்டேன்," என்றார்.

---

[100] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[101] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் தாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

[102] கடத்தப்பட்ட ஒரு சிறுவனின் சகோதரியுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

“ அதற்கு அவர்கள் ‘அவன் எங்களிடம் இல்லை, நாங்கள் எவரையும் பிடிக்கவில்லை.’ என பதிலளித்தனர். ஆனால் அங்கிருந்த இன்னொரு நபர், எனது மகனை நான் மூன்று மாதங்களுக்கு பின்னரே பார்க்க முடியும் எனக் கூறினார்.”

பயத்தின் காரணமாக, அக்குடும்பத்தினர் இக்கடத்தல் தொடர்பாக பொலீசாரிடம் முறையிடவில்லை.

**சம்பவம் 8 – அம்பாறை மாவட்டத்தில் 12 சிறுவரும் ஒரு இளைஞனும், ஒக்டோபர்**

ஒக்டோபர் மாதத்தில் கருணா குழுவினர் அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து 12 சிறுவர்களையும் ஒரு இளைஞனையும் கடத்திச் சென்றனர். ஒக்டோபர் 18ம் திகதியளவில், கடத்தபட்டவர்களில் ஏழுபேரை அவர்கள் விடுதலை செய்தனர்.

கடத்தப்பட்டவர்களுள் ஒரு இளைஞனின் சிறியதாயாரின் கூற்றுப்படி, மாலை 6 மணியளவில் பிரதான வீதியில் வைத்தே இக்கடத்தல்கள் நடைபெற்றுள்ளன. அந்த இளைஞன் வேலையிலிருந்து ஒரு மோட்டார் சைக்கிளில் தனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்தான், அவனது இரு நண்பர்களும் வேறு ஒரு மோட்டார் சைக்கிளில் கூடவே வந்து கொண்டிருந்தனர். கறுப்பு நிறக் கண்ணாடிகள் போடப்பட்ட வெள்ளை நிறக் காரொன்றிலும் வான் ஒன்றிலும் வந்த கருணா குழுவின் அங்கத்தவர்களால் அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் மறித்து நிற்பாட்டப்பட்டன. அந்த மூவரையும் அவர்களின் மோட்டார் சைக்கிள்களுடன் சேர்த்து கருணா குழுவினர் கொண்டு போயினர். அது நடந்து சற்று நேரத்தின் பின்னர், அதனைக் கண்ணால் கண்ட சாட்சியொருவர் போய் தான் கண்டதைப் பற்றி தகவல் சொன்னபோதே, அது தொடர்பாக அக்குடும்பத்தினர் அறிந்து கொண்டனர்.

அன்றைய தினம் இரவு அவ்விளைஞனின் தாயார் தனது மகனைப் பார்ப்பதற்காக அக்கரைப்பற்றில் உள்ள TMVP காரியாலயத்திற்குச் சென்றார், என சிறியதாயார் கூறினார். அவர் அங்கு போகும்போது கறுப்பு நிற கண்ணாடிகள் போடப்பட்ட கார் ஒன்றும் வான் ஒன்றும் அங்கிருந்து புறப்பட்டுப் போவதை கண்டுள்ளார். அக்காரியாலயத்தில் இருந்தவர்கள் அவரை மறுநாள் வரும்படி கூறினார்கள்.

மறுநாள் அவ்விளைஞனின் தாயாரும், ஏனைய உறவினர்களும் அக்கரைப்பற்று TMVP காரியாலயத்திற்கு திரும்பவும் சென்றார்கள். அங்கிருந்த அதிகாரிகள் தாங்கள் அந்தக் கடத்தல்களுக்குப் பொறுப்பில்லை என்று கூறினார்கள், என சிறியதாயார் கூறினார். உண்மையில் அவர்கள், வெலிகந்தையில் இருந்து வந்த பாரதி என்னும் நபரின் கட்டளையின் கீழ் இயங்கும் கருணா குழு அணியினராவர். அக்கரைப்பற்றில் இருந்த TMVP உறுப்பினர்கள் அவ்விளைஞனின் மோட்டார் சைக்கிளை குடும்பத்தினரிடம் திருப்பிக் கொடுத்தனர். ஏதோ ஒரு கட்டத்தில் அவ்விளைஞன் அக்காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளான் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. அவனது மூத்த சகோதரன் பின்னர் போய் மொட்டார் சைக்கிளை பெற்று வந்தான்.

சிறியதாயாரினதும், கண்ணால் கண்ட ஏனையவர்களின் கூற்றுப்படியும், அன்றைய தினம் கடத்தப்பட்ட சிறுவர்களினதும் இளைஞர்களினதும் பெற்றோர்களும் உறவினர்களும், அது பற்றி முறையிடுவதற்காக TMVP காரியாலயத்தின் முன்னால் திரண்டு நின்றனர். “தயவு செய்து எங்கள் பிள்ளைகளை விடுங்கள்,” என அவர்கள் கத்தினார்கள்.

சிறியதாயாரின் கூற்றுப்படி, ஏனைய சில தாய்மார்கள் தளபதி பாரதியுடன் கதைப்தற்கு வெலிகந்தையில் உள்ள கருணா முகாமிற்கும் சென்றனர் – எது என்பது அவருக்குத் தெரியவில்லை – அவர் அதை விபரிக்கையில்,

> சில தாய்மார்கள் வெலிகந்தைக்குச் சென்று பாரதியைச் சந்தித்தார்கள். ஆறு நாட்களின் பின்னர் 6 சிறுவர்களை தான் விடுதலை செய்வதாக அவர் கூறினார். அவர் 7 பேரை விடுதலை செய்தார். ஆனால் எமது பையனை அல்ல. ஏனைய 4 பேரையும் விடவில்லை. எப்படியாவது முயற்சி செய்து தனது மகனை திருப்பி எடுப்பதற்காகவே எனது சகோதரி அங்கு இருக்கிறார்.[103]

சிறிய தாயாரின் கூற்றுப்படி, ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதார நிலைமை, உடற் சுக நிலைமை, மற்றும் அவர்களின் தொழில் நிலைமை பற்றிய சகல விபரங்களையும் பெற்றுக்கொண்ட பின்னரே, பாரதி கடத்தப்பட்ட 7 பேரை விடுதலை செய்தார். விடுதலை செய்யப்படாத நான்கு சிறுவர்களும் ஒரு இளைஞனும் இராணுவப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

**சம்பவம் 9 – மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு சிறுவர்களும் ஒரு இளைஞனும், ஒக்டோபர்.**

2006 ஒப்டோபர் மாதம் ஒரு நாளில், கருணா படையினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிராமமொன்றில் இரண்டு சிறுவர்களையும் வயதுவந்த ஒருவரையும் கடத்திச் சென்றனர். இக்கடத்தல்கள் நடந்து முடிந்த மூன்று மணி நேரத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர், அச்சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தனர்.

உள்ளூர் குடி மக்கள் அச்சம் காரணமாக வெளிப்படையாக பேசத் தயங்குவது தெரிந்தது, அவர்கள் வெறும் மேலோட்டமான தகவல்களையே தந்தனர். கருணா குழுவின் ஆயுத மேந்திய நபர்கள் அன்று காலை 8 மணியளவில் வந்து இரண்டு சிறுவர்களையும், ஒரு இளைஞனையும் கொண்டு சென்றதாக, தனது பெயரை வெளியிட விரும்பாத நபர் ஒருவர் கூறினார்.[104]

கடத்தப்பட்ட இளைஞனின், மனம் குழம்பிய நிலையில் இருந்த தாயாருடனும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு உரையாடியது. கருணா குழுவினர் இரன்டு சிறுவர்களை விடுதலை செய்ததாகவும், ஆனால் தனது மகனை விடவில்லை என்றும், அவர் கூறினார். தனது மகன் புலிகளுக்கு ஆதரவானவன் என அவர்கள் சந்தேகிக்கிறார்கள் போலும், ஆனால் அதில் உண்மையில்லை, எனவும் அவர் கூறினார்.[105]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பால் அக்கடத்தல்களையோ, இரண்டு சிறுவர்கள் விடுதலை செய்யப்பட்டதையோ உறுதிப்படுத்த முடியவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்கள் அக்கிராமத்தில் நிற்கும்பொழுது, 24 பேர் வரையான இராணுவத்தினர் அங்கு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் கண்டனர். இக்கடத்தல்கள் நடக்கும்போது இராணுவத்தினர் அங்கு நின்றார்களா இல்லையா என்பது தெரியவில்லை.

---

103 கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் சிறியதாயுடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், அம்பாறை மாவட்டம், 2006 அக்டோபர்.

104 உள்ளூர் குடியிருப்பாளர் ஒருவருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

105 கடத்தப்பட்ட ஒரு இளைஞனின் தாயாருடன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல், மட்டக்களப்பு மாவட்டம், 2006 அக்டோபர்.

## VII. புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுதல்

இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களாக நடைபெறும் சிவில் யுத்தத்தின் போது, புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாகவே சிறார்களை தமது படைகளில் சேர்த்துக் கொண்டுள்ளது. 2002ம் ஆண்டு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு முன்னரும் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக சிறார்களை இராணுவ மோதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளதோடு, பாரிய யுத்த நடவடிக்கைகளின் போதும் அவர்களை பயன்படுத்தியுள்ளது.[106] அச்சிறார்கள் அநேகமாக பாரிய அளவில் பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

புலிகள் இயக்கமானது அச்சிறார்களை, தாக்குதல் அணிச் சிப்பாய்கள், பாதுகாப்பு மற்றும் உளவுப் பிரிவு அதிகாரிகள், மருத்துவ பணியாளர்கள், நிர்வாக உதவியாளர்கள், ஏனைய அங்கத்தவர்களுக்கு பயிற்சி வழங்குபவர்கள், என சகல மட்டங்களிலும் பாவித்துள்ளனர். அரசாங்க சோதனைச் சாவடிகளில் கடுமையான சோதனைக்கு உடபடுத்தப்பட மாட்டார்கள் என்பதற்காகவே பெண்கள் உட்பட சிறார்களையும் தற்கொலைக் குண்டு தாரிகளாக புலிகள் இயக்கத்தினர் பாவித்துள்ளனர். இலங்கைப் பாதுகாப்புப் படையினர்களால் பிடிபடக்கூடிய சந்தர்ப்பங்களில், பிடிபடாமல் இருப்பதற்காக, ஒன்றில் தங்களைத் தாங்களே வெடிக்கவைத்துக் கொள்வதற்காக அல்லது தற்கொலை செய்து கொள்வதற்காக புலிகள் இயக்கமானது சிறார்கள் உட்பட சகல அங்கத்தவர்களிடமும் கைக்குண்டுகள் அல்லது சையனைற் குப்பிகளை கொடுத்துள்ளனர்.[107]

தமது குறிக்கோளை பரப்புவதற்காகவும், பெரும்பாலும் சிறுவர்களை கவர்ந்திழுத்து புதிய அங்கத்தவர்களாக சேர்ப்பதற்கும், புலிகள் இயக்கத்தினர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழ் சமுகத்தினரிடையே மிகத் தீவிரமான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறான பிரச்சாரங்கள் பெரும்பாலும், புலிகள் இயக்க தியாகிகளை கௌரவிக்கும் விசேட நிகழ்வுகள், புலிகள் இயக்க அங்கத்தவர்களின் இராணுவ அணிவகுப்பு நடவடிக்கைகள், யுத்த உபகரணங்களை பகிரங்கமாக காட்சிக்கு வைத்தல், வீதி நாடகங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றன. புலிகள் இயக்க உறுப்பினர்கள் பாடசாலைகளிலும், உரைகளை வழங்குவதோடு வீடியோ படக் காட்சிகளையும் காண்பிக்கின்றனர். அத்துடன் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும்படி ‘வரலாறு’ பற்றிய வகுப்புக்களை ஆசிரியர்களுக்கு வழங்குகின்றனர். புலிகள் இயக்கத்தில் பணியாற்றுவதன் மூலம் கிடைக்கும் கௌரவத்தையும் அந்தஸ்தையும் பெற்றுக் கொள்வதற்கு அநேக மாணவர்கள் ஆர்வம் தெரிவிக்கின்ற நிலைக்கு செல்கின்றனர், அல்லது, புலிகள் இயக்கத்தில் சேருவதன் மூலம் தேசியப் போராட்டத்தில் இணைவது தமது கடமை என எண்ணத் தலைப்படுகின்றனர்.

மிகவும் பின்தங்கிய சமூகப் பின்னணிகளைக் கொண்ட பிள்ளைகளே அதிகமாக புலிகளினால் பிடிக்கப்படுவதற்கான அதிக வாய்ப்பைக் கொண்டுள்ளனர். வறுமையின் காரணமாக அல்லது வேறு மோசமான பாதிப்புகளுக்குள்ளான குடும்பங்களைச் சேர்ந்த அநாதைகளாக்கப்பட்ட பிள்ளைகள், அல்லது, கல்வி மற்றும் தொழில்சார் வாய்புக்கள் மிக அரிதாக கிடைக்க பெறும் குடும்பங்களின் பிள்ளைகளே, அநேகமாக புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, வாய்புக்கள் ஏதும் கிடைக்காத தமது வாழ்கைக்கான மாற்று வழியாக புலிகள் இயக்கத்தைப் பார்க்கத் தலைப்படுகின்றனர்.

---

[106] Rachel Brett and Margaret McCallin, Radda Barnen, “சிறார்கள்: கண்களுக்கு புலப்படாத சிப்பாய்கள்,” 1998,பக்.98. மோதல் நிலைமைகள் சிறார்கள் மேல் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பான ஐ.நா.வின் கற்கைக்காக மேற்கொள்ளப்பட்ட சம்பவக் கற்கை, Garca Machelவினால் தயாரிக்கப்பட்டு 1996ல் ஐ.நா.விடம் ஒப்படைக்கப்பட்டது.

[107] உதாரணத்திற்குப் பார்க்க, Yvonne Kearins, குவேக்கர் ஐக்கிய நாடுகள் காரியாலயம், “இலங்கையில் பெண் சிறார் படையினள் ஒருவரின் குரல்,” 2003 ஜனவரி.

மோதல்கள் நிகழும் சூழ்நிலையில் அரசாங்கப் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களும், புலிகள் இயக்கத்தில் சிறார்கள் சேருவதற்கு எண்ணெய் வார்த்துள்ளது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் சித்திரவதைகள், சட்டவிரோதமான தடுத்து வைப்புக்கள், விசாரணைகள், மரண தண்டனைகள், பாலியல் பலாத்காரங்கள் மற்றும் காணாமல் ஆக்குதல் உட்பட்ட மோசமான அத்துமீறல்களினால், தமிழ் சிறார்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். 1993ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் பல வளரும் இளவயதினர் (14 – 24 வயது) தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகளின்படி, வடக்கில் வாழும் சிறார்களில் கால்வாசிக்கு மேற்பட்டோர், தமது குடும்ப அங்கத்தவர்கள் மீது நிகழ்தப்பட்ட வன்முறைகள் மற்றும் அத்துமீறல்களை நேரடியாக கண்களால் கண்டுள்ளனர்.[108] அதன் பிரதிபலிப்பாக சிறார்கள் புலிகள் இயக்கதில் சேர்ந்து தமது குடும்பங்களையும் சமூகத்தையும் பாதுகாக்க முனைவதோடு, கடந்தகால அத்துமீறல்களுக்கு எதிராக பழிவாங்கவும் முயற்சிக்கின்றனர்.

புலிகள் இயக்கத்தினர் சிறார்களை தமது படையணிகளில் சேர்ப்பதற்கு அச்சுறுத்தல் மற்றும் பலாத்காரங்களைப் பாவிக்கின்றனர். புலிகள் இயக்கமானது சிறார்களை பாடசாலைகளில் இருந்து வீட்டுக்கு செல்லும்போதோ அல்லது வீட்டில் இருந்து வெளியில் செல்லும்போதோ கடத்திச் செல்கின்றனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கமானது "ஒரு குடும்பத்திற்கு, ஒரு நபர்" என்கின்ற கொள்கையை அமுல்ப்படுத்தி உள்ளனர். "தமது நோக்கத்திற்காக" ஒவ்வொரு குடும்பமும் ஒரு மகனையோ அல்லது ஒரு மகளையோ தர கடமைப்பட்டுள்ளார்கள் என, தமிழ் குடும்பங்களுக்கு புலிகள் அறிவித்துள்ளனர்.

2002ம் ஆண்டு மோதல் தலிர்ப்பு ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்ட பின்னரும்கூட புலிகள் இயக்கமானது சிறார்களை கடத்திச் சென்றுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ம் ஆண்டு, குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டது.[109] புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக தமிழர்களின் வீடுகளில் சென்று தமது இயக்கத்திற்கு ஒரு பிள்ளையை கட்டாயம் தரவேண்டும் என அப்பெற்றோர்களை கேட்டுள்ளது, என நாம் அறிந்து கொண்டோம். அதற்கு மறுப்புத் தெரிவித்த குடும்பங்களுக்கு அவர்கள் நெருக்குவாரம் கொடுத்ததோடு, அச்சுறுத்தியும் உள்ளனர். தாங்கள் சொல்வதற்கு இணக்கம் தெரிவிக்காவிட்டால், அவர்களின் பிள்ளைகள் பலாத்காரமாக கொண்டுபோகப்படுவார்கள் அல்லது அக்குடும்பத்திலுள்ள வேறு பிள்ளைகள், பெரியவர்கள் கொண்டுபோகப்படுவார்கள், அல்லது அக்குடும்பத்தினர் தமது வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்படுவார்கள், என அப்பெற்றோர்களுக்கு கூறப்பட்டுள்ளது. ஒரு மகனையோ ஒரு மகளையோ, தாமாகவே முன்வந்து கொடுக்க மறுத்த குடும்பங்களில் இருந்து ஒரு பிள்ளை இரவு நேரத்தில் அவர்கள் வீட்டில் வைத்தே பலாத்காரமாக கடத்தப்பட்டுள்ளனர், அல்லது அச்சிறார்கள் கோயில் வைபவங்களில் பங்குபற்றும்போதோ, பாடசாலைக்கு செல்லும்போதோ, புலிகள் இயக்க அங்கத்தவர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்கமானது குறிப்பாக 14க்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட சிறார்களையே தமது படையணிகளில் சேர்ப்பதற்கு குறி வைத்தாலும், சில நேரங்களில் அவர்கள் 11அல்லது 12 வயது சிறுவர்களையும் கடத்திச் சென்றுள்ளனர். பெண் பிள்ளைகள் பெருந்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, புலிகள் இயக்கத்தினால் படைகளில்

---

[108] D.J. சோமசுந்தரம், சிறார்களின் மனவடு (யாழ்ப்பாணம்: யாழ். பல்கலைக்கழகம், 1993)

[109] பார்க்க மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, அச்சத்துள் வாழ்தல்: இலங்கையல் சிறார் படையினரும் புலிகள் இயக்கமும், vol 16. no.13(c), நவம்பர் 2004, http://hrw.org/reports/2004/srilanka1104.

சேர்க்கப்பட்டுள்ள சிறார்களின் எண்ணிக்கையில் 40 வீதமானோர் பெண்கள் எனவும் மதிப்பிடப்படுள்ளது.[110]

சில சிறார் படையினர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறியதன்படி, தாங்கள் படையணிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் தமது குடும்பங்களுடன் எந்த தொடர்புகளும் இல்லாமலேயே புலிகள் இயக்கத்தினர் அவர்களை வைத்திருந்துள்ளனர். இராணுவப் பயிற்சியின்போது அச்சிறார்கள் கண்ணிவெடிகள் மற்றும் வெடிகுண்டுகள் உட்பட ஆயுதங்களை கையாளுவதற்கும் கற்றுக்கொள்ளுவதோடு, இராணுவத் தந்திரோபாயங்களும் அவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. தவறுகள் விடுகின்ற சிறார்கள் அநேகமாக அடிக்கப்பட்டுள்ளனர். தப்பியோட முயற்சிக்கின்ற சிறார்கள் பெரும்பாலும் அவர்களின் மொத்த அணியினர் முன்னால் நிறுத்தப்பட்டு அடிக்கப்பட்டுள்ளனர். தப்பியோடச் சிந்திக்கின்ற ஏனைய சிறார்களுக்கு அச்சத்தை ஊட்டுவதற்காகவே அவ்வாறு அடிக்கப்பட்டுள்ளனர்.

2004ம் ஆண்டில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேர்காணல் செய்த பல முன்னாள் சிறார் படைணினர், கேணல் கருணா எனப்படும் வி.முரளீதரன் கிழக்கு மாகாண தளபதியாக பணியாற்றிய காலத்தில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டவர்களாவர். 2004ம் அண்டில் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா வெளியேறியபோது அவரது கட்டளையின் கீழ் சுமார் 2,000 சிறார்கள் உட்பட சில ஆயிரக்கணக்கான அங்கத்தவர்கள் இருந்தனர். 2004ம் ஆண்டு ஏப்ரலில் புலிகள் இயக்கம் கருணா படையினரின் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை விரைவில் தோற்கடித்தபின்னர், கருணாவின் கீழ் பணியாற்றிய சிறார் படையினர், ஒன்றில் தப்பித்து தமது வீடுகளுக்கு ஓடினார்கள் அல்லது அவர்களது வீடுகளுக்கு திரும்பி போகும்படி தளபதிகளால் ஊக்குவிக்கப்பட்டார்கள். அக்குறிப்பிட்ட மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில், அவ்வாறான சிறார்கள் தமது வீடுகளுக்கு திரும்பிய, 1,825 சம்பவங்களை UNICEF ஆவணப்படுத்தியுள்ளது.[111]

பிளவு நடந்து சில வாரங்களின் பின்னரே, புலிகள் இயக்கமானது கருணாவின் முன்னாள் சிறார் படையினரை திட்டமிட்டு மீள படைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். பெரும்பாலும் சீருடைகளை அணிந்தபடி புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள், கிராமம் கிராமமாகச் சென்று தமது இயக்கத்தின் முன்னாள் அங்கத்தவர்களின் வீடுகளுக்குச் சென்றதோடு, கிராம மட்டங்களினாலான கூட்டங்களை ஒழுங்கு செய்து, அவர்களை மீண்டும் தமது இயக்கத்தில் சேரும்படி வலியுறுத்தினர். அவர்கள் மோட்டார் வாகனங்களைப் பாவித்து ஒலிபெருக்கியின் மூலம் அறிவித்தல்களை விடுத்ததோடு, திரும்பவும் வந்து தங்களை இயக்கத்தில் பதிவு செய்யும்படி கடிதங்களையும் அனுப்பினர். அச்சிறார்கள் திரும்பி வராவிட்டால் அவர்கள் பலவந்தமாக எடுத்து செல்லப்படுவார்கள் என புலிகள் இயக்கத்தினர் அக் குடும்பங்களை அச்சுறுத்தியும் உள்ளனர். புலிகள் இயக்கமானது தமது பிள்ளைகளை கடத்திச் செல்வதற்கு இரவு நேரங்களில் வீடுகளுக்கு வந்ததாகவும், அவற்றை தடுக்க முயற்சித்தபோது தாங்கள் தாக்கப்பட்டதாகவும் பெற்றோர்கள் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். 2004ம் ஆண்டு இறுதிப்பகுதி ஆவதற்குள் 250க்கும் மேற்பட்ட சிறார்கள் பெரும்பாலும் பலாத்காரத்தினால் மீள சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மேலும் பலர் தாங்கள் புலிகள் இயக்கத்தினால் என்னேரமும் கடத்தப்படலாம் என்கின்ற மனக் கலக்கத்துடன் வாழ்ந்ததோடு, பல சமயங்களில் தமது

---

110 "ஆள்சேர்ப்பில் பால் நிலை ஆய்வு," UNICEF, தகவல்கள் UNICEFஇனால் வழங்கப்பட்டன, 2006, டிசம்பர் 11.

111 UNICEFஇனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

வீடுகளைவிட்டு வெளியே வருவதற்கும், பாடசாலைகளுக்கு செல்வதற்கும்கூட தயக்கம் தெரிவித்துள்ளனர்.

UNICEF அமைப்பானது புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் தொடர்பாக முறையான ஆவனப்படுத்தல் ஒன்றை 2002ம் ஆண்டில் ஆரம்பித்ததுடன், கடத்தல்கள் தொடர்பாக தம்மிடம் வந்து அறிவிக்கும்படி குடும்பங்களை ஊக்குவித்ததோடு விரிவான புள்ளிவிபரக் கோவையையும் தயாரித்தது. 2002ம் ஆண்டு ஜனவரி முதல் 2006ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிவரை புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சிறார்களை படையில் சேர்த்துக்கொண்ட 5,956 சம்பவங்களை UNICEF அமைப்பின் உத்தியோகத்தர்கள் பதிவு செய்துள்ளனர். இத்தொகையில், 1,012 (17வீதம்) 15 வயதிற்கு குறைந்த சிறார்களாவர்.[112] 15 வயதிற்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்ப்பது யுத்த குற்றமாக கணிக்கப்படுகிறது. (பார்க்க அத்தியாயம் IX)

புலிகள் இயக்கத்தினால் கடத்தப்பட்டு சேர்க்கப்பட்ட பெரும்பாலான சிறார்கள் பற்றிய சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்படவில்லை. ஏனெனில் முறைப்பாடு செய்தால் புலிகள் இயக்கத்தினால் தங்களுக்கு பாதிப்பு வரும் என குடும்பங்கள் அஞ்சியதனாலும், UNICEF காரியாலயம் ஒன்றிற்கு செல்ல முடியாது இருந்ததினாலும், முறையிடுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதை அறியாது இருந்ததினாலும் இது நடைபெறவில்லை. புலிகள் இயக்கத்திலிருந்து தப்பியோடிய அல்லது அவர்களால் விடுதலை செய்யப்பட்ட சிறார்கள் தொடர்பாகவும் UNICEF அமைப்பானது தகவல் அறிந்துள்ளது. அதில் 37 வீதம் முன்னர் அவர்களின் புள்ளிவிபரக் கோவைக்குள் உள்ளடக்கப்பட்டதாகும்.[113]

2002ம் ஆண்டின் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை கண்காணிப்பதற்கு பொறுப்பான இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவினரிடமும் (SLMM), புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறார்களை கடத்தும் சம்பவங்கள் பற்றி பல முறைப்பாடுகள் வந்துள்ளன. 2002ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதிக்கும் 2006ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கும் இடையில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த மீறல்கள் என்னும் அடிப்படையில் 1,743 சிறார்களை கடத்தும் சம்பவங்களில் புலிகள் ஈடுபட்டுள்ளதாக SLMM அறிவித்துள்ளது. SLMMக்கு அறிவிக்கப்பட்டுள்ள மொத்த யுத்த நிறுத்த மீறல்கள் நடவடிக்கைகளில் இது 45 வீதத்திற்கும் அதிகமானதாகும்.[114]

1998ல், ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதிக்கு வழங்கிய உறுதிமொழி உட்பட, 2001 மற்றும் 2003ம் ஆண்டுகளில் UNICEF அதிகாரிகளிடம் வழங்கிய உறுதிமொழிகள் வரை, புலிகள் இயக்கமானது தாங்கள் சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை சிப்பாய்களாக பாவிப்பதை நிறுத்துவதாக பல தடவைகளில் பகிரங்கமாக உறுதியளித்துள்ளது. ஆனால் இவ்வெந்த உறுதிமொழிகளும் அவர்களால் காப்பாற்றப்படவில்லை.

மோதல் நிலமைகளால் பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பாக நடைமுறைப் படுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்று தொடர்பாக, 2003ம் ஆண்டில், புலிகள் இயக்கமும் இலங்கை அரசாங்கமும் இணக்கம் தெரிவித்தனர். சிறார்களை படையில் சேர்த்துக்கொள்வதை முடிவுக்கு கொண்டுவருதலும், தமது படையணிகளில் உள்ள சிறார்களை விடுவிப்பதற்கு புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்தமையுமே அச்செயல்

---

[112]UNICEFஇனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12

[113]Ibid

[114] இலங்கை கண்காணிப்பு குழு, “ஒரே பார்வையில் யுத்த நிறுத்த மீறல்கள்,” தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2002, பெப்ரவரி 22 – 2006, டிசம்பர் 31.

திட்டத்தின் மிகப் பிரதான அம்சமாகும். இச்செயல் திட்டத்தை அமுல் படுத்துவதில் பிரதான பங்காளியாக UNICEF அமைப்பும் இருந்ததோடு, குறிப்பாக தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கு சிறார்கள் தயக்கம் தெரிவிக்கின்ற நிலைமை, மற்றும் விசேடமான பாதுகாப்பு தேவைகள் பற்றிய நிலைமை, அல்லது அச்சிறார்களின் குடும்பங்களை கண்டுபிடிப்பதில் ஏற்படக்கூடிய சிரமங்கள் ஏற்படுதல், போன்றவற்றை கவனத்தில் கொண்டு UNICEF அமைப்பானது பிள்ளைகள் திரும்பி வந்து, மீள தமது சமூகத்தோடு போய்ச் சேருவதை வசதிப்படுத்துவதற்கு ஏதுவாக, மூன்று இடைமாற்ற நிலையங்களை (Transit Centers) நிறுவுவதற்கு இணக்கம் தெரிவித்தது.

முதலாவது இடைமாற்ற நிலையமானது, 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் திறக்கப்பட்டதோடு, அதன் முதல் வருட செயற்பாட்டில் மொத்தமாக 172 சிறார்களையே புலிகள் இயக்கத்திடம் இருந்து அது பெற்றுக்கொண்டது. அந்நிலையமானது ஒரே தடவையில் 100 சிறார்களை வைத்திருக்கக் கூடிய வசதிகளை கொண்டிருந்தாலும், எந்த ஒரு கட்டத்திலும் அது 49 சிறார்களுக்கு மேல் கொண்டிருக்கவில்லை. அது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் அந்நிலையம் வெறுமையாகவே இருந்துள்ளது. 2005ம் ஆண்டு UNICEF அமைப்பானது இடைமாற்ற நிலையம் என்பதற்கான வசதிகளை மூடிவிட்டதோடு, அந்நிலையத்தை வேறு தேவைகளுக்கான இடமாக மாற்றியது. ஏனைய இரு நிலையங்களைப் பொறுத்தவரை, மிக சிறிய அளவிலான சிறார்களே புலிகளினால் விடுதலை செய்யப்பட்டதனால் அந்நிலையங்கள் அமைக்கப்படவுமில்லை, இடைமாற்ற நிலையங்களாக பாவிக்கப்படவுமில்லை.

2002ம் ஆண்டில் இருந்து 2006வரை புலிகள் இயக்கமானது மேலதிகமாக 1,595 சிறார்களை விடுதலை செய்திருந்தாலும், அவர்கள் எவரும் இடைமாற்ற நிலையங்களுக்கு ஊடாகச் செல்லாமல் நேரடியாக தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களாவர். எவ்வாறாயினும், இக்காலகட்டத்தில் அதைவிட நான்கு மடங்கு அதிகமாக பல புதிய சிறார்களை புலிகள் இயக்கத்தினர் தமது படையணிகளில் சேர்த்துக்கொண்டுள்ளனர்.[115]

2006ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் புலிகள் இயக்கத்தின் தமிழீழ நீதிப் பிரிவானது, புதிய சிறார் பாதுகாப்பு சட்டமொன்றை 2007ம் ஆண்டு ஜனவரி 7ம் திகதி முதல், அமுலுக்கு கொண்டு வருவதாக அறிவித்தது.[116] அச்சட்டமானது புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 17 என வரையறுத்ததோடு, 18 வயதிற்கு குறைந்த சிறார்கள் ஆயுத மோதல்களில் ஈடுபடக்கூடாது என்றும் வரையறுக்கிறது.[117]

இப்புதிய சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதை கண்காணிப்பதற்காக புலிகள் இயக்கத்தின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது பலப்படுத்தப்பட்டுள்ளது என, புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார். புலிகள் இயக்கத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும் சகல நபர்களும் ஆகக் குறைந்தது இரண்டு தடவைகளாவது ஆராய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களில் வயது குறைந்தவர்கள் இருப்பின் திருப்பி வீடுகளுக்கு

---

[115] UNICEFஇனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.

[116] புலிகள் இயக்கத்தின், அரசியல் பிரிவுத் தலைவர், சு.ப. தமிழ்செல்வனிடமிருந்து மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம், 2006, டிசம்பர் 5, "தமிழீழ சட்டத்துறை சிறார் பாதுகாப்பு சட்டத்தை அமுலுக்கு கொண்டுவருகிறது." தமிழ் நெற், 2006, ஒக்டோபர் 25, http://www.tamilnet.com/art.html/catid=13&artid=20025 (2007, ஜனவரி 3ல் பார்க்கப்பட்டது).

[117] சிறார் பாதுகாப்பு அறிக்கைக்கு தொடர்ச்சி, "இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஆயுத மோதல்களில் சிறார்கள், 2006 ஆகஸ்ட், "சிறார் பாதுகாப்பு அதிகாரசபை, புலிகள் இயக்க சமாதானச் செயலகம், 2006, டிசம்பர்.

அனுப்பப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், வயது குறைந்தவர்களை படைகளில் சேர்ப்பதை தடுப்பதற்காக, எழுத்து மூல உத்தரவுகள் தமது சகல கள அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு அனுப்பிவைத்த ஆவணம் ஒன்றின் மூலம் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.[118]

2006 ஜூன் மாத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில், 197 வயது குறைந்த சிறார்கள் புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்டதாக புலிகள் இயக்கம் கூறுகிறது. 2006ம் ஆண்டில் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 17 வயதிற்கு குறைந்த மேலும் 115 சிறுவர்கள் இன்னும் புலிகள் இயக்கத்திடம் இருப்பதாக அது கூறுகிறது. சர்வதேச சட்டத் தராதரங்களக்கு அமைய 17 வயதிற்கு குறைந்த சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது என்பதை புலிகள் இயக்கத்தினர் ஏற்றுக் கொள்ளாததோடு, 17வயதிற்கு குறைந்த நிலையில் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, பின்னர் அவர்களுக்கு 17 வயது நிரம்புகின்ற பட்சத்தில் அவர்களை விடுதலை செய்வது அவசியம் இல்லை என்னும் நிலைப்பாட்டையும் புலிகள் இயக்கத்தினர் கொண்டிருக்கின்றனர்.[119]

ஐக்கிய நாடுகள் சபையினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் மற்றும் ஏனைய அரசாங்கங்களினதும் தொடர்ச்சியான சர்வதேச அழுத்தங்கள் காரணமாக, 2002க்கும் 2006ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புலிகள் இயக்கத்தினால் சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கையானது சுமார் 60வீதம் குறைந்தது என்றே கூறவேண்டும். எவ்வாறாயினும் புலிகள் இயக்கம் சிறார்களை படையில் சேர்க்கின்றனர். குறிப்பாக 2005ம் ஆண்டு பிற்பகுதியில் மோதல் நிலமைகள் அதிகரிக்க தொடங்கியதும், பிள்ளைகளைத் தராவிட்டால் யுத்தம் தொடங்கிய பின் புலிகள் இயக்கம் தங்களுக்கு பாதுகாப்பு தரமாட்டாது என்று, தங்களை புலிகள் அச்சுறுத்தியதாக பல பெற்றோர்கள் சர்வதேச அமைப்புக்களிடம் தெரிவித்தனர்.[120] மாதம் ஒன்றுக்கு சுமார் 50 சிறார்களை படையில் சேர்க்கப்பட்டமை தொடர்பாக புலிகள் இயக்கம் மீது குற்றம் சாட்டப்பட்ட சம்பவங்களை UNICEF ஆவணப்படுத்தியுள்ளதோடு, இத்தொகையானது அவர்கள் இக்கால கட்டத்தில் விடுதலை செய்த சிறார்களின் எண்ணிக்கையின் 5 மடங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது.[121]

2005 பிற்பகுதியிலும், 2006ம் ஆண்டிலும் மோதல் நிலமைகள் அதிகரித்த பின்னர், சிறார்கள் படையில் சேர்க்கப்படும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் UNICEF அமைப்பிற்கு கிடைப்பது முன்னரைவிட மிகவும் குறைந்தது. அதற்கு காரணம் இது தொடர்பாக முறையிடக்கூடாது என அவர்கள் பெற்றோர்கள் மீது போட்ட மேலதிக அழுத்தங்களும் அதனால் அதிகரித்த அச்சமும் என்றே கூறலாம். “சர்வதேச நபர்களிடம் நீங்கள் போய் முறையிட்டால் உங்கள் பிள்ளைகளின் உடலை மட்டும்தான் பார்ப்பீர்கள்”

[118] Ibid., p.5

[119] Ibid.

[120] Charu Lata Hogg, The Royal Institute of International Affairs and the coalition to stop the Use of Child Soldiers, “Child Recruitment in South Asian Conflicts: A Comprehensive Analysis of Sri Lanka, Nepal and Bangladesh,” 2006, p. 10.

[121] UNICEFஇனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12. 2006ல் மொத்தமாக 138 சிறார்கள் புலிகள் இயக்கத்தால் விடுதலை செய்யப்பட்டு:ள்ளனர், சராசரியாக மாதத்திற்கு 12 பேர் பருமட்டாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

என சில குடும்பங்களிடம் புலிகள் இயக்கத்தினர் கூறியுள்ளதாக சில பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.[122]

புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான பாரிய இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க, புலிகள் இயக்கத்தின் படையணிகளில் உள்ள சிறார்களுக்கான ஆபத்தும் அதிகரித்தன. அரசாங்கத்தின் இலக்குகள் மீதான இராணுவ நடவடிக்கையின் போது புலிகள் சிறார்களை ஈடுபடுத்துவதால், புலிகள் இயக்கத்தின் தளங்கள் மீது இலங்கை இராணுவத்தினர் மேற்கொள்ளும் தாக்குதல்களின்போது இச்சிறார்கள் காயப்படுவது, அங்கவீனமாவது மற்றும் கொல்லப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அதிகரித்த வண்ணமுள்ளன.

புலிகள் இயக்க்தினால் சிறார்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக யுனிசெப் அமைப்பினால் ஆவணப் படுத்தப்பட்ட மொத்த சம்பவங்களில், 1,685 சம்பவங்கள் (683 இன்னமும் 18 வயதிற்கு குறைந்தவர்கள் உட்பட) இன்னமும் எவ்வித கணக்குகளுக்கும் உட்படுத்தப்படாமல் இருக்கின்றன. இவர்கள் இன்னமும் புலிகள் இயக்கத்திலேயே பணியாற்றுகிறார்கள் என நம்பப்படுகின்றது. இது தொடர்பாக மிக குறைவாகவே அறிக்கையிடுதல்கள் (underreporting) நடைபெறுகின்ற நிலையில், புலிகள் இயக்கத்தின் படையணிகளில் இருக்கும் சிறார்களின் உண்மையான மொத்த எண்ணிக்கை 4,000த்தையும் விட அதிகமானதாகும்.

---

[122] சர்வதேச மன்னிப்புச் சபை, "கிழக்கில் அச்சம் நிறைந்த சூழல்," 2006, பெப்ரவரி 3, http://web.amnesty.org/library/index/ENGASA370012006?open&of=ENG-LKA (2007, ஜனவரி 3ல் பார்க்கப்பட்டது)

## VIII. சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபையின் நடவடிக்கைகள்

ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான விடயத்தில் சர்வதேச தராதங்களை கடுமையாக அமுல் படுத்துவதை இலக்காகக் கொண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது 1998ம் ஆண்டு முதல் தொடர்ச்சியான பல தீர்மானங்களை நிறைவேற்றி வந்துள்ளது. ஆயுத மோதல்களில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர், சிறார்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு சர்வதேச விழுமியங்களை கௌரவிப்பதை உறுதி செய்வதற்காக, ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கு இணங்க, தனது அங்கத்துவ நாடுகள், பொருத்தமான சட்ட, அரசியல், ராஜதந்திர, பொருளாதார மற்றும் பண்ட ரீதியான (material) நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக கவனத்தில் எடுக்க வேண்டும் என்று 2001ம் ஆண்டில் ஐ.நா. கோரிக்கை விடுத்தது.[123] சிறார்களை படைகளில் சேர்த்துக்கொள்ளும் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக விநியோகத் தடைகளை (ஆயுத விநியோகத் தடைகளை) விதிப்பது தொடர்பாகவும் கவனமெடுக்க வேண்டும் என, ஐ.நா. பாதுகாப்புச் சபையும் 2004, 2005ம் ஆண்டுகளில் தனது நோக்கத்தை வெளிப்படுத்தி இருந்ததோடு, மிக அண்மையில், 2007. நவம்பர் 27ம் திகதி வெளியிடப்பட்ட பாதுகாப்புச் சபைத் தலைவரின் அறிக்கை மூலமும் அதனை வெளிப்படுத்தியது.[124]

ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பாக, அண்ணளவாக, வருடத்திற்கு ஒருமுறை ஐ.நா. செயலாளர் நாயகம், பாதுகாப்பு சபைக்கு அறிக்கையொன்றை வழங்குவார். 2002ம் ஆண்டிலிருந்து பாதுகாப்புச் சபையின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வறிக்கையில், சிறார்களை ஆயுதப் படைகளில் சேர்த்து, மோதல்களில் பயன்படுத்தும், ஆயுதக் குழுக்கள் பற்றியும், சட்டரீதியாக தமது கடப்பாடுகளுக்கு முரணாக இதனைச் செய்யும் அரசாங்கங்கள், அரசாங்கமல்லாத சகல தரப்பினர் பற்றியும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டன. ஆரம்பத்தில் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலுக்குள் இவ்விபரங்கள் அடங்கிய பட்டியல்களில், ஒரு குறிப்பிட்ட சில நாடுகள் மட்டுமே கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், 2003ம் ஆண்டில் சாதாரணமாக பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலுக்குள் அடங்காத இலங்கை போன்ற நாடுகளும் அப்பட்டியலுக்குள் அடக்கப்பட்டன.

2003ம் ஆண்டிலிருந்து தொடர்சியாக வெளிவந்த மூன்று அறிக்கைகளிலும், சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை ஆயுத மோதல்களில் பயன்படுத்தும் ஒரு தரப்பினராக புலிகள் இயக்கத்தையும் செயலாளர் நாயகம் உள்ளடக்கியுள்ளார்.[125] 2006, அக்டோபர் 26ல் வெளியான அவரது மிக அண்மைய அறிக்கையில் புலிகளுக்கு மேலதிகமாக, முதல் முறையாக கருணா குழுவினரின் பெயரையும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிறார்களை பலவந்தமாக கடத்தி அவர்களை தமது படையணிகளில் சேர்ப்பதோடு, அவர்களை ஆயுத

[123] ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரகடனம் 1379 (2001), S/RES/1379(2001), http://www.un.org/special-rep/children-armed-conflict/KeyDocuments/Printable/Resolution/S-RES-1379English.html (accessed January 3, 2007), para 9 b.

[124] பார்க்க. ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரகடனம 1539 (2004), S/RES/1539(2004), http://www.un.org/special-rep/children-armed-conflict/KeyDocuments/Resolution/S-RES-1539English.html (accessed January 3, 2007), para. 5 c; Resolution 1612 (2005), S/RES/1612(2005), http://www.un.org/special-rep/children-armed-conflict/Download/S-RES-1612e.pdf (accessed January 3, 2007), para. 9; and the Statement by the President of the Security Council, S/PRST/2006/48, November 28, 2006, http://daccessdds.un.org/doc/UNDOC/GEN/N06/632/29/PDF/N0663229.pdf?OpenElement (accessed January 3, 2007), para.4.

[125] 2002 ல் வெளியான அறிக்கையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிகழ்சி நிரலுக்குள் அடங்கிய விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடப்படாவிட்டாலும், புலிகளினால் சிறார்கள் படைகளில் சேர்கப்படுவது தொடர்பாக அறிக்கையின் உள்ளடக்கத்திற்குள் கலந்துரையாடப்பட்:டுள்ளது.

மோதல்களில் சிறார் படையினராக பாவிப்பதில், இவ்விரு தரப்பினரும் பொறுப்பாக உள்ளனர் என அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.[126]

ஆயுத மோதல்களின் போது சிறார்களின் மீது நிகழ்த்தப்படும் அத்துமீறல்கள் தொடர்பாக, உடனடியானதும், நம்பிக்கையானதும், உறுதியானதுமான தகவல்களைத் திரட்டுவதற்கு ஏதுவாகவும், கண்காணிப்பு மற்றும் கிரமமாக அறிக்கையிடுதல் போன்றவற்றுக்கான செயல் முறையொன்றை நிறுவும்படியாகவும், பாதுகாப்புச் சபையானது 2005ம் ஆண்டில் செயலாளர் நாயகத்தைக் கேட்டுக்கொண்டது.[127] இச் செயல்முறையை முதன் முதலில் நடைமுறைப் படுத்துவதற்கு பட்டியலிடப்பட்ட ஏழு நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையில் சிறார்களை பலவந்தமாக படைகளில் சேர்த்தல், அவர்களை படையினராக பாவித்தல் உட்பட, சிறார்கள் மீது நடத்தப்படும் அத்துமீறல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டி, அத்தகவல்களை ஐ.நா. தலைமையகத்திற்கு கிரமமாக அனுப்பி வைப்பதற்காக, ஐ.நா,வோடு தொடர்பான செயலணிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் அடங்கிய விசேட பணிக்குழு (Task Force) ஒன்றும் அமைக்கப்பட்டது.

குறிப்பாக, நிலைமைகளை கண்காணித்து விபரங்கள் திரட்டல், என்னும் செயன்முறைகூடாக திரட்டப்பட்ட தகவல்கள் தொடர்பாக கவனத்தில் எடுப்பதற்கும், அத்தகவல்களின்படி சிறார்கள் மீது நிகழ்தப்படுவதாக அறிக்கையிடப்படும் அத்துமீறல்கள் தொடர்பாக உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பாதுகாப்புச் சபைக்கு பரிந்துரைகள் வழங்குவதற்காவும், ஆயுத மோதல்களில் சிறார்கள் தொடர்பான செயற்பாட்டுக் குழு ஒன்றை (working group) உருவாக்குவதற்கும் பாதுகாப்புச் சபையானது 2005ல் நடவடிக்கை எடுத்தது. 2005ம் ஆண்டு அமைக்கப்பட்ட செயற்பாட்டுக் குழுவானது புரூண்டி, கொங்கோ, சூடான், மற்றும் Cote d' Ivoire ஆகிய நாடுகள் தொடர்பான அறிக்கைகளை கவனத்திற்கு எடுத்தது. சிறார்களைப் படையில் சேர்த்தல் தொடர்பாக கொங்கோ ஜனநாயகக் குடியரசின் மீது தற்போது இருக்கும் தடைகளான, பயணத் தடை, சொத்துக்களை நகரவிடாமல் செய்தல் (asset freezes) என்பனவற்றை நடைமுறைப் படுத்தும்படி செயற்பாட்டுக் குழு பரிந்துரை செய்தது. இவ்வருட ஆரம்பத்தில், சிறார்களைப் படையில் சேர்த்தல் உட்பட வேறு பல அத்துமீறல்கள் தொடர்பாக Cote d' Ivoire வின் ஆயுதக் குழுவின் தளபதிக்கெதிராகவும் தடைகளை அமுல்ப்படுத்த பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுத்தது.

இலங்கையில் ஆயுத மோதல்களில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் சிறார்கள் மீது மேற்கொள்ளும் அத்துமீறல்கள் தொடர்பாக 2007 ஜனவரியில் செயலாளர் நாயகம் அறிக்கையொன்றை சமர்ப்பித்தார். 2005, நவம்பர் முதலாம் திகதிக்கும், 2006, அக்டோபர் 21ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் புலிகள் இயக்கத்தாலும் கருணா குழுவினராலும் மேற்கொள்ளப்பட்ட சிறார்களை படையில் சேர்க்கும் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை அவ்வறிக்கை உள்ளடக்கியிருந்தது. அவ்விரு சாராரும் உடனடியாக சிறார்களை படையில் சேர்ப்பதையும். அவர்களை படையினராக பாவிப்பதையும் நிறுத்த வேண்டும் என்றும், தமது படையணிகளில் ஏற்கனவே இருக்கும் சகல சிறார்களையும் விடுவிக்க வேண்டும் என்றும், அவ்வறிக்கை கோரியிருந்தது. புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக அத்துமீறலில் ஈடுபட்டு வந்துள்ளமையால், "புலிகள் இயக்கத்தின் இராணுவ மற்றும் அரசியல் தலைமை மீது இலக்கு வைத்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அவ்வறிக்கை கோருகின்றது.[128] "கிழக்கு மாகாணத்தில் கருணா

[126] ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை, 2006, அக்டோபர் 26 http://daccessdds.un.org/doc/UNDOC/GEN/N06/577/95/PDF/N0657795.pdf?OpenElement (accessed January 3, 2007).

[127] ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரகடனம் 1612, para. 3.

[128] "இலங்கையில் ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை, 2006, டிசம்பர் 20.

குழுவினரால் மேற்கொள்ளப்படும் சிறார்களை படையில் சேர்ப்பது/ அல்லது கடத்துவது போன்ற செயற்பாடுகளுக்கு, இலங்கைப் பாதுகாப்புப் படையின் சில சக்திகள் உடந்தையாக இருப்பதாக வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்" என அவ்வறிக்கையானது இலங்கை அரசாங்கத்தையும் கோரியிருந்தது. ஆயுத மோதல்களும் சிறார்களும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் செயற்பாட்டுக் குழு 2007 பெப்ரவரியில் இவ்வறிக்கை தொடர்பாக கவனத்தில் எடுக்க இருப்பதோடு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தன் பரிந்துரைகளை மொத்த பாதுகாப்பு சபையிடமும் முன்வைக்க இருக்கிறது.

## IX. சட்டத் தராதரங்கள்

### சிறார்களைப் படையில் சேர்ப்பதற்கான சர்வதேசத் தடை

சிறார்களைப் படைகளில் சேர்த்து அவர்களை படையினராக பாவிப்பதன் மூலம், புலிகள் இயக்கம், கருணா குழு ஆகிய இருவருமே சர்வதேச சட்டத்தை மீறி வருகின்றனர். கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை வழங்குவதன் மூலமும், அவர்களின் கடத்தல்களைத் தடுப்பதற்கு பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்காதிருப்பதன் மூலமும், சேர்க்கப்பட்ட சிறார்கள் பாதுகாப்பாக விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருப்பதன் மூலமும், இலங்கை அரசாங்கமும் சர்வதேச சட்டத்தை மீறி வருகின்றது.

சிறார்களை படைகளில் சேர்த்தல் மற்றும் அவர்களை இராணுவ மோதலோடு தொடர்பான பணிகளில் ஈடுபடுத்துதல் என்பவற்றை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் (யுத்த சட்டங்கள்) மனித உரிமைச் சட்டங்களும் தடை செய்துள்ளன. சர்வதேச மட்டத்திலல்லாத ஆயுத மோதல்களின்போது (non-international armed conflict), அரசாங்கங்களோ அல்லது அரசாங்கமல்லாத ஆயுதக் குழுக்களோ, 15 வயதிற்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்ப்பது, அல்லது அவர்களை பாவிப்பதை, 1949ம் ஆண்டு ஜெனிவா உடன்படிக்கையின் IIவது சட்டவாக்கம் தடைசெய்கிறது. இச்சட்டத் தராதரமானது, 1991ல் இலங்கை அரசாங்கத்தினாலும் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறார்கள் உரிமைச் சாசனத்திலும் (Convention on the Rights of Child) பிரதிபலிக்கின்றது.[129] சிறார்களை படையில் சேர்த்து அவர்களை பயன்படுத்துவதைத் தடை செய்வதானது இப்போது சர்வதேச ரீதியாக நடைமுறைப்படுத்தும் சாதாரண சட்ட மரபாகியிருப்பதோடு (customary international law), ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரையும் இது கட்டுப்படுத்தக் கூடியதாக உள்ளடக்குகின்றது.

2002ம் ஆண்டில் அமுலுக்கு வந்த, ஆயுத மோதல்களில் சிறார்களை ஈடுபடுத்துதல் தொடர்பான சிறார்கள் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையின் மேலதிக சட்டவாக்கத்தில் இலங்கையும் ஒரு தரப்பாகும்.[130] எந்தவொரு ஆயுத மோதல்களின் போதும். பலவந்தமாகவோ அல்லது வேறுவிதமாகவோ நடத்தப்படும் ஆட்சேர்பில் நேரடியாக பங்கேற்பதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 18 என சிறார் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை சட்டவாக்கமானது தரமுயர்த்தப்பட்டுள்ளது. அரசல்லாத ஆயுதப் படைகளுக்கும் இச் சட்டவாக்கமானது கடப்பாடுகளை விதித்துள்ளது. "அரச படைகளுக்கு புறம்பாக இயங்குகின்ற ஆயுதக் குழுக்களும், 18 வயதிற்கு குறைந்த நபர்களை எந்தச் சூழ்நிலையின் கீழும் ஆயுத மோதல்களின் போது பயன்படுத்தக் கூடாது", என 4வது சரத்து தெரிவிக்கின்றது.[131] "இவ்வாறான நடவடிக்கைகளை குற்றச் செயல்களாகக் கண்டு, அவற்றைத் தடுப்பதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது உட்பட, இத்தகைய சகல ஆட்சேர்ப்புக்களையும் தடைசெய்வதற்கு

---

[129] சிறார்கள் உரிமைச் சாசன (CRC), G.A. res. 44/25, annex, 44 U.N. GAOR Supp. (No. 49) at 167, U.N. Doc. A/44/49 (1989), entered into force Sept. 2, 1990. The CRC has been ratified by all states except Somalia and the United States.

[130] சிறார்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவது தொடர்பான, சிறார்கள் உரிமைச் சாசனத்தின் 130வது மேலதிக உடன்படிக்கை adopted May 25, 2000, G.A. Res. 54/263, Annex I, 54 U.N. GAOR Supp. (No. 49) at 7, U.N. Doc. A/54/49, Vol. III (2000), entered into force February 12, 2002. Sri Lanka ratified the protocol on September 8, 2000. Sri Lanka's initial report to the UN Committee on the Rights of the Child on compliance with the Optional Protocol was due in 2004, but at this writing it has not yet been submitted.

[131] Ibid., art.4.

பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்," என அச்சட்டவாக்கம் அரசாங்கங்களுக்கும் கடப்பாடுகளை விதிக்கின்றது.[132]

அரசாங்கப் படைகளில் நபர்கள் சுயவிருப்பில் வந்து சேருவதற்கான வயதெல்லை தொடர்பாக, மேலதிக சட்டவாக்கமானது குறிப்பிட்ட வயதெல்லை எதையும் வரையறுக்காவிட்டாலும், சுய விருப்பில் அரசாங்கப் படைகளில் வந்து சேருவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை தொடர்பாக, அரசாங்கங்கள் தாமாகவே கட்டுப்படும் இணைப் பிரகடனமொன்றை செய்ய வேண்டும் எனவும், அச்சட்டவாக்கம் கோருகின்றது. அவ்வாறு வரையறுக்கப்படும் வயதெல்லையானது 16 விட குறைவாக இருக்க முடியாது. இலங்கையைப் பொறுத்தவரை, அரசாங்கப் படைகளில் வந்து சேரும் ஆகக் குறைந்த வயதெல்லையாக 18 வயது என்பதை, அச்சட்டவாக்கத்தில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்ளும்போதே அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் அரச மற்றும், அரச சார்பல்லாத படையினர் இருதரப்பிலும் எல்லாவிதமான ஆட்சேர்ப்புக்கும் இந்த வயதெல்லையானது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

1999ம் ஆண்டில் சர்வதேச தொழில் நிறுவனத்தின் (ILO) அங்கத்துவ நாடுகளாவன, அதி மோசமான சிறார் தொழில் முறைமை தொடர்பான உடன்படிக்கையை (182) (Worst form of Child Lobour Conventions) ஏகமனதாக நிறைவேற்றின. 18 வயதுக்கு குறைந்த சகலரையும் சிறார்கள் என அது வரையறுப்பதோடு, *அதி மோசமான சிறார் தொழில் முறைமை* என்பதை தனது வரைவிலக்கணத்திற்குள் பின்வருமாறு உள்ளடக்கியிருக்கிறது.

> சிறார்களை கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல். கடனுக்காக அடிமைப் படுத்தல், பண்ணை அடிமை முறை, பலவந்த அல்லது கட்டாய வேலைமுறை மற்றும் பலவந்தமாக சிறார்களை படைகளில் சேர்த்தல் அவர்களை மோதல்களில் ஈடுபடுத்தல் உட்பட்ட சகலவிதமானதும் அடிமைத்தனத்தை ஒத்த நடவடிக்கைகளாகும்.[133]

இலங்கை அரசாங்கமானது 2001ம் ஆண்டு மார்ச் 1ம் திகதி, அதி மோசமான சிறார் தொழில் முறைமை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. "சகலவித அதி மோசமான சிறார் தொழில் முறைமையை அடியோடு இல்லாதொளிப்பதற்கும், அதனைத் தடைசெய்வதற்கும் உடனடியான, காத்திரமான நடவடிக்கைகளை. அவசர விடயமாகக் கருதி, இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்," என இவ்வுடன்படிக்கையானது இலங்கை அரசாங்கத்திற்கு கடப்பாடுகளை வகுத்தது.[134] 182வது உடன்படிக்கையின்படி, அரசாங்கமானது, அதி மோசமான சிறார் தொழில் முறைமையில் சிறார்களை ஈடுபடுத்தும் சூழ்நிலைமைகளைத் தடுத்தல், அவ்வாறான சூழ்நிலைமைகளில் இருந்து சிறார்களை அகற்றுதல், மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை மீள சமூகத்தில் கலக்கச் செய்தல், போன்றவற்றுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.[135] 182வது உடன்படிக்கையுடன் கூடவே முன்வைக்கப்பட்டுள்ளன 190வது பரிந்துரைகளாவன, 18 வயதிற்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கையை கிரிமினல் குற்றச் செயலாக அறிவிக்கும்படி அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது.[136]

---

[132] Ibid.

[133] அதி மோசமான சிறார் தொழில் முறைமையை தடைசெய்வதும் உடனடி நடவடிக்கை எடுப்பதும் தொடர்பான உடன்படிக்கையை ILO உடன்படிக்கை இல . 182 (அதி மோசமான சிறார் தொழில் முறைமை தொடர்பான உடன்படிக்கை), adopted June 17, 1999, 38 I.L.M. 1207 (entered into force November 19, 2000).

[134] Ibid., art.1.

[135] Ibid., arts 6, 7a, 7b.

[136] ILO அதி மோசமான சிறார் தொழில் முறைமையை தடைசெய்வதற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பதற்குமான பரிந்துரைகள், June 17, 1999, ILO No. R190, art. 12.

ILO வின் 182வது உடன்படிக்கையை உறுதி செய்கின்ற விதத்தில், இலங்கை அரசாங்கமானது 2005ம் ஆண்டில் குற்றவியல் சட்டத்தில் (Penal Code) திருத்தத்தை கொண்டுவந்தது. பலாத்காரமாக அல்லது கட்டாய அடிப்படையில் சிறார்களைப் படையில் சேர்ப்பதானது கிரிமினல் குற்றமென்றும் அதற்கு அதிகூடியதாக 20 வருட சிறைத் தண்டனை வழங்கப்படலாம் எனவும் அரசாங்கம் அறிவித்தது.[137]

## சிறார்களை படையில் சேர்த்தல் ஒரு யுத்தக் குற்றம்

15 வயதிற்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்ப்பதும், அவர்களை மோதல்களில் ஈடுபடுத்துவதும், ரோமானிய சாசன சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்படி (ICC), ஓர் யுத்தக் குற்றமாகவே கணிக்கப்படும். தேசிய அரசாங்க அங்கத்தவர்களினாலோ, அரசல்லாத ஆயுதக் குழுக்களின் அங்கத்தவர்களாலோ இவ்வாறான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் படுமானால், அது ஒரு யுத்தக் குற்றமாகவே இச்சட்டத்தின் கீழ் கணிக்கப்பட வேண்டும், என்பது ஒரு சாசனமாக 1998ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.[138]

2007ம் ஆண்டு வரையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இச்சாசனத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற அங்கத்தவராக இலங்கை அரசு இல்லாதிருப்பினும், 15 வயதிற்கு குறைந்த சிறார்களை ஆயுதக் குழுக்களில் சேர்ப்பதற்கு பொறுப்பான தனி நபர்கள் எவரும், நடைமுறையிலுள்ள சர்வதேச சட்டத்தின்படி யுத்தக் குற்றங்களை மேற்கொண்டதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாவர். ஜெனீவா ஒப்பந்தத்தின் மேலதிக சட்டவாக்கம் மற்றும் சிறார்கள் உரிமை தொடர்பான ஒப்பந்தம் போன்றவற்றினால் முன்வைக்கப்பட்ட சர்வதேச தராதரங்களுக்கு இருந்த பரந்துபட்ட வரவேற்பையும் ஏற்றுக் கொள்ளலையும் கண்ணுற்ற சியேரா லியோனின் விசேட நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு சபையானது, 2004ம் ஆண்டு மே மாதத்தில், 15 வயதிற்கு உட்பட்டவர்களை படைகளில் சேர்த்துக்கொள்ளுவதை தடை செய்கின்ற 1996க்கு முன்னைய சட்டத்தை, வழமையான சர்வதேச சட்டமரபாக ஆக்கும்படி தீர்ப்பளித்தது.

15 வயதிற்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதற்கு பொறுப்பாக இருக்கும் தனிநபர்கள், தமது இந்த நடவடிக்கைகளுக்கு கிரிமினல் குற்றங்களை புரிந்தவர்களாக பொறுப்பேற்க வேண்டியவர்கள், எனவும் சியேரா லியோனின் விசேட நீதிமன்றம் மேலும் அறிவித்தது:

> சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கைகளாவன, சிறார்கள் மீது மிகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அடிப்படை உத்தரவாதங்கள் மிக மோசமாக மீறப்படுவதானது, அதில் ஈடுபடும் தனிநபரையும் அக்கிரிமினல் குற்றத்திற்குப் பொறுப்பாக்குகிறது. சிறார்களை படைகளில் சேர்ப்பதானது ஏற்கனவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான 1998ம் ஆண்டு உரோமானிய சாசனத்தின்படி கிரிமினல் குற்றமாகிறது. சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள சட்ட மரபியல் விழுமியங்களை (existing customary norm) உறுதிசெய்து இணைத்திருக்கும் இச்சட்டமானது, புதியதொரு சட்டத்தின் தேவையை அவசியமற்றதாக்குகின்றது.[139]

---

137 இலங்கை குற்றவியல் சட்டம், பிரிவு 358 A, 2005ல் திருத்தப்பட்டது.

138 சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோமானிய சாசனம், U.N. Doc. A/CONF.183/9, July 17, 1998, entered into force July 1, 2002, arts. 8(2)(b)(xxvi) and 8(2)(e)(vii).

139 Summary of Decision on Preliminary Motion on Lack of Jurisdiction (Child Recruitment), Prosecutor v. Sam Hinga Norman, Appeals Chamber of the Special Court for Sierra Leone, May 31, 2004, Case Number SCSL-2003-14-AR72 (E).

புலிகள் இயக்கம் மற்றும் கருணா குழு ஆகிய இரு தரப்பினரும் தமது படையணிகளில் சிறார்களைச் சேர்த்துக் கொண்டுள்ளனர். UNICEF அமைப்பிற்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் சிறார்களின் வயதெல்லைகளாவன, புலிகள் இயக்கத்தால் சேர்க்கப்பட்டுள்ள சிறார்களில் 17 வீதமானோர் (1,012 பேர்) 15வயதிற்கு குறைந்தவர்களாவர். கருணா குழுவினரால் சேர்க்கப்பட்டுள்ள சிறார்களில் 5வீதமானோர் (10 பேர்) 15வயதிற்கு குறைந்தவர்களாவர்.[140]

## கடத்தல்களும் பலவந்த ஆள் சேர்ப்பும்

மோதல்களில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களால், நபர்கள் பலவந்தமாக கடத்தப்படுதல், பாலத்காரமாக படைகளில் சேர்க்கப்படுதல் உட்பட, ஒரு நபரின் சுதந்திரமான செயற்பாட்டை மறுதலிக்கின்ற வகையில் எதேச்சதிகாரமாக செயற்படுதலை சர்வதேச மனிதாபிமான சட்டமானது தடைசெய்கின்றது. உள்நாட்டு ஆயுத மோதல் (non-international armed conflicts) நிலைமைகளுக்கு பொருந்துகின்றதும், 1949ம் ஆண்டில் நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளுக்கு பொதுவானதுமான 3வது சட்டவாக்கமானது, சகல சிவில் மக்களும் சமனாக நடத்தப்பட வேண்டும் எனக் கோருவதனால் - எதேச்சதிகாரமாக சுத்திரத்திற்கு தடைபோடுதல் என்பது எவ்வகையிலும் செயற்படுத்தப்பட முடியாததாகும்.[141]

## இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டங்கள்

இலங்கை அரசாங்கமானது 'பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை தடுத்தலும் நிறுத்துதலும்,' என்னும் தமது புதிய அவசரகாலச் சட்டவிதிகளை, 2006, டிசம்பர் 6ல் அமுலுக்கு கொண்டு வந்தது. எந்தவொரு நபரும், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களுடன் தொடர்பு வைப்பது, மற்றும் அவ்வகையான நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பவற்றை அச்சட்டமானது தடை செய்கிறது.[142] அத் தடைச்சட்டமானது, சிறார்கள் உட்பட சகல நபர்களையும் உள்ளடக்குவதோடு, பலாத்காரமாக சேர்க்கப்படுதல், கடத்தப்பட்டு சேர்க்கப்படுதல் அல்லது அச்சம் காரணமாக சேருதல் என்பதற்கும் அவ்வாறான குழுக்களில் சுயவிருப்பில் போய்ச் சேருவது என்பதற்கும் இடையே எந்தவிதமான வேறுபாடுகளையும் விதிக்கவில்லை. இதன் காரணமாக, கருணா குழுவினராலும் புலிகள் இயக்கத்தினாலும் பலவந்தமாக சேர்க்கப்படும் சிறார்களும்கூட இச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்படலாம். அத்துடன் குற்றம் நிரூபிக்கப்பட்டால், பத்து வருட சிறைத் தண்டனை தீர்ப்பளிக்கப்படலாம்.[143]

குறிப்பாக, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழுக்களால் சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதை தடைசெய்வது பற்றி, இத்தடைச்சட்டமானது எதனையும் குறிப்பிடவில்லை.

---

[140] UNICEFஇனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு வழங்கப்பட்ட புள்ளி விபரங்கள், 2007, ஜனவரி 12.
[141] பார்க்க 1949 ஜெனிவா உடன்படிக்கை, சரத்து 3; see also சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), சர்வதேச மனிதாபிமானச் சட்டமரபு (Cambridge Univ. Press, 2005), see rule 99 and accompanying text.
[142] அவசரகாலச் சட்டம் (பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை தடுத்தலும் நிறுத்துதலும் அவசரகாலச் சட்டம்) 2006. சட்ட இல.7, 2006 டிசம்பர் 6ம் திகதி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது, சட்ட இல. 2, 3.
[143] Ibid., சட்ட இல. 7

# நன்றிகள்

2006 ஒக்டோபரில், அவசர நிலைமைகள் ஆய்வாளர் Fred Abrahams, அவசர நிலைமைகள் ஆலோசகர் Oliver Bercault, ஆசியப் பிரிவிற்கான ஆலோசகர் Andrew Kendle ஆகியோர், நான்கு வார காலமாக இலங்கையில் மேற்கொண்ட தகவல் சேகரிப்பு ஆய்வுப் பணியின் அடிப்படையிலேயே இவ்வறிக்கையானது தயாரிக்கப்பட்டது. Fred Abrahams இவ்வறிக்கையை, சிறார்கள் உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் Jo becker அவர்களுடன் சேர்ந்து எழுத்தாக்கம் செய்தார்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் வேலைத்திட்டப் பிரிவின் ஆலோசகர் Ian Gorvin, ஆசிய பிரிவுக்கான நிறைவேற்றதிகார பணிப்பாளர் Brad Adams, மற்றும் சட்ட ஆலோசகர் James Ross ஆகியோர் இவ்வறிக்கையை நெறியாக்கம் செய்தனர். ஆசியப் பிரிவின் இணையாளர் Dominique Chambless, இவ்வறிக்கையை ஒழுங்கமைப்பதற்கு உதவினார். இவ்வறிக்கைக்கான தயாரிப்பு உதவி, Fitzroy Hepkins, Andrea Holley, Grace Choi ஆகியோரால் வழங்கப்படடது.

இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியமைக்காக Cordaidக்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நன்றி தெரிவிக்கின்றது.

இவ்வறிக்கைக்காக பாரிய அளவில் உதவிகளைச் செய்த, இலங்கையில் இருக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தன் நன்றிகளைத் தெரிவிக்கின்றது. இலங்கையில் நிவாரண அமைப்புக்களுடன் பணியாற்றும் பல நபர்களும் மிகப் பெறுமதிமிக்க தகவல் வள மூலங்களாக இருப்பதும் நிரூபணமாகியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கையில் கடத்தலுக்கு உள்ளான சிறார்களின் பெற்றோர்கள், மிகவும் ஆபத்தான நிலைமையின் கீழும், தமது நேரத்தை ஒதுக்கி தம் அவலமான நிலைமை தொடர்பான தகவல்களை வழங்கியமைக்காக, அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுகின்றன. அவர்களின் சிறார்கள் மிக விரைவில் தம் வீடுகளுக்கு திரும்பி வர வேண்டும் என்ற அவர்களின் நம்பிக்கைக்கு இவ்வறிக்கையானது சமர்ப்பணமாகின்றது.

HUMAN RIGHTS WATCH
350 Fifth Avenue, 34th Floor
New York, NY 10118-3299
Tel: 212-290-4700
Fax: 212-736-1300
Email: hrwnyc@hrw.org

HUMAN RIGHTS WATCH

www.hrw.org

Kenneth Roth, Executive Director
Michele Alexander, Development & Outreach Director
Carroll Bogert, Associate Director
Barbara Guglielmo, Finance & Administration Director
Peggy Hicks, Global Advocacy Director
Iain Levine, Program Director
Dinah PoKempner, General Counsel
James Ross, Senior Legal Advisor
Joe Saunders, Deputy Program Director
Wilder Tayler, Legal and Policy Director

Program Directors
Brad Adams, Asia
Holly Cartner, Europe & Central Asia
Peter Takirambudde, Africa
José Miguel Vivanco, Americas
Sarah Leah Whitson, Middle East & North Africa
Jamie Fellner, United States
Joseph Amon, HIV/AIDS
Peter Bouckaert, Emergencies
Bruni Burres, International Film Festival
Richard Dicker, International Justice
Bill Frelick, Refugee Policy
Arvind Ganesan, Business & Human Rights
Steve Goose, Arms
LaShawn R. Jefferson, Women's Rights
Scott Long, Lesbian, Gay, Bisexual & Transgender Rights
Joanne Mariner, Terrorism & Counterterrorism
Lois Whitman, Children's Rights

Advocacy Directors
Steve Crawshaw, United Nations
Mariette Grange, Geneva
Marianne Heuwagen, Berlin
Lotte Leicht, European Union
Tom Malinowski, Washington DC
Tom Porteous, London

Board of Directors
Jane Olson, Chair
Bruce J. Klatsky, Vice-Chair
Sid Sheinberg, Vice-Chair
John J. Studzinski, Vice-Chair
Omar Amanat
Lloyd Axworthy
David M. Brown
Jorge Castañeda
Tony Elliott
Michael G. Fisch
Michael E. Gellert
Richard J. Goldstone
Vartan Gregorian
James F. Hoge, Jr.
Wendy Keys
Robert Kissane
Joanne Leedom-Ackerman
Josh Mailman
Susan Manilow
Kati Marton
Linda Mason
Barry Meyer
Pat Mitchell
Joel Motley
Samuel K. Murumba
Catherine Powell
Sigrid Rausing
Victoria Riskin
Kevin P. Ryan
Darian W. Swig
John R. Taylor
Shibley Telhami

Robert L. Bernstein, Founding Chair, (1979-1997)
Jonathan F. Fanton, Chair (1998-2003)
Bruce Rabb, Secretary

# பின்னிணைப்பு I. ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு அனுப்பிய கடிதம். 2006, நவம்பர் 21

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ
ஜனாதிபதி செயலகம்
கொழும்பு ஸ்ரீ லங்கா 01
*இல. 94 11 2331246ற்கு தொலைமடல் (facsimile) மூலம் அனுப்பப்பட்டது*

மேதகு ஜனாதிபதி அவர்கட்கு,

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் சிறார்கள் கடத்தப்படும் நிலைமை தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் இதை நான் எழுதுகிறேன். நீங்கள் நன்றாகவே அறிந்துள்ளபடி, சிறார்களை பலவந்தமாக பிடித்து ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தும் செயற்பாட்டில் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருப்பதும் - சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தையும் மனித உரிமைச் சட்டத்தையும் மோசமாக மீறுகின்ற இத்தகைய செயற்பாட்டை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் கண்டித்து வந்துள்ளது. ஆனால், சிறார்களை கடத்தி ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினரும் உடந்தையாக செயற்படுவதாக மிகவும் மனதைச் சஞ்சலப் படுத்துகின்ற ஆதாரங்கள், அண்மையில் எமக்கு கிடைத்துள்ளன.

அரசாங்க பாதுகாப்புப் படையினரின் சில பிரிவினர்கள் கருணா குழுவினருக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கி வருவதாக, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பாக, செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின், விசேட ஆலோசகரான, தூதுவர் அலன் ரொக் அவர்கள் கடந்த வாரம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். UNICEF அமைப்பின் அறிக்கையின்படி, அக்குழுவானது 2006 ஜூன் மாதத்தில் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 150க்கு மேற்பட்ட சிறார்களை கடத்திச் சென்றுள்ளது. ஏனைய பல கடத்தல்கள், அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன. அரசாங்கமானது இக்கடத்தல்களை பொறுமையாக பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும், இவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள தவறியிருக்கிறது என்றும், சிலவேளைகளில் அதில் நேரடியாக பங்கேற்கிறது என்றும், தூதுவர் ரொக் அவர்கள் கூறுகிறார்.

திரு. ஜனாதிபதியவர்களே, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சுதந்திரமாக மேற்கொண்ட தகவல் திரட்டும் ஆய்வுகளும், தூதுவர் ரொக்கினுடைய தகவல்களை உறுதிப்படுத்துகின்றன. கடந்த மாதம் நாம் கிழக்கு மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வின் மூலம், கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் மற்றும் அதில் அரசாங்க பாதுகாப்பு படையினருக்கு இருக்கும் பங்கு தொடர்பான விபரங்கள் உட்பட, ஆட்சேபத்திற்கிடமற்ற ஆதாரங்களை நாம் திரட்டியுள்ளோம். சில சம்பவங்களின்போது, கருணா குழு அங்கத்தவர்கள் வந்து சிறார்களை கொண்டு செல்வதற்கு முன்னர், சிறார்களையும் இளைஞர்களையும் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அவர்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். கடத்தப்பட்ட தமது பிள்ளைகள் கருணா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அப்பெற்றோர்கள் தொடர்சியாக கண்டுள்ளனர். அது மட்டுமன்றி, கடத்தப்பட்ட சிறார்களை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து, இராணுவ மற்றும் பொலீசாரின் பல சோதனைச் சாவடிகளைக் கடக்காமல் வெலிகந்தையை சூழவுள்ள பகுதிக்கு வாகனங்கள் மூலம் கொண்டு செல்ல முடியாது. பொலீசாரினால் காவல் காக்கப்படும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள TMVP காரியாலயங்களிலும் கடத்தப்பட்ட தமது பிள்ளைகள் இருப்பதை ஏனைய பெற்றோர்கள் கண்டுள்ளனர்.

எமது பயணத்தின்போது திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது அறிக்கையொன்றை வெளியிடவுள்ளது. தூதுவர் அலன் ரொக்கினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும்படி நீங்கள் உத்தரவிட்டுள்ளமை தொடர்பாக நாம் மகிழ்சியடைகிறோம்.. அச்சாதகமான நடவடிக்கை தொடர்பாக நாம் எமது அறிக்கையில் குறிப்பிடுவதோடு, கருணா குழு, இராணுவம், பொலீசார் உட்பட, சட்டத்தை மீறய சகலரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கம் முன்முயற்சிகள் எடுத்திருப்பின், அவை தொடர்பாகவும் எமது அறிக்கையில் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றோம்.


இதற்கு உங்கள் தரப்பிலிருந்து வழங்கும் ஒத்தாசையாக, கடத்தல் நடவடிக்கையில் கருணா குழுவினரதும் அரசாங்கத்தினதும் பங்கு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்டுள்ள விசாரணைப் பிரிவு தொடர்பாக ஏதாவது தகவல்கள் இருப்பின் அவற்றை எமக்குத் தருமாறு, உங்கள் செயலகத்திற்கு பணிப்புரை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அவ்விசாரணைப் பிரிவானது யாரால் தலைமை தாங்கப்படுகிறது, அவ்விசாரணைப் பிரிவு வகை சொல்வது யாருக்கு, அது எவ்வாறு தனது விசாரணைகளை மேற்கொள்ளப் போகின்றது? மேற்சொன்னவை தொடர்பாக யாராவது கைது செய்யப்பட்டு நீதி விசாரணை நடைபெறுகிறதா? மற்றும் கடத்தல்கள் நிறுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், ஏற்கனவே கடத்தப்பட்ட சிறார்கள் பாதுகாப்பாக தம் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஏனைய நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும் அறிய நாம் மிக ஆவலாக உள்ளோம்.

திரு. ஜனாதிபதியவர்களே, இலங்கையில் மீண்டும் பாரிய அளவிலான ஆயுத மோதல்கள் ஆரம்பித்திருப்பதையிட்டு நாம் ஆழ்ந்த கவலை கொள்கிறோம். இந்நிலைமையால் தவிர்க்க முடியாமல் சிவில் மக்களே பாதிப்புக்குள்ளாக போகின்றனர். ஆனால், ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் குறைக்கப்படலாம் என நாம் நம்புவதோடு, மிக மோசமான அத்துமீறல்களுக்கு உள்ளாகக்கூடிய நிலைமையில் உள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் குறைக்கப்படலாம் என நம்புகிறோம்.

அது தொடர்பாக நீங்கள் எடுக்கும் எந்தவிதமான நடவடிக்கைகள் தொடர்பாகவும் டிசம்பர் 4ம் திகதிக்கு முன்னர் எமக்கு வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும், மிகத் தெளிவாக இந்த அறிக்கையில் பிரதிபலிக்கப்படும் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

உண்மையுள்ள

Brad Adams



பிரதி: மகிந்த சமரசிங்ஹ, பேரழிவுகள் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர்.

HUMAN RIGHTS WATCH
350 Fifth Avenue, 34th Floor
New York, NY 10118-3299
Tel: 212-290-4700
Fax: 212-736-1300
Email: hrwnyc@hrw.org

Kenneth Roth, Executive Director
Michele Alexander, Development & Outreach Director
Carroll Bogert, Associate Director
Barbara Guglielmo, Finance & Administration Director
Peggy Hicks, Global Advocacy Director
Iain Levine, Program Director
Dinah PoKempner, General Counsel
James Ross, Senior Legal Advisor
Joe Saunders, Deputy Program Director
Wilder Tayler, Legal and Policy Director

Program Directors
Brad Adams, Asia
Holly Cartner, Europe & Central Asia
Peter Takirambudde, Africa
José Miguel Vivanco, Americas
Sarah Leah Whitson, Middle East & North Africa
Jamie Fellner, United States
Joseph Amon, HIV/AIDS
Peter Bouckaert, Emergencies
Bruni Burres, International Film Festival
Richard Dicker, International Justice
Bill Frelick, Refugee Policy
Arvind Ganesan, Business & Human Rights
Steve Goose, Arms
LaShawn R. Jefferson, Women's Rights
Scott Long, Lesbian, Gay, Bisexual & Transgender Rights
Joanne Mariner, Terrorism & Counterterrorism
Lois Whitman, Children's Rights

Advocacy Directors
Steve Crawshaw, United Nations
Mariette Grange, Geneva
Marianne Heuwagen, Berlin
Lotte Leicht, European Union
Tom Malinowski, Washington DC
Tom Porteous, London

Board of Directors
Jane Olson, Chair
Bruce J. Klatsky, Vice-Chair
Sid Sheinberg, Vice-Chair
John J. Studzinski, Vice-Chair
Omar Amanat
Lloyd Axworthy
David M. Brown
Jorge Castañeda
Tony Elliott
Michael G. Fisch
Michael E. Gellert
Richard J. Goldstone
Vartan Gregorian
James F. Hoge, Jr.
Wendy Keys
Robert Kissane
Joanne Leedom-Ackerman
Josh Mailman
Susan Manilow
Kati Marton
Linda Mason
Barry Meyer
Pat Mitchell
Joel Motley
Samuel K. Murumba
Catherine Powell
Sigrid Rausing
Victoria Riskin
Kevin P. Ryan
Darian W. Swig
John R. Taylor
Shibley Telhami

Robert L. Bernstein, Founding Chair, (1979-1997)
Jonathan F. Fanton, Chair (1998-2003)
Bruce Rabb, Secretary

HUMAN RIGHTS WATCH

www.hrw.org

# பின்னிணைப்பு II. TMVPக்கு அனுப்பப்பட்ட கடிதம்

2006, நவம்பர் 22

வி.முரளீதரன்
தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள்

அன்புடன் திரு. முரளீதரன்,

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் சிறார்கள் கடத்தப்படும் நிலைமைகள் தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் இதை நான் எழுதுகிறேன். நீங்கள் நன்றாவே அறிந்திருக்கின்றபடி, சிறார்கள் பலவந்தமாக பிடிக்கப்பட்டு ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தும் செயற்பாட்டில் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருப்பதும் - சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தையும் மனித உரிமைச் சட்டத்தையும் மோசமாக மீறுகின்ற இத்தகைய செயற்பாட்டை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் கண்டித்து வந்துள்ளது. ஆனால், அதே விதமான நடவடிக்கைகளில் உமது ஆணையின் கீழ் உள்ள படையினரும் ஈடுபடுவதாக மிகவும் மனதைச் சஞ்சலப் படுத்துகின்ற ஆதாரங்கள் அண்மையில் எமக்கு கிடைத்துள்ளன.

கிழக்குப் பகுதியில் கருணா குழுவினர் தொடர்சியாக சிறார்களைக் கடத்துவதாக, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பாக செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின், விசேட ஆலோசகரான, தூதுவர் அலன் ரொக் அவர்கள் கடந்த வாரம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். UNICEF அமைப்பின் அறிக்கையின்படி, அக்குழுவானது 2006 ஜுன் மாதத்தில் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 150க்கு மேற்பட்ட சிறார்களை கடத்திச் சென்றுள்ளது. ஏனைய பல கடத்தல்கள், அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன. அரசாங்கமானது இக்கடத்தல்களுக்கு உடந்தையாக இருப்பதோடு சிலவேளைகளில் அதில் நேரடியாக பங்கேற்கிறது என்றும், தூதுவர் ரொக் மேலும் கூறியிருக்கிறார்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது சுதந்திரமாக மேற்கொண்ட தகவல் ஆய்வுகளும், தூதுவர் ரொக்கினுடைய




BERLIN · BRUSSELS · CHICAGO · GENEVA · LONDON · LOS ANGELES · MOSCOW · NEW YORK · SAN

தகவல்களை உறுதிப்படுத்துகின்றன. கடந்த மாதம் நாம் கிழக்கு மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வின் மூலம், கருணா குழுவினரினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் தொடர்பாகவும், அதற்கு அரசாங்க பாதுகாப்பு படையினர் உடந்தையாக இருந்தமை, மற்றும் சில வேளைகளில் அதில் பங்குபற்றியுள்ளமை தொடர்பான விபரங்கள் உட்பட, ஆட்சேபத்திற்கிடமற்ற ஆதாரங்களைத் திரட்டியுள்ளோம். சில சம்பவங்களின்போது, கருணா குழு அங்கத்தவர்கள் அங்கு வந்து சிறார்களை கொண்டு செல்வதற்கு முன்னர், சிறார்களையும் இளைஞர்களையும் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அவர்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். கடத்தப்பட்ட தமது பிள்ளைகள் வெலிகந்தையைச் சூழவுள்ள கருணா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அப்பெற்றோர்கள் தொடர்சியாகவே கண்டுள்ளனர். அதுமட்டுமன்றி, பொலீசாரினால் காவல் காக்கப்படும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள TMVP காரியாலயங்களிலும் தமது கடத்தப்பட்ட பிள்ளைகள் இருப்பதை ஏனைய பெற்றோர்கள் கண்டுள்ளனர்.

எமது பயணத்தின் போது திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது அறிக்கையொன்றை வெளியிடவுள்ளது. அதேவேளை, மேலே வைக்கப்பட்டுள்ள விடயங்கள் உட்பட, இது தொடர்பான உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அதிலும் குறிப்பாக, உங்கள் படையணிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை தொடர்பாகவும், புதிய நபர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது பலாத்காரத்தைப் பாவிப்பது தொடர்பாகவும், ஆயுத மோதல்களில் பங்கேற்பதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை தொடர்பாகவும் உங்களிடம் கோட்பாடுகள் ஏதாவது இருக்கின்றனவா? அதற்கு மேலதிகமாக, உமது ஆயுதக் குழுவில் உள்ள நபர்கள் கடத்தல்களில் ஈடுபடும்பொழுது, உரிய சட்டத் துறையினருக்கு அறியத்தருகிறீரா, அல்லது அவர்களுக்கு நீரே தண்டனை வழங்குகிறீரா? அப்படியானால், குறிப்பிட்ட கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட ஒழுக்க நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இறுதியாக, கடத்தல்கள் நிறுத்தப்படுவதற்கும் ஏற்கனவே கடத்தப்பட்ட சிறார்கள் பாதுகாப்பாக தமது குடும்பங்களிடம் மீளச் செல்வதற்கும் எவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

மேலே கூறப்பட்டவை தொடர்பாக உங்கள் பிரதிபலிப்புகள் டிசம்பர் மாதம் 4ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கப் பெற்றால், எமது அறிக்கை தயாரிக்கப்படும்போது அவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதுடன், அவை தொடர்பாக எங்கள் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் ஏனைய மனித உரிமை விடயங்கள் தொடர்பாகவும் உங்களோடு தொடர்ச்சியாக பேசுவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதையும் அறியத் தருகிறோம். இலங்கையில் நீண்ட காலமாக ஆயுத மோதல்கள் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், அங்கு சாதாரண சிவில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை இயன்றளவு குறைப்பதற்கு உதவக்கூடியதான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம் என்பதை கூறவிரும்புகிறோம்.

உண்மையுள்ள



Brad Adams
ஆசியப் பிரிவுப் பணிப்பாளர்
மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

HUMAN RIGHTS WATCH
350 Fifth Avenue, 34th Floor
New York, NY 10118-3299
Tel: 212-290-4700
Fax: 212-736-1300
Email: hrwnyc@hrw.org

Kenneth Roth, Executive Director
Michele Alexander, Development & Outreach Director
Carroll Bogert, Associate Director
Barbara Guglielmo, Finance & Administration Director
Peggy Hicks, Global Advocacy Director
Iain Levine, Program Director
Dinah PoKempner, General Counsel
James Ross, Senior Legal Advisor
Joe Saunders, Deputy Program Director
Wilder Tayler, Legal and Policy Director

Program Directors
Brad Adams, Asia
Holly Cartner, Europe & Central Asia
Peter Takirambudde, Africa
José Miguel Vivanco, Americas
Sarah Leah Whitson, Middle East & North Africa
Jamie Fellner, United States
Joseph Amon, HIV/AIDS
Peter Bouckaert, Emergencies
Bruni Burres, International Film Festival
Richard Dicker, International Justice
Bill Frelick, Refugee Policy
Arvind Ganesan, Business & Human Rights
Steve Goose, Arms
LaShawn R. Jefferson, Women's Rights
Scott Long, Lesbian, Gay, Bisexual & Transgender Rights
Joanne Mariner, Terrorism & Counterterrorism
Lois Whitman, Children's Rights

Advocacy Directors
Steve Crawshaw, United Nations
Mariette Grange, Geneva
Marianne Heuwagen, Berlin
Lotte Leicht, European Union
Tom Malinowski, Washington DC
Tom Porteous, London

Board of Directors
Jane Olson, Chair
Bruce J. Klatsky, Vice-Chair
Sid Sheinberg, Vice-Chair
John J. Studzinski, Vice-Chair
Omar Amanat
Lloyd Axworthy
David M. Brown
Jorge Castañeda
Tony Elliott
Michael G. Fisch
Michael E. Gellert
Richard J. Goldstone
Vartan Gregorian
James F. Hoge, Jr.
Wendy Keys
Robert Kissane
Joanne Leedom-Ackerman
Josh Mailman
Susan Manilow
Kati Marton
Linda Mason
Barry Meyer
Pat Mitchell
Joel Motley
Samuel K. Murumba
Catherine Powell
Sigrid Rausing
Victoria Riskin
Kevin P. Ryan
Darian W. Swig
John R. Taylor
Shibley Telhami

Robert L. Bernstein, Founding Chair, (1979-1997)
Jonathan F. Fanton, Chair (1998-2003)
Bruce Rabb, Secretary

HUMAN RIGHTS WATCH

www.hrw.org

# பின்னிணைப்பு III. புலிகள் இயக்கத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம்

2006, நவம்பர் 28

சு.ப. தமிழ்செல்வன்
பொதுச் செயலாளர்
புலிகள் இயக்க அரசியல் பிரிவு
கிளிநொச்சி
ஸ்ரீ லங்கா
*இல. 94 21 2283959ற்கு தொலைமடல் (facsimile) மூலம் அனுப்பப்பட்டது*

அன்புடன் திரு, தமிழ்செல்வன்,

இலங்கையில் ஆயுதக் குழுக்களால் சிறார்கள் கடத்தப்படும் நிலைமைகள் தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் இதை நான் எழுதுகிறேன். கருணா குழுவினர் சிறார்கள் மற்றும் இளைஞர்களை கடத்துவது தொடர்பாகவும் அதற்கு இலங்கை இராணுவத்தினரும் பொலீசாரும் உடந்தையாக இருப்பது தொடர்பாகவும் நாம் விமர்சித்திருந்தோம். சிறார்கள் பலவந்தமாக பிடிக்கப்பட்டு ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தப்படுவது நீண்டகாலமாக கவனத்தில் எடுக்கப்பட்ட பிரைச்சினையாக இருக்கின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தையும் மனித உரிமைச் சட்டத்தையும் மோசமாக மீறுகின்ற இத்தகைய செயற்பாட்டை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் கண்டித்து வந்துள்ளது.

இலங்கையில் சிறார்கள் கடத்தப்பட்டு ஆயுதக் குழுக்களால் பாவிக்கப்படுவது தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது கடந்த மாதத்தில் சுதந்திரமாக தகவல் சேகரிப்பு ஆய்வொன்றை மேற்கொண்டது. எமது பயணத்தின் போது திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நாம் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளோம். அவ்வறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர், நாம் உங்கள் கருத்துக்களை அறிய ஆவலாய் உள்ளோம். விசேடமாக, புலிகள் இயக்கத்தின் சமாதான செயலகத்தினால் 2006 ஆகஸ்ட்டில்




BERLIN · BRUSSELS · CHICAGO · GENEVA · LONDON · LOS ANGELES · MOSCOW · NEW YORK · SAN

வெளியிடப்பட்ட, “இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் ஆயுத மோதல்களில் சிறார்கள்,” என்னும் அறிக்கைக்குப் பின்னர் புலிகள் இயக்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அறிய விரும்புகிறோம். அத்திகதியில் இருந்து எத்தனை சிறார்கள் புலிகள் இயக்கத்தால் விடுதலை செய்யப்பட்டு தமது குடும்பங்களிடம் திரும்பிப் போயுள்ளனர்? புலிகள் இயக்கத்திற்கு சிறார்களை பலவந்தமாக சேர்க்கும், புலிகள் இயக்க அங்கத்தவர்களுக்கு எதிராக என்ன விதமான ஒழுக்க நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மேலே கூறப்பட்டவை தொடர்பாக உங்கள் பிரதிபலிப்புகள் டிசம்பர் மாதம் 4ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கப் பெற்றால், எமது அறிக்கை தயாரிக்கப்படும்போது அவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதுடன், அவை தொடர்பாக எமது நன்றிகளையும் தெரிவிக்கிறோம். இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் ஏனைய மனித உரிமை விடயங்கள் தொடர்பாகவும் உங்களோடு தொடர்ச்சியாக பேசுவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதையும் அறியத் தருகிறோம். இலங்கையில் நீண்ட காலமாக ஆயுத மோதல்கள் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், அங்கு சாதாரண சிவில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை இயன்றளவு குறைப்பதற்கு உதவக்கூடியதான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம் என்பதை கூறவிரும்புகிறோம்.

உண்மையுள்ள



Brad Adams
ஆசியப் பிரிவுப் பணிப்பாளர்
மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

## பின்னிணைப்பு IV. தமிழ்செல்வனிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

05.12.2006

Mr Brad Adams
Asia DivisionDirector
Human Rights watch
350 Fifth Avenue, 34th Floor
New York, NY 10118-32909

அன்புடன் திரு. பிரட் அடம்ஸ்,

இலங்கைத் தீவில் வயது குறைந்த நபர்கள், ஆயுதக் குழுக்களால் படைகளில் சேர்க்கப்படுவது பற்றிய விடயம் தொடர்பாக 2006. நவம்பர் 28ம் திகதி நீங்கள் அனுப்பிய கடிதத்திற்கு நன்றி. வயது குறைந்த நபர்கள் எமது இயக்கத்தில் சேராமல் இருப்பதற்காக நாம் எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பாக அறியத்தருவதற்காக இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதில் நான் மகிழ்சி அடைகிறேன்.

அண்மையில் நாம் அறிவித்துள்ள சிறார் பாதுகாப்பு சட்டமானது, 2007, ஜனவரி 7ம் திகதி அமுலுக்கு வரவுள்ளது. அப்புதிய சட்டத்தை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்பதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சிறார் பாதுகாப்பு அதிகார சபையானது அப்புதிய சட்டத்தை உங்களுக்கு தமிழ் மொழியில் விரைவில் அனுப்பிவைக்கும்.

இச்சட்டம் அமுல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்காக நாம் சிறார் பாதுகாப்பு அதிகார சபையை பலப்படுத்தியுள்ளோம். சிறார் பாதுகாப்பு அதிகார சபையின் நிபந்தனை விளக்கங்கள் (Terms of Reference) இணைக்கப்பட்டுள்ளது.

வயது குறைந்தோர் படையில் சேர்க்கப்படுவதை இல்லாதொளிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள டிசம்பர் மாத சிறார் பாதுகாப்பு அதிகாரசபையின் அறிக்கையை வாசிக்கவும்.

தற்போது மோசமாக சீரழிந்து கொண்டிருக்கும் நிலைமையின் கீழ் சிறார்களின் பாதுகாப்பிற்காக நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு, சிறார்களின் உரிமைகள் தொடர்பாக கவனத்தில் எடுப்பதற்கு, இங்கு செயற்படும் சர்வதேச அமைப்புக்களின் உதவிகளையும் நாம் நாடியுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக. மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகள் தொடர்பாக கற்கை செய்வதற்காக தமிழர் தாயகப் பிரதேசத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கின்றேன். தமிழர் தாயகத்தில் மனித உரிமைகள் மற்றும் சிறார் உரிமைகள் தொடர்பாக உங்களோடு நேரடியாக கலந்துரையாடல்களை நடத்த விரும்புகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழர் தாயகத்தில் மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகள் பற்றி தொடர்ச்சியான உங்கள் அக்கறைக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள



சு.ப.தமிழ்செல்வன்
அரசியல் பிரிவுத் தலைவர்

HUMAN RIGHTS WATCH
350 Fifth Avenue, 34th Floor
New York, NY 10118-3299

**www.hrw.org**

HUMAN RIGHTS WATCH

# இலங்கை

## குற்றச் செயலுக்கு உடந்தை கடத்தல்களில் பங்காளியாக அரசு மற்றும் சிறார்களை படையில் சேர்க்கும் கருணா குழு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடத்தப்பட்ட தனது மகனின் புகைப்படத்தை கையில் வைத்திருக்கும் ஒரு தாய்.

*© 2006 Fred Abrahams/Human Rights Watch*

